www.padippakam.com

மே — 2000
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00

# புதிய கலாச்சாரம்

★ போலி மோதலில் இராணுவத்தால் கொன்று புதைக்கப்பட்ட 5 காஷ்மீர் மக்களின் பிணம் தோண்டி எடுக்கப்படுகிறது.



## காஷ்மீர் இராணுவ முகாம் - மண்டபம் அகதி முகா

ஏப்ரல் – 3: இந்தியாவின் அடிமையாக வாழும் அவமானத்தை எதிர்த்த
காஷ்மீரிகள் இராணுவத்தால் கொல்லப்பட்டார்கள்.

ஏப்ரல் –7 : இந்தியாவில் அகதியாக வாழும் அவமானத்தை வெறுத்த 4 ஈ
தமிழர்கள் தற்கொலை செய்து கொண்டார்கள்.

காஷ்மீரில் இராணுவ முகாம். மண்டபத்தில் அகதி முகாம். இடை

படிப்பகம்

www.padippakam.com

## நூல் அறிமுகம்:
# இவர்தான் நாராயணகுரு

கேரளத்தைச் சேர்ந்த ஜோசப் இடமருகு, பகுத்தறிவாளர். அவர் எழுதி வெளியிட்ட "இவர்தான் நாராயண குரு" என்ற நூல் தமிழில் இப்போது வெளிவந்திருக்கிறது.

சாதிகள் ஒழிய வேண்டும், மதப் பூசல்கள் ஒழிய வேண்டும் என்று விரும்பியவர் நாராயண குரு. அவர் மக்களிடம் ஈட்டிய செல்வாக்கைப் பயன்படுத்திக் கொள்வதற்காக கேரளாவில் இன்று ஆர்.எஸ்.எஸ். திட்டங்களைத் தீட்டிச் சதிகளைத் தொடங்கியுள்ளது. அவரது காலத்துக்குப் பிறகு அவர் பெயரில் தொடங்கப்பட்ட அறக்கட்டளைகளுக்குப் பின்னால் திரண்டுள்ள சொத்துக்களும் ஆர்.எஸ்.எஸ். கண்களை அரிக்கின்றன.

தனது ஆரம்ப வாழ்க்கையில் கோவில்கள் நிறுவினார் என்ற காரணத்துக்காக அத்வைத இந்து மதத்துக்கு வாழ்வு கொடுத்தவர் நாராயண குரு என்று ஒரு உருவத்தை மக்கள் முன் வைக்கிறது ஆர்.எஸ்.எஸ். "எனக்குப் பின்னால் நினைவகம் கூட எழுப்ப வேண்டாம். ஒரே ஒரு புன்னை மரம் நடுங்கள், அதுதான் மக்களுக்கு நிழல் தரும்; புன்னைக் கொட்டை விளக்கு எரிக்க எண்ணெய் தரும்" என்று சொன்னவரையே ஒரு தெய்வமாக மாற்றிவிட ஆர்.எஸ்.எஸ். சதி செய்கிறது. கடவுள் இல்லை என்று சொன்ன புத்தரையே விஷ்ணுவின் அவதாரமாக மாற்றிய எத்தர்களுக்கு நாராயண குரு பற்றிக் கயிறு திரிக்க எவ்வளவு நேரமாகும்?

இன்றைய கட்டத்தில் ஆர்.எஸ்.எஸ். இந்துமத வெறியர்களுக்கு எதிராகப் போராட நாராயண குரு போன்ற சீர்திருத்தவாதிகளின் போராட்ட மயமான வாழ்க்கை ஏராளமான ஆதாரங்களைக் கொடுக்கும்.

***

நாராயணனின் பிறப்புக்கு முன் இருந்த கேரளம் அடிமை வியாபாரமும், தீண்டாமையும் கோலோச்சிய காலம். அவரது இளமைக் காலமோ இந்தியா எங்கும் விவசாயிகளின் போராட்டங்களும், பழங்குடி மக்களின் போராட்டங்களும் பற்றி எரிந்து கொண்டிருந்த காலம். ஒடுக்கப்பட்ட ஈழவச் சாதியில் பிறந்தவரை - அவரது வரலாறும், சுற்றிலும் நிகழ்ந்து கொண்டிருந்த மக்களின் தன்னெழுச்சியான போராட்டங்களும் பாதித்தன.

1857-ல் முதல் இந்திய சுதந்திரப் போராட்டம் வெடித்து விட்டது. ஆனால் 1850-களின் துவக்கம் வரை கேரளாவில் அடிமை வியாபாரம் இருந்தது. பறையர், புலையர் முதலிய தாழ்த்தப்பட்ட மக்களை அடிமை போல விற்றனர்; வாங்கினர்; தீண்டாமைக் கொடுமைகளும் செயல்களும் தலைவிரித்தாடின.

ஈழவர்கள், முசுலீம்கள், கிறித்தவர்கள், நாடார்களின் குடும்பத்தில் உறுப்பினரின் தலையை எண்ணி வரி வசூலித்தனர்; ஈழவப் பெண்கள் தலைவரியோடு முலைவரியும் செலுத்த வேண்டும்; வரிவசூல் செய்யும் அதிகாரிகளின் தொல்லை தாங்க முடியாமல் 'சேர்த்தலை' என்ற இடத்தைச் சேர்ந்த ஓர் ஈழவப் பெண் தன் இரு முலைகளையும் அறுத்து வாழை இலையில் வைத்து அதிகாரிகளிடம் கொடுத்தாராம். (அந்த இடம் இன்றும் முலைச்சிப் பறம்பு என்று அழைக்கப் படுகின்றது.) ஈழவர்களோ, தாழ்த்தப்பட்டவரோ திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டால் கொதிக்கிற எண்ணெய்க் கொப்பரையில் கையை விட்டு சோதனைக்கு உட்பட வேண்டும். அதில் எவரும் தேற முடியாதென்பது நம்பூதிரிகளுக்கும் (பார்ப்பனர்க்கும்), நாயருக்கும், நிலப்பிரபுக்களுக்கும் தெரியும். இவர்கள் விழாக்களில் பங்கு கொள்ள முடியாது; கல்க் கட்டிடத்தில் உள்ள பள்ளிகளில் படிக்கவும் முடியாது.

அங்காடிக்குச் செல்லும் உரிமை புலையருக்குக்கிடையாது. தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்களுக்கு உணவு விஷயங்களில் கூட 19-ஆம் நூற்றாண்டில் விலக்கு இருந்தது. கதலிப் பழத்தை பார்ப்பனர்கள் மட்டுமே சாப்பிட அனுமதி உண்டு. கிறித்தவர்களும், ஈழவர்களும், முசுலீம்களும் மட்டுமே உண்டு வந்த உணவு புட்டு (பிட்டு). பார்ப்பனர் அந்த உணவை 'கும்பம் தூறி', 'கண்டியப்பம்' (கண்டி என்றால் மலம்) என்றெல்லாம் சொன்னார்கள். பாயாசத்தை இன்று எல்லோரும் உண்கிறார்கள். நாராயண குரு காலத்திலும், அதற்கு முன்பும் சவர்ணர்களுக்கு - (மேல்சாதிக்கு) மட்டுமே அந்த உரிமை. கிறித்தவர்கள் விருந்தின் இறுதியில் (கேரளாவில்) பழம் + தேன் + தயிர் உண்கிறார்களே, அதுகூட 'பாயாசத்துக்கு ஈடாக நீ இதைச் சாப்பிடு போ' என்று மன்னர் கொடுத்த அனுமதியே.

இவர்தான்

நாராயண குரு



ஜோசப் இடமருகு

[தலைவர், இந்திய பகுத்தறிவாளர் சங்கம்]

இவையனைத்தையும் எதிர்த்து மக்களின் தன் எழுச்சியான போராட்டங்கள் பல நடந்தன. அவற்றில் பல ஏடறிந்த வரலாற்றில் எழுதப்பட வில்லை. நாராயணனின் 4-வது வயதிலேயே ஊரார் சொல்ல பல செய்திகளைக் கேள்விப்பட்டிருக்கிறார். கன்னியாகுமரியில் கிறித்தவச் சாணார் பெண்கள் முலை மறைத்து உடை அணிந்ததால் ஆடைகளைந்து அவர்களது முலைகள் அறுக்கப்பட்டன; சாணார் ஆண்கள் கொல்லப்பட்டனர். சவர்ண (மேல்சாதி) ஆண்கள் கற்பழிப்பிலும், வன்முறையிலும் ஈடுபட்டு கிறித்தவத் தேவாலயங்களையும் பள்ளிகளையும் கொளுத்தினர். 1896-ல் கூட ஈழவர்களுக்குப் பொதுக்கல்வி மறுக்கப்பட்டது. பொது வழிபாடும் மறுக்கப்பட்டது.

மக்களின் பலவகையான போராட்டங்களின் ஊடாக நாராயணன் வளர்ந்தார்; ஈழவர்களின் வழிபாட்டு உரிமைக்காகக் கோயில்கள் கட்டினார். கோயில்கள் ஸ்தாபிப்பது, சிவனை நிறுவுவது எங்கள் உரிமை தானே என்று பார்ப்பனர்கள் கேட்டபோது, அது உங்கள் சிவன் அல்ல, ஈழவச் சிவன் என்று பதில் கொடுத்தார்.

சாமி கும்பிடுவதற்கான நோக்கத்தை விட, சமூக நிகழ்ச்சிகளில் நடமாட்டத்தில் தங்கள் உரிமைக்குப் போராடுவது என்ற நோக்கமே ஈழவர்களுக்குப் பெரிதாகத் தெரிந்தது.

மராட்டியத்தில் ஜோதிபா பூலே பார்ப்பனரின் கட்டுக் கதைகளைக் கேள்விக்கு உட்படுத்தியதைப் போலவே நாராயண குரு இந்து மதத்தைக் கடுமையாக விமரிசித்தார். கோயில்களில் ஈழவர்கள் நுழையப் போராடியதைப்

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்


படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• போர்: 17
• குரல்: 10-11
• ஏப்ரல், மே - 2000

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

சந்தா,
படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்

இரா. சீனிவாசன்,
3, நான்காவது தெரு,
செகந்நாதபுரம்,
சேத்துப்பட்டு,
சென்னை - 600 031.

# கிரிக்கெட் – சூதாட்டம் – பங்குச்சந்தை!

வெள்ளைக் கனவான்கள் அடிமை இந்தியாவின் மேட்டுக் குடியினர்க்கு கோட்டு, சூட்டு, முள் கரண்டியுடன் கிரிக்கெட்டையும் பழக்கிக் கொடுத்தார்கள். இந்தியக் காட்டு மிராண்டிகளை நாகரீகப்படுத்தியதற்காகப் பெருமைப்படவும் செய்தார்கள். இந்திய (பனியா) சூதாடிகளோ, வெள்ளைக் கனவான்களின் உள்ளே ஒளிந்திருந்த திருட்டுப் போக்கிரியை ஆசைகாட்டி வெளியே இழுத்து உலகுக்கே அறிமுகப்படுத்தி விட்டார்கள்.

உயிர்நிலையில் மிதிபட்டது போலத் துடிக்கிறார்கள் தென் ஆப்பிரிக்க வெள்ளை நிற வெறியர்கள். வெள்ளை - கறுப்பு நிறபேதமின்றி எல்லாம் ஒரு குட்டையில் ஊறிய மட்டைகள்தான் என்று திறமைமிக்க இந்தியச் சூதாட்டத் தரகர்கள் நிரூபித்து விட்டார்கள். தங்களது வீரர்களைச் சிக்கவைத்து விட்ட இந்தியத் தரகர்கள் மீது கொண்ட கோபத்தை, நேட்டாலில் சில இந்தியர்களைத் தாக்குவதன் மூலம் தீர்த்துக் கொண்டிருக்கிறது வெள்ளை நிறவெறிக் கும்பல். ஆசிய ஆப்பிரிக்க நாடுகளைக் கைப்பற்ற அந்நாட்டு எட்டப்பர்களுக்கு இலஞ்சம் கொடுத்த இனத்தின் கை, கறுப்பினச் சூதாடியிடம் இலஞ்சம் வாங்குமளவு இழிந்து போவதா எனும் தார்மீக ஆவேசம்! இது வெள்ளை நிறவெறியின் ஒழுக்க நெறி.

அடுத்து வருவது இந்திய ஆட்டக்காரர்களின் ஒழுக்க நெறி. இந்திய ஆட்டக்காரர்கள் விலை போவது பற்றிய குற்றச்சாட்டுகள் ஏற்கனவே பலமுறை எழுப்பப்பட்டுள்ளன. பாகிஸ்தானிடம் தோற்பதற்கு 25 இலட்ச ரூபாய் தருவதாக சக இந்திய ஆட்டக்காரர் ஒருவர் கூறினார் என மனோஜ் பிரபாகர் எழுப்பிய குற்றச்சாட்டை விசாரிக்க முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி சந்திரசூட் நியமிக்கப்பட்டார். இலஞ்சம் கொடுப்பதாகக் கூறியது யார் என்ற கேள்வியைக் கூடக் கேட்காமல் விசாரணையை முடித்துக் கொண்டார் அந்த உத்தமர்.

பாக். அணியினரும் சளைத்தவர்களல்ல; அங்கும் இத்தகைய குற்றச்சாட்டுகளுக்காக விசாரணை நடந்து குறிப்பிட்ட ஆட்டக்காரர்கள் குற்றவாளிகள் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. "குடும்ப கவுரவத்தைக் குலைக்கும் பெண்களை, ஆண்கள் கொலை செய்யலாம்" என்று ஷரீஅத் சட்டம் வைத்திருக்கும் நாட்டில் தேசத்தின் கவுரவத்தையே குலைத்த "வீரர்களுக்கு" எந்தத் தண்டனையுமில்லை. "இந்தியாவிடம் தோற்பதற்காக சில வீரர்கள் இலஞ்சம் வாங்கி விட்டார்கள்" என்று கேள்விப்பட்ட அணி நிர்வாகம் எல்லா ஆட்டக்காரர்களையும் குர்ஆன் மீது சத்தியம் செய்யச் சொன்னது. அதற்குமேல் எதுவும் செய்ய முடியவில்லை.

நாட்டையே பன்னாட்டு நிறுவனங்களுக்குக் கூறுபோட்டு விற்கும் அரசாங்கம், தேச பக்தியின் காவல் பூசாரியாகத் தன்னைச் சித்தரித்துக் கொள்ளும்போது, சட்டையையும் மட்டையையும் பன்னாட்டு நிறுவன விளம்பரத்திற்கும், ஆட்டத்தைத் தரகர்களுக்கும் விலைபேசும் "வீரர்கள்" தேசபக்தியின் உற்சவ மூர்த்திகளாக உலா வருவதில் வியப்பென்ன?" தேசவெறி - விளம்பரம் - விளையாட்டு போதை - சூதாட்டம் என கிரிக்கெட்டின் ஒவ்வொரு பரிமாணமும் ஒழுக்கக் கேட்டின் ஒரு முகமாக இருக்கும்போது வீரர்களின் ஒழுக்கத்தை மட்டும் காப்பாற்றுவது எப்படி?

இந்தியாவில் நடைபெறும் ஒவ்வொரு ஒருநாள் போட்டியின் மீதும் 400 கோடி ரூபாய் வரை சூதாடப்படுகிறது. தாவூத் இப்ராகிம், குஜராத்தின் பனியா முதலாளிகள், இந்தித் திரையுலகம்... என்றொரு பெரும் கறுப்புப் பணக் கும்பல் உலக கிரிக்கெட் சூதாட்டத்தையே கட்டுப்படுத்துகிறது. இங்கிலாந்து போன்ற நாடுகளில் இது சட்டபூர்வமாகவே அனுமதிக்கப்பட்டு, வரியும் வசூலிக்கப்படுகிறது. இந்தியாவிலும் இதனைச் சட்டபூர்வமானதாக ஆக்குவதன் மூலம் நமது வீரர்களின் ஒழுக்கத்தைக் காப்பாற்றலாம் என்று அறிவித்தார் விளையாட்டுத் துறை அமைச்சர். எதுவாக இருந்தாலும் அமைச்சரவைதான் முடிவு செய்ய வேண்டும் என்று ஒழுங்கை நினைவுபடுத்தியிருக்கிறார் வாஜ்பாயி.

தனியார்மயத்தையே தனது தாரக மந்திரமாகக் கொண்டுள்ள பா.ஜ.க. அரசு கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தை ஒரு கூட்டுப் பங்குக் கம்பெனியாக்கி, அந்நிய முதலீட்டாளர்களுக்கும் பங்குகளை விற்கலாம். உலகச் சந்தையில் தங்களது திறமையை நிரூபிக்க வேண்டிய கட்டாயமும், பங்குதாரர்களுக்கு பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தமும் வீரர்களுக்கு ஏற்படும். அல்லது குதிரைகளுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமையை கிரிக்கெட் வீரர்களுக்கும் வழங்கி கிரிக்கெட் சூதாட்டத்தைச் சட்டபூர்வமாக்கலாம். வெற்றி பெறும் குதிரை மீதுதான் சூதாடிகள் பணம் கட்டுவார்களென்பதால் இந்தியா - பாக். போட்டியில் இந்தியச் சூதாடிகள் பலர் பாக். அணியின் மீது பந்தயம் கட்டி அதன் வெற்றிக்காக ஆரவாரம் செய்வார்கள். கிரிக்கெட்டின் அம்மணத்தை மறைத்து அதன்மீது போதையும் வெறியும் ஊட்டும் தேசபக்தி எனும் சல்லாத்துணி கிழிந்து விடும்.

படிப்பகம்

www.padippakam.com

கிளின்டனின் விஜயத்திற்காகப்
பல ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

யமுனைக் கரையிலிருந்த
பன்றிகளும்
ஐதராபாத் நகரப்
பிச்சைக்காரர்களும்
அப்புறப்படுத்தப்பட்டார்கள்-
நகரத்தின் தூய்மையைக்
கிளின்டனுக்குக் குறிப்பாலுணர்த்த.

நொய்டா கிராமத்துப்
பெண்களுக்கு
அதிரடிக் கணினிப்
பயிற்சியளிக்கப்பட்டது -
இந்தியாவின் குக்கிராமமும்
இணையத்துடன்
பிணைக்கப்பட்டிருப்பதைக்
கிளின்டனுக்கு நிரூபிக்க.

காஷ்மீரில் 35 சீக்கியர்கள்
மார்ச் 20-ஆம் தேதி
சுட்டுத்தள்ளப்பட்டார்கள் -
காஷ்மீர் பிரச்சினையைக்
கிளின்டனுக்குப் புரியவைக்க.

நாடகம் முடிந்தவுடனே
ஒப்பனை கலைந்தது.
பன்றிகள் மீண்டும்
யமுனைக் கரைக்கு வந்தன.
பிச்சைக்காரர்கள்
வீதிக்கு வந்தனர்.

35 சீக்கியர்கள் மட்டும்
உயிர்த்தெழவில்லை.

ஏனென்றால்
இது நாடகமில்லை.

நோக்கம் எதுவாக இருந்தாலும்
அதை ஈடேற்ற
அப்பாவிகளைக் கொல்ல முடியுமா?

முடியும்.

அமைதிப்படையின்
அதிகாரத்தை நிலைநாட்டுவதற்காகவே
கொல்லப்பட்ட தமிழர்கள்

இலங்கை அரசின் மீது - தன்
மேலாதிக்கத்தை நிலைநாட்ட
இந்திய உளவுப்படையால்
படுகொலை செய்யப்பட்ட
சிங்கள மக்கள்

காஷ்மீர் இந்துக்களைக்
கொல்வதற்காகவே
இந்திய உளவுத்துறையால்
வளர்க்கப்பட்ட
போலிப் போராளிக் குழுக்கள்...

அப்பாவிகளைக் கொல்ல முடியும்.

சீக்கியர் கொலை
நாடகமில்லையென நிரூபிக்க
மீண்டுமொரு நாடகம் நடத்தியது
இந்திய இராணுவம்.

"மார்ச் - 24, 25 தேதிகளில்
காஷ்மீர் - பிரக்போரா கிராமத்தில்
இடைவிடாமல் நடந்த
துப்பாக்கிச் சண்டையில்
சீக்கியரைக் கொன்ற
பாக். தீவிரவாதிகளில் 5 பேர்
கொல்லப்பட்டார்கள்.
மற்றவர்களைத் தேடுகிறோம்."
என்றது இராணுவம்.

"மார்ச் - 21 முதல்
'காணாமல் போன'
17 பேரைத் தேடுகிறோம்"
என்றார்கள் அந்தக் கிராமத்து மக்கள்.

## அட்டைப்படக் கட்டுரை:

# பிணங்கள் பேசுகின்றன!

"5 பிணங்களையாவது காட்டு"
என்றனர் மக்கள்.
"அவர்களைப் புதைத்துப்
புல் முளைத்து விட்டது"
என்றது இராணுவம்.

போராட்டம் முளைத்தது.
"5 பிணங்களையும் தோண்டி எடு"
என 2000 பேர் திரண்டனர்.

பிணங்களால் பேசமுடியாது
என்பது
ஓர் அறிவியல் உண்மை.
எனினும்

உயிருள்ள மனிதனின்
கதறலுக்கு இரங்காத இதயம்
சில நேரங்களில்
'ஆவிகளின்' அலறலுக்கு அஞ்சுவது
ஓர் அறிவியல் உண்மை.

இராணுவமும் அஞ்சியது.
அச்சம் வேறு -
இரக்கம் வேறு,

கோழைத்தனம்
இரக்கமற்றிருக்கும் போதுதான்
சுறுசுறுப்பாக நடந்து கொள்கிறது.

மீண்டும் துப்பாக்கிச் சூடு.
9 பேர் புதைக்கப்பட்டனர்.
5 பிணங்களும் உயிர்த்தெழுந்தன.

முகம் சிதைந்து
உடல் சிதைந்து
மக்கிய தோலும்
மக்காத எலும்புமாக
5 மூட்டைகள்
அள்ளித்தரப்பட்டன.

65 வயதுக் கிழவர்
ஜுமா கான்.
இரண்டு ஆட்டு வியாபாரிகள்.
இரண்டு உள்ளூர்த் தொழிலாளிகள்.

அங்கங்களால் அல்ல
ஆடைகளால்
அடையாளம் கண்டார்கள்
உறவினர்கள்.

இவர்கள்
அவர்களாயிருக்கக் கூடாதே
என்று அரசும் பதறியது
உறவினர்களும் பதறினர்.
இருவேறு பதற்றங்கள்.

பிணங்களின்
அடையாளத்தை உறுதி செய்ய
மரபணுச் சோதனை நடக்கிறது.

தேசத்தின் மரபணு
கண்டுபிடிக்கப்படுமா?
மதத்தின் மரபணு
கண்டு பிடிக்கப்படுமா?
தீவிரவாதத்தின் மரபணு
கண்டு பிடிக்கப்படுமா?
துயரத்தின் மரபணு
கண்டு பிடிக்கப்படுமா?

•••

மொட்டைத் தலைக்கும்
முழங்காலுக்கும்
முடிச்சுப் போட முடியாது.

காஷ்மீருக்கும் இராமேசுவரத்திற்கும்
முடிச்சுப் போடப்பட்டுள்ளது.

"ஆ சேது ஹிமாசலம்"-
அது பிரம்ம முடிச்சு.


படிப்பகம்

www.padippakam.com

இந்துவின்
இகலோக உல்லாசத்திற்கு
காஷ்மீர்.
பரலோக உல்லாசத்திற்கு
இராமேசுவரம்.

காஷ்மீரில்
இராணுவ முகாம்.

இராமேசுவரத்தில்
அகதி முகாம்.

வடக்கே ஆக்கிரமிப்பு
தெற்கே அடைக்கலம்.
வடக்கே ரௌத்திரம்
தெற்கே காருண்யம்.

காஷ்மீரில் கொலை
மண்டபத்தில் தற்கொலை.

●●●

“ஏப்ரல் 7-ஆம் தேதி இரவு
மண்டபம் ஈழ அகதிகள்
முகாமையொட்டிய
தமிழ்நாடு தங்கும் விடுதியில்
ஒரு ஆணும் இரு பெண்களும்
ஆறு மாதக் குழந்தையும்
உள்ளிட்ட
ஈழத்தமிழ்க் குடும்பமொன்று
நஞ்சு குடித்துத்
தற்கொலை செய்து கொண்டது.”

“சில நாட்களுக்கு முன்
இதே விடுதியில்
நான்கு அகதிகள்
தீக்குளித்து இறந்தனர்.”

இங்கும்
பிணங்கள் பேசின.

“எங்கள் உடல்களை எரியூட்ட
3000 ரூபாய் வைத்துள்ளோம்.
நகைகளை
முகாமிலுள்ள அகதிகளிடம்
கொடுத்து விடுங்கள்.
நாங்கள் அகதிகள்.
இந்தியா வந்து
கஷ்டப்பட்டதால்
தற்கொலை செய்து கொள்கிறோம்.”

பிணங்களை
அடையாளம் காண
இங்கே
மரபணுச் சோதனை தேவையில்லை.

அவர்களுடைய அடையாளம்
தெரிகிறது.

அவர்கள்
மரணத்திற்குப் பின்னும்
மானத்தை
இழக்க விரும்பாதவர்கள்.

பணம் வைக்கவில்லையென்றால்
தங்கள் பிணத்தை
கவுரவமாக எரியூட்டமாட்டார்களோ
என்று நம்மைச்
சந்தேகிப்பவர்கள்.

உயில் எழுதி வைக்காவிட்டால்
நகைகளைக் களவாடக் கூடும்
என்று நம்மை
மதிப்பிட்டிருப்பவர்கள்.



ப்ரக்போரா கிராமத்தில் 5 அப்பாவிகளைக்
கொன்ற இராணுவத்தை எதிர்த்து முழக்க
மிடும் காசுமீர் பெண்கள், இடம் - ஸ்ரீநகர்

**இமயத்தின் கம்பீரத்தையும் கள்ளமின்மையையும் அமைதியையும் கவிதை போலச் சொல்லும் காசுமீர்ப் பெண்களின் கண்களைப் பார்த்துச் சொல்லுங்கள். காசுமீர் அவர்களது தாயா, உங்களது சுூத்தியாளா?**

எம் சாவுக்கு நீங்களே காரணம்
என்று
குற்றம் சாட்டத் தயங்கித்
தம் நிலையையே
காரணம் சொல்லுமளவு
நாகரீகமானவர்கள்.

நீங்கள்?

“அகதிகள் தற்கொலை”
என்ற செய்தியின் மீது
உங்கள்
இரக்கம் நிறைந்த கண்கள்
நின்று கலங்கினவா?

முலைக்காம்பில் நஞ்சுதடவி
பிள்ளைக்குப் பாலூட்டிய
அந்தத் தாயின்
பாசத்தை அறிவீர்களா?

ஆறுமாதப் பிள்ளையின்
எதிர்கால நலனை முன்னிட்டு
அவனைக் கொலை செய்த
தந்தையின்
அக்கறையை அறிவீர்களா?

சொந்த மண்ணின் நினைவைக்
கனவைப் போலத் துடைத்தெறிவதன்
வலியை அறிவீர்களா?

அதிதி (விருந்தினன்) கிளிண்டன்
ஐந்து நாட்கள் தங்கிய செலவு
அகதிகளுக்கு
ஆயுள் முழுதும் சோறுபோடக் காணும்
என்ற அக்கிரமத்தை அறிவீர்களா?

அகதி முகாமில் பிறந்து
அகதி முகாமில் வளர்ந்து
முகாமின் மதிற்சுவரைத்
தாண்ட அனுமதிக்கப்படாத
ஈழத்தமிழ் இளைஞனை
அகதி என்பீர்களா
கைதி என்பீர்களா?

அகதியின் மகன்
அகதியாகலாம்
கைதியாக முடியுமா?

ஈழப்போராட்டத்தைக்
கருவிலேயே சிதைத்தது
இந்திய அரசு,
அந்தக் கருச்சிதைவின்
ரத்தம்தான் - அகதிகள்.

அறிவீர்களா?

●●●

துப்பாக்கியின் நிழலில்
வாழ்ந்திருக்கிறீர்களா?

உங்களை
‘ஏய்’ என்று அழைத்து
கிட்ட வந்தவுடன்
எட்டி உதைக்கும் சிப்பாய்.

உங்கள்
மனைவியின் மார்பை
உங்கள் கண்முன்னே
சோதனையிடும் சிப்பாய்.

நீங்கள்
உரிமை கேட்பதனால்தான்
தனது வாழ்க்கை

www.padippakam.com

முச்சந்தியில் நிற்பதாக
நம்பும் சிப்பாய்.

இந்தியத் துப்பாக்கியின் நிழல்
ஈழத்தில் பதிந்திருக்கிறது.
காஷ்மீரில்
படிந்திருக்கிறது.

உங்களுக்கு
எப்படிப் புரிய வைப்பது?

மரங்களைப் போல
துப்பாக்கியும் நிழல் தரும்.
அதன் கீழே
கூனிக் குறுகி ஒடுங்க வேண்டும்.

குறுக மறுத்தால் சுடும்.

அதே துப்பாக்கிதான்...
கார்கில் போரின் போது
தேசபக்தியுடன் நீங்கள்
ஆயுதபூசை நடத்தினீர்களே
அதே துப்பாக்கிதான்.

இந்திய இறையாண்மையின்
காவல் தெய்வங்களாக
செங்கோட்டையால் வழிபடப்படும்
அதே துப்பாக்கிதான்.

தேசத்தின்
வெளிப்புறம் திரும்பிய
துப்பாக்கி முனைகளைக் காட்டிலும்
உட்புறம் திரும்பிய முனைகளே
அதிகமென்பதை அறிவீர்களா?

இந்தியத் துப்பாக்கியின் தோட்டாவை
நெஞ்சிலேந்தியவர்களெல்லாம்
அந்நியர்களென்றால்
அந்த அந்நியர்களில்
பெரும்பான்மையோர்
இந்தியர்கள் என்பதை
அறிவீர்களா?

கடந்த பத்தாண்டுகளில்
காஷ்மீரில்
இந்திய இராணுவம் அழித்த
உங்கள் வரிப்பணம்
ஒரு இலட்சம் கோடி.
அழித்த உயிர்கள் 20,000.

ஈழத்துக்குப் போன
இந்திய அமைதிப்படை
கொன்ற கணக்கும் இல்லை.
தின்ற கணக்கும் இல்லை.

ஒரு இலட்சம் கோடி ரூபாய்!

ஒரு துண்டு நிலமும்
5,000 பணமும் தந்திருந்தால்

4 கோடி விவசாயக் குடும்பங்கள்
20 கோடி இந்தியர்கள்
இரண்டு வேளை
சோறு தின்றுருப்பார்கள்.

ஒரு உயிரைக் கொல்ல
5 கோடி ரூபாய்!

சியாச்சின் பனிப்பாறைக்காக
15 ஆண்டுகளாக
பாகிஸ்தானுடன் போர்.
ஒரு நாளைக்குப் பத்து கோடி.



தலைச் சுமையுடன் இடம் பெயரும்
ஈழத்தின் முதிய பெண்மணி.

முலைக் காம்பில் நஞ்சு தடவி
பிள்ளைக்குப் பாலூட்டிய
அந்தத் தாயின்
பாசத்தை அறிவீர்களா?
சொந்த மண்ணின்
நினைவைக் கனவைப்
போலத் துடைத்தெறிவதன்
வலியை அறிவீர்களா?

வயிற்றுக்குப் போரிடப்போன
சிப்பாய்கள்
மூச்சுக்காற்று உறைந்து
விரைத்துச் சாகிறார்கள் -
இரு தரப்பிலும்தான்.

எதை நிரூபிக்க
இந்தக் கொலைகள்?
"மன்னும் இமயமலை
எங்கள் மலையே"

உந்தன் மலையா?
உன் காலடி நிலம்
உனக்குச் சொந்தமா?

காஷ்மீரின் பனிமலையை
பழத்தோட்டங்களை
வாங்கப் போவது யார் -
நீங்களா?

டால் ஏரியில் படகுவிட்டு
பனிச்சறுக்கு விளையாடி
மாலை நேரத்தில் மதுவருந்தி
மயங்கப் போவது யார் -
நீங்களா?

ஓபராய், தாஜ், ஹாலிடே இன்
நட்சத்திர - விபச்சார விடுதிகளின்
உரிமையாளர் யார் -
தாங்களா?

ஜுமான்களின்
கல்லறை மேல்
வசந்த மாளிகை
எழுப்பப் போவது யார் -
நீங்களா?

நீங்களே ஆகட்டும்,
உங்கள் எசமானர்களே ஆகட்டும்.

காஷ்மீர்
ஜுமா கானின் தாயா,
உங்களது கூத்தியாளா?

இமயத்தின் கம்பீரத்தையும்
கள்ளமின்மையையும்
அமைதியையும்
கவிதை போலச் சொல்லும்
காஷ்மீர்ப் பெண்களின்
கண்களைப் பார்த்துச்
சொல்லுங்கள்.

அவளது இதயத்தைக்
குத்தீட்டியால் கிழித்துவிட்டு
உள்ளத்தைக்
கொள்ளை கொண்டு விடுவீர்களா?

பெண்ணைக் கைப்பற்றலாம்
மண்ணையும் கைப்பற்றலாம்.
தோண்டுமிடமெல்லாம்
ஜுமான்களின் குரல் ஒலிக்கும்.

சம்மதமா?

பேசுங்கள்,
காஷ்மீரின் பிணம்
பேசுகிறது.
இராமேசுவரத்தின் பிணம்
பேசுகிறது.
பேசுங்கள் - இந்தியர்களே!

• சூரியன்


படிப்பகம்

www.padippakam.com

# ♦ வாசகர் கடிதம் ♦

இத்தனை வருடங்கள் இந்த மஞ்சள் பத்திரிகையைப் படித்தேனே என்று வருந்தினேன். தங்கள் கட்டுரைக்கு என் நன்றி.

**– கே.ஆர். சண்முகம், கடலூர்.**

✱ கடந்த சில இதழ்களில் இந்துத்வ அடிப்படைவாத அமைப்புகளை அம்பலப்படுத்தி எழுதி வருகிறீர்கள். பாராட்டுக்கள். அதுபோல முசுலீம் அடிப்படைவாத அமைப்புக்களையும் விமரிசித்து ஒரு கட்டுரை எழுத வேண்டுகிறேன். எப்படி இந்துத்துவ வாதிகளின் சொல்லும் செயலும் மாறுபட்டு, லாபம் மட்டும் பனியா கும்பலுக்கு போய்ச் சேருகிறதோ, அதேபோல த.மு.மு.க. போன்ற அமைப்புக்களின் செயல்பாடு யாருக்கு உதவுகிறது என்பதை அம்பலப்படுத்த வேண்டும். அப்போதுதான் முசுலீம்களை இதுபோன்ற அமைப்புகளிடமிருந்து காப்பாற்ற முடியும்.

**– முத்து மொகைதீன், மதுக்கூர்.**

**நீதி கேட்கிறாள் ஒரு தாய்** படிப்பதற்கு நீரோட்டமாக எளிதாக இருக்கின்ற அதேபோது, நீதித்துறை பற்றி ஆளும் வர்க்க அறிவு ஜீவிகள் அடுக்கி வைத்திருக்கும் பலவகைப் படிமங்களைக் கலைக்கவும், அதன் அடிப்படையைக் கேள்விக்குள்ளாக் கவும் செய்கிறது. இவ்வாறு நீதித்துறையை அம்பலப்படுத்த, பத்மினி வழக்கு, பன்வாரி தேவி வழக்கு, வாச்சாத்தி வழக்கு போன்ற பிரபல வழக்குகளுடன் கூடவே இதுபோன்ற சிறிய வழக்குகள் - தீர்ப்புகளும் தேடிப் பிடித்து எழுதப்பட்டால் நன்றாக இருக்கும்.

**கொழுப்பு** சிறுகதை மிகவும் அருமை. சா. செல்வராசின் இயற்பெயர் மாசிலானோ என்று எண்ண வைக்கும்படி அப்படியொரு தத்ரூபம். உண்மையாகவே நேரில் பார்த்தால் கூட இந்த அனுபவ முழுமை கிடைக்குமா என்பது சந்தேகமே!

**ஹேராம்.** ஒரு முற்போக்குப் படைப்பு என்பது எதுவாயினும் அதன் நாயகன், அவனது சமூக வாழ்நிலை, சூழல், அந்த காலம், இவற்றை எவ்வாறு தீர்மானிக்க வேண்டும் என்பதும் அது அவனது வாசகன் அல்லது ரசிகனின் உணர்ச்சியில் என்ன விளைவை ஏற்படுத்த வேண்டும் என்கின்ற படைப்பாளியின் அறிவுடன் நெருங்கிய தொடர்புடையன என்பதும் நன்றாக விளக்கப்பட்டிருக்கிறது. "அரசியல்தான் அப்படியென்றால் சினிமாவிலும் அதே தானா? நீங்கள் படம் எடுத்தால்தான் அது முற்போக்கு என்பீர்களா?" என்று ஒரு நண்பர் விமர்சித்தார். இந்து மதவெறி பாசிச எதிர்ப்புக்கு இதுபோன்ற சுமாரான திரைப்படமானாலும் வரவேற்கலாம் என்று எனக்கும் ஒரு கருத்திருந்தது. ஆனால் வெறுமனே ஒப்பீட்டு ரீதியில் முற்போக்கு என்று தெரிவு செய்வதுதான் சீர்திருத்த வாதம் என்று அவருக்கு பதிலளிக்கும் போக்கில்தான் எனக்கும் அதன் சாரம் பிடிபட்டது.

**– சிங்காரம், திருச்சி.**

✱ எங்கே எனது கடிதத்தினை வெளியிட மாட்டீர்களோ, என்று நினைத்திருந்தேன். எனது கடிதத்தினைப் புரிந்து கொண்டு, எவ்விதப் பிரதிபலனும் இல்லாமல் வெளியிட்டு, என் போராட்ட உணர்வுக்கு பாதை போட்டுத் தந்த உங்களுக்கு மனமார்ந்த நன்றி! இந்நாட்டு சட்டத்தினால் நான் மட்டும் பாதிக்கப்படவில்லை. பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் பலர் பாதிக்கப்பட இருக்கிறார்கள் என்பதை நினைத்துப் பார்க்கவே வேதனையாக இருக்கிறது.

கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு குடும்பம். அதில் கணவன் ஒரு ஊதாரி, குடிகேடி. மனைவி குழந்தைகளைப் பொருட்படுத்துவதில்லை. அந்தப் பெண் வெயிலிலும், மழையிலும் துன்பப்பட்டு உழைத்துக் கொண்டு வரும் கூலியையும் கணவன் பிடுங்கிக் கொண்டு குடித்து விட்டு வருகிறான். கேட்டால் அவளை இழுத்துப் போட்டு அடிக்கிறான். பொறுத்துப் பொறுத்து வெறுத்துப் போன அவன் மனைவி மண்ணெண்ணெயை ஊற்றி அவனை எரித்து விட்டு தானும் சாக நினைத்து விஷம் அருந்துகிறாள். அவன் இறக்கிறான். அவள் காப்பற்றப்பட்டு விடுகிறாள். வழக்கு கடலூர் நீதிமன்றத்திற்கு வருகிறது. கணவனை கொலை செய்ததற்கு ஆயுள் தண்டனையும், தற்கொலை முயற்சிக்கு ஒரு வருட தண்டனையும் கொடுத்து தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இந்த தீர்ப்பு எப்படி இருக்கிறது தெரியுமா? ஒரு பெண் இந்த சமூகத்தில் வாழவும் முடியாது, சாகவும் முடியாது என்பதைப் போல் இருக்கிறது.

குடும்ப வழக்குகளிலாவது பாதிக்கப் பட்டவர்களைக் கேட்டு நடவடிக்கை எடுத்தால்தான், குடும்பக் கொலைகளைக் குறைக்க முடியுமே தவிர வெறெதினாலும் தடுக்க முடியாது. எல்லா வழக்குகளிலும் கூட இந்த நடைமுறையைக் கடைபிடித்தால் குற்றமும் குறையும், சிறைச்சாலைகளில் கூட்டமும் குறையும்.

உங்கள் பத்திரிக்கை உண்மையான ஜனநாயகத் தூணாக மாற வேண்டும், எந்தக் காலத்திலும் நீதியோடு நிலைத்திருக்க வேண்டும் என்றும் விரும்புகிறன், வாழ்த்துகிறேன்.

**– சென்ற இதழ் அட்டைப்படக் கட்டுரைக் குரிய கடிதத்தை அனுப்பியவர்.**

✱ **ஹேராம்** - படம் பற்றிய கருத்தை கட்டுரையாளர் பளிச்சென்று கூறாமல் முதலில் படத்தின் காட்சிகளைக் கூறுவது பின்பு பிரிவினைக் கால வரலாற்றுக்குச் சென்று மீண்டும் கதைக்கு திரும்பும் இந்த நடைமுறை, சாரத்தை முழுமையாக கிரகிப்பதற்கு சிரமமாக உள்ளது. இந்தப் படத்தில் 1) பாசிச கொள்கையால் உருவான கோட்சேயை ஒரு விபத்தினால் உருவாக்கிக் காட்டுவது, 2) காந்தியின் அகிம்சையைக் காட்டி அவரது மறுபுறத்தை மறைப்பது, 3) பிரிவினை கால கட்டத்தின் பல்வேறு மக்களின் போராட்ட வரலாற்றை மூடி மறைப்பது, 4) பிரிவினைக்கு அடிப்படை யான தரகு முதலாளிகளை மூடி மறைப்பது, 5) வரலாற்று மோசடியைக் கூட அவாளுடைய வீட்டில் - நாட்டில் நடப்பதாகக் காட்டுவது - இப்படிப்பட்ட விசயங்களை சுருக்கமாக கூறி இந்த வரலாற்று மோசடியை அம்பலப் படுத்தியிருக்கலாம்.

**– குறிஞ்சி வளவன், சென்னை.**

✱ **"நீதி கேட்கும் தாய்"** மூத்த மகன் செத்தபின் கதறியழும்போது மீண்டும் விழித்துக் கொண்டு விடுவானோ என்ற பயமும், செத்த பிறகுதான் அவன் பக்கமே போக முடிந்தது என்ற ஆதங்கமும், அந்தத் தாயே அப்படி வெளிப்படுத்தியிருப்பது நெகிழச் செய்தது. 'பெண் என்றால் இளகிய மனது' என்பார்கள். அதிலும் ஒரு தாய் தன் மகன்களில் ஒருவன் கொடியவனாக மாறும்போது, 'மகனேயாயினும் அவன் தீயவன்' என்று உரைப்பதுப் பலருக்கு பாடமாக உள்ளது.

**– வாகர் வட்டம், திருச்சி.**

✱ நான் இரயில்வேயில் இருந்து ஓய்வு பெற்றவன். பல ஆண்டுகளாக குமுதம் வார இதழைப் படித்து வந்தவன். சமீபத்தில் ஒரு நண்பர் வீட்டிற்குச் சென்றிருந்போது, என் நண்பரின் மாப்பிள்ளை மார்ச் மாத பு.க. இதழைக் கொடுத்து குமுதம் பற்றியக் கட்டுரையைப் படிக்கும்படி சொன்னார். உடன் அக்கட்டுரையைப் படித்ததும் என்னை நானே நொந்து கொண்டேன்.

✱ தங்கள் மாத இதழை சில மாதங்களுக்கு முன்புதான் அறிந்தேன். சில இதழ்களை வாங்கி படித்துப் பார்த்தேன். கட்டுரைகள் அனைத்தும் அருமை. பிப்ரவரி இதழின் 'நமது நகரம் - அவர்கள் ஆட்சி' ஆக்கம் தெளிவாக, நன்றாக இருந்தது. தாங்கள் எழுதி வரும் ஆர்.எஸ்.எஸ்.-இன் 'பொய்யும் புரட்டும்' கட்டுரையைப் படித்து வருகிறேன். ஜனவரி இதழில் வெளியான 'மாட்டுக்கறி' பற்றிய விளக்கத்தைப் பிற சகோதரர்களும் அறிந்து கொள்ள வேண்டும் என நான் விரும்பியதால், வேறு பத்திரிகைக்கு அனுப்ப எண்ணியுள்ளேன். அதற்கு உங்கள் அனுமதி தேவை.

**– முகம்மது இல்யாஸ், திருவிடை மருதூர்.**

www.padippakam.com

## அஸ்கர் அலி என்ஜினியர் மீதான தாக்குதல்:

# சிறுபான்மையினர் உரிமை வேண்டும்! சீர்திருத்தும் உரிமை கிடையாதா?

**டாக்டர் அஸ்கார் அலி என்ஜினியர்** - மிகப் பிரபலமான அறிஞர். இசுலாமிய மதம், வரலாறு கோட்பாடுகளை ஆய்வு செய்து பல நூல்களை எழுதியவர். தான் சார்ந்த **போரா முசுலீம்** எனப்படும் மிகச் சிறுபான்மை இசுலாமிய மதப்பிரிவுக்குள் சீர்திருத்தம் வேண்டி பல ஆண்டுகளாகப் போராடி வருபவர். மத நல்லிணக்கத்துக் காகவும், சமூக ஒற்றுமைக்காகவும் வாழ்நாளெல்லாம் பாடுபடும் முதியவர். பல்வேறு மதவெறிச் சக்திகளைத் தவிர மற்ற அனைவராலும் மதிக்கப்படுபவர்.

இவர் கடந்த பிப்ரவரி 23-ந் தேதி பம்பாய் விமான நிலையத்தில், போரா முசுலீம் மதப்பிரிவின் அதி உயர் மதகுரு சையத்னா புரானுதீன் ஏவிவிட்ட குண்டர்களால் தாக்கப்பட்டுள்ளார்; அதன்பிறகு அவரது வீடு - அலுவலகம் தாக்கிச் சூறையாடப்பட்டுள்ளது. தாக்குதல் நடத்திய குற்றவாளிகளுக்கு ஆதரவாக சிவசேனை முதலிய இந்துமதவெறி பாசிச அமைப்புகளும், பிறபிரிவு இசுலாமியத் தலைமைச் சக்திகளும் நின்றிருக்கின்றனர். அரசும் போலீசும் குற்றவாளிகளுக்கு எதிரான நடவடிக்கை எடுக்காமல் முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டுள்ளன.

மத்தியப் பிரதேச அரசின் அழைப்பை ஏற்று அம்மாநிலப் போலீசாரிடையே மத ஒருமைப்பாடு மற்றும் மத நல்லிணக்கம் பற்றி உரையாற்றிவிட்டு போபாலில் இருந்து பம்பாய் திரும்பிக் கொண்டிருந் தார், அஸ்கார் அலி என்ஜினியர். அதே விமானத்தில் இந்தூரில் இருந்து பம்பாய் திரும்ப இருந்த போரா முசுலீம் தலைமை மதகுரு சையத்னா உரிய நேரத்தில் விமானத்திற்கு வரவில்லை. அவர் விமான நிலையத்திலேயே தொழுகை நடத்திக் கொண்டிருக்க, அவரது அடியாட்கள் விமானக் கட்டுப்பாட்டு அறைக்குள் புகுந்து உரிய நேரத்தில் விமானம் புறப்படாமல் நிறுத்தி வைக்கும்படி நிர்பந்தித்தனர். பயணிகள் எதிர்க்குரல் கொடுத்தும் சையத்னா வந்த பிறகே விமானம் புறப்பட்டது. அவருடன் வந்த வேறு இரு குருமார்களும் என்ஜினியரைக் கண்டதும் ஆத்திரத் தோடு ஏசி இருக்கின்றனர்.

பம்பாய் விமான நிலையம் வந்து இறங்கியதும் பாதுகாப்பு வளையத்துக் குள் புகுந்த சையத்னாவின் அடியாட்கள் பத்துப் பேர் என்ஜினியரைச் சூழ்ந்து கொண்டு தாக்கினர். வெளியில் அவரைத் தாக்க நூறுக்கும் மேற்பட்ட சையத்னாவின் ஆட்கள் காத்திருந்தனர். 60 வயதான, நீரழிவு நோயாளியான என்ஜினியர் மூக்கில் இரத்தம் சொட்டச் சொட்ட நானாவதி மருத்துவமனைக்குத் தூக்கிச் செல்லப்பட்டார். உடனடியாக சையத்னா வின் அடியாட் கும்பல் என்ஜினியரின் வீட்டையும் அலுவலகத்தையும் தாக்கிச் சூறையாடினர். 1993 மதவெறிப் படுகொலையின் போது சிவசேனை குண்டர்கள் இசுலாமியர் சொத்துக்களைத் தாக்கிச் சூறையாடியதற்குக் கொஞ்சமும் குறைவற்ற அட்டூழியத்தை சையத்னா வின் அடியாட்கள் செய்தனர்.



அஸ்கர் அலி என்ஜினியர்

இத்தனையும் செய்துவிட்டு, போரா மதகுருமார்களையும், அச்சமூகப் பெரும் வியாபாரிகளையும் கொண்ட குழுவொன்றை மராட்டிய முதல்வரிடம் அனுப்பி வைத்தார் சையத்னா. "மத உணர்வுகளைக் கிளறி மலிவான விளம்பரம் தேடிக் கொள்வதற்காக என்ஜினியர்," எங்கள் சமூகத்தில் உள் சண்டையையும் வெறுப்பையும் உருவாக்க முயலுகிறார், உடனே அவரைக் கைது செய்ய வேண்டும். சையத்னாவுக்குப் பாதுகாப்புத் தர வேண்டும்" என்று கோரினர்.

இதில் வெட்கக்கேடு என்ன வென்றால், அந்த இசுலாமிய மதவெறி - சுயநலக் கும்பலோடு இந்துமதவெறி பாரதீய ஜனதா மற்றும் சிவசேனா எம்.எல்.ஏ.க்கள் இருவர் சேர்ந்து கொண்டு மராட்டிய முதல்வரிடம் வாதாடி இருக்கின்றனர். சையத்னாவுக்குப் பாதுகாப்புத் தருவதாகவும், நடந்த சம்பவம்' பற்றி விசாரிப்பதாகவும் காங்கிரசு - தேசிய காங்கிரசு கூட்டணி முதல்வர் வாக்களித்துள்ளார்.

"சையத்னாவே தாக்கப்பட்டால், இந்தியாவைப் பற்றி உலகம் என்ன நினைக்கும்? இசுலாமியச் சமூகத்தின் இந்தத் தலைவருக்கு அதிஉயர்ந்த பாதுகாப்புத் தர வேண்டும்" என்று பா.ஜ.க. எம்.எல்.ஏ. புரோகித் என்ற சாத்தான், வேதம் ஓதியிருக்கிறது.

ஒரு உண்மையான மதச்சார்பற்ற மனிதருக்கு எதிராக மதவேறுபாடின்றி இந்து - முஸ்லீம் மதவாதிகளும் ஓட்டுப் பொறுக்கிகளும் எப்படி அணி சேருகிறார்கள் என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்?

"என்ஜினியர்தான் எங்கள் மதகுருவை ஏசி, அவமானப்படுத்தித் தாக்கவும் துணிந்தார். அதனால்தான் சையத்னாவின் சீடர்கள் ஆத்திரமடைந் தனர்" என்று அந்தக் கும்பல் பொய்க் குற்றச்சாட்டும் சுமத்தியது. இந்த அவதூறை, பா.ஜ.க. - சிவசேனா கும்பல் அப்படியே பிரச்சாரம் செய்தது. அதேசமயம் சமாஜ்வாதிக் கட்சியின் பம்பாய்த் தலைவர் அபு ஆசிம் ஆஸ்மி, இந்திய இசுலாமிய சிவில் சட்டவாரியச் செயலாளர் அப்துல் சத்தார் ஷேக், முசுலீம் லீக்கின் பெருந்தலைவர் பேனட்வாலா மற்றும் பம்பாய் உருதுப் பத்திரிக்கைகள் எல்லோரும் சையத்னா கும்பலின் புளுகை அப்படியே ஏற்று வாந்தி எடுத்தனர்.

www.padippakam.com

உண்மையில் இது மக்களின் பொது அறிவையே அவமானப்படுத்துவதாகும். உள்ளே பத்து அடியாட்களும் வெளியே நூற்றுக்கணக்கான வெறியர்களும் சூழ்ந்திருந்த சையத்னாவை அறுபது வயது முதியவர் தாக்கத் துணிந்தார் என்பதை சுயசிந்தனையுள்ள யாராவது நம்ப முடியுமா?

என்ஜினியர் மீதான சையத்னா கும்பல் சுமத்தியக் குற்றச்சாட்டு அப்பட்டமான பொய்யென்று, நடந்த சம்பவம் பற்றி விசாரித்த தேசிய சிறுபான்மையினர் கமிசன் அமைத்த இருவர் குழு தீர்ப்பளித்திருக்கிறது. இந்தூர் மாவட்ட ஆட்சியாளரையும் மாவட்ட போலீசு அதிகாரியையும் கொண்ட அக்குழு முன்பு சாட்சியமளித்தவர்கள், "இந்தூரில் சையத்னா ஏறுமுன்பே என்ஜினியர் தனது இருக்கையில் அமர்ந்திருந்தார். என்ஜினியர் சையத்னாவை அவமானப் படுத்தி தள்ளியதாகக்கூறப்படும் சம்பவம் எதுவும் நடக்கவே இல்லை" என்று கூறினார்கள்.

ஆனால், போரா முசுலீம் மதகுரு சையத்னா மற்றும் அவரது அடிவருடிகள் மட்டுமல்ல மற்ற எல்லாப் பிரிவு இசுலாமிய மதவெறி - சுயநல கும்பல்களும் என்ஜினியருக்கு எதிராக அவதூறு செய்வதில் இறங்கினர். இப்போது நடந்திருப்பது என்ஜினியரின் உயிருக்குக் குறிவைத்த ஐந்தாவது தாக்குதல் என்பது அவர்களுக்குத் தெரியும். முன்பு சிரீநகரில் உள்ள ஹசரத்பால் மசூதியில் இருந்து நபிகளின் ஒரு தலைமுடி காணாமல் போனதற்காக நாடு தழுவிய கடையடைப்பு நடத்திய இசுலாமியத் தலைவர்கள், இப்போது என்ஜினியர் அலுவலகத்தில் பல்வேறு மொழிகளில் இருந்த 50 குர்ஆன் நூல்களைப் பிய்த்தெறிந்து அவமரியாதை செய்ததைக் கண்டிக்கக் கூடத் தயாரில்லை.

ஏன் இந்த ஆத்திரம் - வெறி - வெறுப்பு! பம்பாய் திரும்பிய அடுத்த சில நாட்களிலேயே ஓர் அனைத்திந்திய மாநாட்டில் என்ஜினியர் உரையாற்ற விருந்தார். அதன் தலைப்போ, "21-ஆம் நூற்றாண்டில் போரா முசுலீம் சீர்திருத்தம்". இதுதான் பிரச்சினை. மதத்தின் பெயரால் கோடி கோடியாகச் சொத்துக்களைச் சேர்த்துக் கொண்டு ஆடம்பர - உல்லாச - ஊதாரி வாழ்க்கை வாழ்வதோடு, அடியாட்படைகளை வைத்துப் பிறப்பு, இறப்பு, திருமணம், சொத்து, வணிகம், தொழில் ஆகிய அனைத்து இனங்களிலும் வரிவசூல் செய்து கொண்டு, நாட்டில் வாழும் ஏழு இலட்சம் போரா முசுலீம்களை மத அடிமைகளாக நடத்தி வருகிறார் தலைமை மதகுரு சையத்னா. இதை எதிர்த்துத்தான் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமெனக் கடுமையாகப் போராடி வருகிறார் என்ஜினியர்.

பிறந்தது முதல் இறப்பு வரை மதகுருவால் விதிக்கப்படும் பல இனவரிகளில் ஏதொன்றையும் ஒரு போரா முசுலீம் செலுத்தத் தவறினால், அவர் அனைவரிடமிருந்தும் சமூகப் புறக்கணிப்புக்கும், மதவிலக்கத்துக்கும்



*மதத்தின் பெயரால் கோடி கோடியாகச் சொத்துக்களைச் சேர்த்துக் கொண்டு ஆடம்பர - உல்லாச - ஊதாரி வாழ்க்கை வாழ்வதோடு, அடியாட்படைகளை வைத்து பல வழிகளிலும் வரிவசூல் செய்து, 7 லட்சம் போரா முசுலீம்களை மத அடிமைகளாக நடத்தி வருகிறார், தலைமை மதகுரு சையத்னா.*

பலியாக்கப்படுவார். சாதாரண போரா முசுலீமுக்கே இந்தக் கதி என்றால் அந்த மதச் சர்வாதிகாரிக்கு எதிராகப் போராடி வரும் என்ஜினியர் எப்படி நடத்தப் படுவார் என்பது எவரும் ஊகிக்கக் கூடியதே. அவர் மீது சமூக - மத விலக்கம் விதிக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு அவரது மனைவி இறந்தபோதும் சமூக - மதப் பறக்கணிப்புக்கு இலக்கானார். மதச்சார்பற்ற பிரமுகர்களும் நண்பர்களுமே துணை நின்றனர்.

என்ஜினியரின் இடையறாத போராட்டத்தின் விளைவாக கல்கத்தா உயர்நீதி மன்ற முன்னாள் தலைமை நீதிபதி தேவாத்தியா மற்றும் ஜனநாயகத் துக்கான குடிமக்கள் அமைப்பின் தலைவர் குல்தீப்நய்யார் ஆகியோர் அடங்கிய ஒரு விசாரணைக் கமிசன் 1993-இல் அமைக்கப்பட்டது. "தாவூதி போராக்களின் மனித உரிமை மீறல்கள்" பற்றிய ஓர் அறிக்கையை அக்குழு வெளியிட்டது.

"போரா சமூகத்தின் தலைமை மதகுருவான சையத்னா மதத்தின் பேராலும் கடவுளின் பேராலும் மதத்தன்மையோ, தெய்வத்தன்மையோ, மனிதத் தன்மையோ இல்லாத ஒரு கட்டமைப்பை உருவாக்கியிருக்கிறார். குரூரமான கொடுங்கோலர்கள் கூட அவ்வாறு செய்வதற்கு வெட்கப் படுவார்கள். இந்தியா போன்ற ஒரு வெளிப்படையான ஜனநாயகத்தில் குறைந்தபட்சம் சுதந்திரம், கருத்துத் தெரிவிக்கும் உரிமைகளைக் கூட அவர் தொடர்ந்து மறுத்து வருவது, இந்த தேசத்தின் மீதான களங்கம் - கறைதான். எவ்வித சட்டநடவடிக்கையும் எடுக்கப் படாமல் பாதுகாப்போடு அவர் அதைச் செய்து வருவது சிந்திக்கும் திறனுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் சவாலாகும்" என்று அந்தக் கமிசன் கூறியது. இப்போது ஏழாண்டுகளுக்குப் பின்னும் அதே நிலை நீடிக்கிறது.

போரா அல்லாத முசுலீம் பிரமுகர்கள், இரகசிய உலக கிரிமினல் மாஃபியாக்கள், சிவசேனைத் தலைவர்கள், உருதுப் பத்திரிக்கை ஆசிரியர்கள் எனப் பலருக்கும் பெட்டி பெட்டியாகப் பணத்தைக் கொட்டி விலைக்கு வாங்கி வைத்திருக்கிறார் சையத்னா. போரா அல்லாத முசுலீம் மௌல்விக்கள் உட்பட இவர்கள் அனைவரும் ஒவ்வொரு ஈத் தொழுகை முடிந்ததும் பம்பாயின் செல்வச் சீமான்கள் வாழும் மலபார் குன்றில் உள்ள தர்மகுரு சையத்னாவின் மிகஆடம்பர மாளிகைக்குப் படையெடுக்கின்றனர். அங்கே சையத்னாவின் கரங்களுக்கு முத்தமிட்டு ஆசியும், விலை உயர்ந்த பொன்னாடையும் ஒரு பணப் பொட்டலத்தையும் பெற்றுத் திரும்புகின்றனர். அவர்களுடன் எடுத்துக் கொள்ளும் புகைப்படங்களைப் பிரசுரிப்பது உட்பட சையத்னா பற்றிய செய்திகளைத் தொடர்ந்து பத்திரிக்கைகளில் இடம்பெற வைக்கின்றனர்.

ரோம் நகரில் வாட்டிகன் அரசு இருப்பதைப் போல மலபார்குன்றில் சையத்னாவின் அரண்மனை இருக்கிறது. அவர் வெளியில் வந்தால் அவரது சொகுசுக் காருக்கு முன்னும் பின்னும் - நமது ஊர்சங்கராச்சாரி, ஜெயலலிதாவைப்

படிப்பகம்

www.padippakam.com

போல சீருடையணிந்த சொந்தப் படையினர் மோட்டார் சைக்கிள்களில் முன்னும் பின்னும் அணிவகுப்பு நடத்துகின்றனர்.

சையத்னாவின் அதிகாரம் கேள்விக்குள்ளாக்கப்படும்போது பிற இசுலாமிய சமூகத்திடம் தஞ்சம் புகுந்து கொள்ளுகிறார். ஆனால் முசுலீம்கள் இந்துவெறியர்களின் தாக்குதலுக்கு இலக்காகும்போது அவர்களிடம் இருந்து சையத்னாவும் போராக்களும் விலகி நின்று வேடிக்கை பார்க்கின்றனர். இதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன.

1992-93 பம்பாய் கலவரத்தில் முசுலீம்களுக்கு எதிராக சிவசேனை கிரிமினல்கள் பயங்கரத் தாக்குதல்கள் நடத்தியபோது, சையத்னா சிவசேனைத் தலைவர் பால்தாக்கரேயுடன் ஒரு ஒப்பந்தம் போட்டுக் கொண்டார். ''முசுலீம் சமூகத்தின் ஒரு அங்கமாக இருந்தாலும் போராக்கள் வணிகர்கள், அவர்களோடு எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் கிடையாது'' என்று பால்தாக்கரே அறிக்கை விட்டார். சுன்னி - போரா இசுலாமியரிடையே ஏழு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த கலவரத்தின் போது போரா குடியிருப்புகளைக் காப்பதற்காக சிவசேனா குண்டர்கள் அழைக்கப் பட்டனர். கடந்த மாதம் நடந்த பால்தாக்கரேயின் 73-வது பிறந்த நாள் விழாவுக்கு சையத்னா நேரில் போய் வாழ்த்துத் தெரிவித்திருக்கிறார். வேறு எந்தத் தலைவரையும் அவர் மதித்தது கிடையாது!

இந்துமதவெறி பாசிஸ்டு பால்தாக்கரேயை இவ்வளவு தூரம் மதிக்கும் சையத்னா, ஔரங்காபாத்தைச் சேர்ந்த இசுலாமிய அறிஞர் மொயின் சக்கீரின் பிணத்தைக் கூட நிம்மதியாக கிடக்கவிடவில்லை; அவர் இறந்த பின்னும் பழிவாங்கத் துடித்தார்.

சையத்னா மற்றும் அவரது அடிவருடிகளின் கொடுங்கோன்மையை விசாரிக்க 1978-இல் அமைக்கப்பட்ட நீதிபதி நத்வானி கமிசனின் உறுப்பினராக பேராசிரியர் மொயின் சக்கீர் செயல்பட்டதுதான் அவர் பிணத்தின் மீது கூட பாய்ந்து குதற சையத்னா துடித்ததன் காரணம். 1987-இல் சக்கீர் இறந்து போய் நான்கு மாதங்களுக்குப் பிறகு சையத்னாவின் கைக்கூலிகளான சுன்னி பிரிவு பிரமுகர்கள் சிலர் ''பொங்கி'' எழுந்தனர். ''ஒரு கம்யூனிஸ்டான சகீரின் உடல் முசுலீம் சமூகத்தின் கல்லறையில் இருக்கக் கூடாது, தூக்கி வெளியே எறிய வேண்டும்'' என்று சையத்னாவின் கைக்கூலிகள் கூச்சலிட்டனர். இது சையத்னாவின் தூண்டுதல்தான் என்பதை உணர்ந்து விவகாரம் விபரீதமாவதற்குள் ஔரங்காபாத் நகர காஜியும், ஜமாத்-இ-இசுலாமியத் துணைத் தலைவரும் தலையிட்டு அறிஞர் சக்கீரின் உடலைத் தோண்டி எடுத்து வெளியே வீசும் முயற்சியைத் தடுத்தனர்.

இளம் சிறுவர் - சிறுமிகளைக் கடத்திக் கொண்டு போகும் அரபு ஷேக்குகள், அமெரிக்கா மற்றும் பிற ஏகாதிபத்திய ஊழியஞ் செய்யும் இசுலாமிய ஆட்சியாளர்கள், மன்னர்கள், சினிமா சீரழிவுக்காரர்களாக உள்ள முசுலீம் நடிகர், நடிகைகள், தயாரிப்பாளர்கள், கந்துவட்டி லேவாதேவி - கள்ளர் சந்தை தொழில் புரியும் முசுலீம் வியாபாரிகள், கிரிமினல் மஃபியா கூட்டத் தலைவர்களாக உள்ள முசுலீம் தாதாக்கள் போன்றவர்களுக்கு எதிராக முசுலீம் மத குருமார்கள் எவரும் மத ஆணை பிறப்பித்ததாக வரலாறே கிடையாது. இப்படிப்பட்டவர்கள் யாரையும் மத நீக்கம், சமூகப் புறக்கணிப்புக்கு இலக்காக்கியதில்லை.

> விதவைகளுக்கு எதிரான கொடுமை, சதி, தீண்டாமை போன்றவை தங்கள் மத உள்விவகாரம் என்று இந்து மதவெறியர்கள் கவசமிட்டுக் கொள்வதை எப்படி அனுமதிக்க முடியாதோ, அதேபோல மத ஆணை, ஷரீயத் போன்றவை தமது உள் விவகாரம் என்று இசுலாமிய மதவாதிகள் கவசமிடுவதையும் ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆனால் சல்மான் ருஷ்டி, தஸ்லீமா நஸ்ரீன் போன்றவர்களுக்கு மரண தண்டனை விதித்து மத ஆணை பிறப்பிக்கப்படுகிறது. பம்பாய் வந்த தஸ்லீமா நஸ்ரீனும், நடிப்புக்காக மொட்டையடித்த சபனா ஆஸ்மியும் மிரட்டப்படுகின்றனர். கேரள ஜும்மாவின் உத்திரவுப்படி இளம்பெண் மொட்டையடிக்கப்படுகிறார்.

யாரையாவது ஓரங்கட்டி ஒழிக்க வேண்டுமானால் அவர் இனிமேலும் முசுலீம் அல்லவென்று பிரகடனப்படுத்துகிறார்கள். இசுலாமியப் பாமர மக்களோ, முல்லாக்களின் முடிவுகளைத் தெய்வ வாக்காக ஏற்றுக் கொள்கின்றனர். கடந்த காலத்தில் சர் சையத் அகமதுகான், மௌலானா அபுல் கலாம் ஆசாத் போன்றவர்களையும் காஃபிர் - நாத்திகர் என்று பிரகடனம் செய்தனர். இந்த வரிசையில் மத - சமூகச் சீர்திருத்தத்துக்குப் போராடும் அஸ்கார் அலி என்ஜினியர் சமூக - மத நீக்கம் செய்ய மதக் கொடுங்கோலன் சையத்னா மத ஆணை பிறப்பித்துள்ளார். குர்ஆன், ஷரியத், ஹதித் ஆகியவைகளையும் நபிகளின் வாழ்க்கை வரலாற்றையும் ஆதார பூர்வமாக ஆய்வு செய்துள்ள அவருக்கு வேறு எந்த மறுப்பும் கூற முடியாத முல்லாக்கள் வெறும் அவதூறுகளையே பரப்புகின்றனர். காரணம் குர்ஆனையும் ஹதீஸையும் முல்லாக்கள் கெட்ட நோக்கத்துடன் வியாக்கியானம் செய்து ஆதாயம் தேடுவதற்கு என்ஜினியர் தடையாக உள்ளார்.

ஆனால், இன்று அஸ்கார் அலி என்ஜினியரின் பின்னே நின்று ஆதரிப்பவர்கள்தான், இசுலாமிய சமூகத்தின் வாழ்வுரிமை, மத உரிமைகளை நசுக்கக் கூடாது என்பதற்காக எந்தவிதத் தூண்டுதலும் இல்லாமல், எந்தவித ஆதாயமும் தேடாமல் இந்துமதவெறிப் பாசிசத்தை எதிர்த்துப் போராடி வருபவர்கள். இப்படிச் செய்வது இசுலாமிய மதவாத சுயநலவாதிகள் எதுவேண்டுமானாலும் செய்வதற்குக் ''கடவுச் சீட்டு'' வழங்குவதாகாது. ''வாட்டர்'' திரைப்படம் எடுப்பவர்களை ஆர்.எஸ்.எஸ். கும்பல் ஒடுக்குவதை எப்படி எதிர்க்கிறோமோ அதைப் போலத்தான் தஸ்லீமா நஸ்ரீனின் குரல்வளை நசுக்கும் முயற்சியையும் சகித்துக் கொள்ள முடியாது.

விதவைகளுக்கு எதிரான கொடுமை சதி, தீண்டாமை போன்றவை தங்கள் மத உள்விவகாரம் என்று இந்துமத வெறியர்கள் கவசமிட்டுக் கொள்வதை எப்படி அனுமதிக்க முடியாதோ அதேபோலத்தான் மத ஆணை, ஷரீயத் போன்றவை தமது உள்விவகாரம் என்று இசுலாமிய மதவாதிகள் கவசமிட்டுக் கொள்ள முடியாது. சிறுபான்மையினருக்கு மதவழிபாடு சமூக - மத உரிமைகளை மறுக்க முடியாததைப் போலவே, மதச் சீர்திருத்தம், மதமறுப்பு உரிமைகளையும் மறுக்க முடியாது.

● சாத்தன்


படிப்பகம்

www.padippakam.com

*சிறுகதை:*

# சில ராப்பாடிகளும் கழுகுகளும்

◆ இலட்சுமணப் பெருமாள்

ஆத்துல கண்ணுக்கு எட்டமுட்டும் சனங்க துவைக்க பொதி பொதியா துணிக. காஞ்சி கெடுத்த மழை இப்படி பேஞ்சி கெடுத்திருந்தது. காணாத தண்ணிய கண்ட வுடனே சின்னஞ் சிறிசுக கூட ஓடியாடி, ஒரே கும்மரிச்சம். சரசும் செல்லம்மாளும் இஷ்டத்துக்கு பேச முடியாதுன்னுதான் கூட்டத்தை விட்டு தனியே மாலோடைபக் கமா வந்து துவைத்து குளித்துக் கொண்டி ருந்தார்கள். ஆம்பளை சகவாசம் இல்லாத அந்த இடம் சரசுக்கு ரொம்ப பிடிச்சிருந்தது. சுதந்திரமா முங்கு போட்டு நீஞ்சி விளை யாடி குளிச்சாள்.

துவைத்த ரவிக்கையை மஞ்சனத்தி செடிமேலே காயப் போட்டுவிட்டு ஆம்ப ளெக வர்ராகளா என்று கரைமேல் ஏறி சுற்றிப் பார்த்த செல்லம்மாள் சேலையை அவிழ்த்து நன்றாக கும்மினாள். ஒரு நுனியை இடுப்பில் ஒரு சுற்று சுற்றி மறு நுனியை வேலிச் செடியின் ஒரு கொப்பில் கட்டி சேலையை உலர்த்தினாள்.

"என்ன செல்லம்மக்கா ஒண்ணும் பேச்சு மூச்சைக் காணொம்... ம்.... ராத்திரி நடந்ததை நெனச்சா? சரிதான் இதுக்கும் இப்படி ரோசனை பண்ணுனீகன்னா இன்னும் எவ்வளவு கேவலப்பட்ட விசய மிருக்கு தெரியுமா? நீங்க தொழிலுக்கு நேத்து வந்துருக்கீக நானெல்லாம் தொழி லுக்கு வந்த புதுசுல லாரிக்காரங்க நிதாசரி யும் 'எவ்னோ நாளோ ஆன சூட்டையெல் லாம் தணிச்சிட்டு, அரட்டி உருட்டி முந்தி யிலெ இருக்கிறதையும் பிடுங்கிட்டு போயிடுவாங்க. நம்ம துட்டை திரும்ப பிடுங்க மல்லுக்கட்டுறதுலே அவங்க ளுக்கு அலாதி சந்தோசம். கேக்க யாருமில் லேன்னு கூசாம கை நீட்டுவாங்க. மானம் பாத்த காசுக்கு மல்லாடுனம்முனா கூட வா தர்றேன்னு மதுரைக்கு அந்தப் பக்கமா கொண்டு போயி துணிமணிகளை உருவி கிட்டு கெட இப்படியேன்னு போயிரு வாங்க."

"என்ன சரசு அப்பயும் ஆடுமாடுகளை பாக்குற மாதிரியா பாக்கணும் மனுசத் தன் மையில்லாமா?"

"பின்னே முன்னம் மாதிரியா? இப்பத் தான் நெடுக பொட்டச்சிகளுக்கு பஞ்சமே யில்லையே. கோவில் பட்டியில ஆரம்பிச் சா இலுப்பையூரணி முக்குல நிக்கிறாளுக. தோட்டி வேலன்பட்டி விலக்கு, நள்ளிசத் திரம், உப்பத்தூர் வளைவு, ஒடைப்பட்டி பிள்ளையார் கோவில் இதையெல்லாம் தாண்டிதான் நாமிருக்கிற புதுப்பாலத்துக்கு நமக்கு கிராக்கிக வரணும். அந்த இடத்துல நிக்கிறவளுகளையெல்லாம் பாத்தமுன்னா நாமெல்லா எந்த மூலைக்கி? சம்சாரி வீட்டு பொம்பளப் புள்ளகளா? ஒவ்வொண்ணும் கிளிப்போல சும்மா என்னைப்பாரு ஒன்னப் பாருன்னு நிக்குமுங்க. அதை யெல்லாம் கழிச்சிட்டு வர்றவனுக நம்மள மொதல்ல மனுஷிக லிஸ்டிலயாவது சேப்பாங்களா."

"அதானெ சரசு, ஒத்த ஆளு என்னய சீந்தல பாத்துக்கோ. நா ஒரு கொமுரு மாதிரியே அவங்களுக்கு தெரியல" சுரம் குறைந்து ரொம்ப விசனப்பட்டு சொன்னாள் செல்லம்மாள்.

"அதான்க்கா நா அன்னக்கே சொல்ல லையா இன்னுமே இந்த தொழிலுக்கு மூக்குப் போன மூளிகதான் லாயக்கு. வர்ற வனப்பத்தி ராஞ்சனப்படக்கூடாது கொஞ்சங் கூட லொங்கப்படாது. அப்பத் தான் தொழில்ல கொஞ்சனாச்சும் செனாரிச் சி நிக்கெ முடியும்."

ooo

செல்லம்மாளுக்கு நாலு தங்கச்சிமார். மூத்தவ கோணி தவிர மூணும் வளர்ற புள்ளெக. இந்தா இம்புட்டு அம்புட்டுமா நண்டுஞ் சிண்டுகளா. நல்லா திங்கிற வயசு. கோணி இப்பத்தான் சமஞ்சிருக்கா. இவாசமஞ்ச சேதிதான் இப்ப ஊருக்குள்ளே ஒரே சிரிப்பாணி கூத்தா இருக்குது. சூதாடி பொன்னையா கெழவன் அறுபதுக்கு மேல கல்யாணம் முடிச்சி தெரு வழியே பட்ட ணப் பிரவேசம் வந்த கூத்துக்குப் பிறகு கோணி வயசுக்கு வந்தத பெருசா பேசிக் கிட்டிருக்காங்க.

"கிழிஞ்ச ஒரு துண்டுச் சீலைய இடுப் புல மட்டும் கட்டியிருப்பா. மே ஓடம்புல ஒண்ணுமே கிடையாது. அவ்ளோ வளர்ச்சி! தலைமயிரு கூட புறாக் குஞ்சுக்கு இருந்த மாதிரி அங்க ஒண்ணும் இங்க ஒண்ணுமா வளந்திருக்கும். ஊருக்குள்ளெ ஆளாளுக்கு கேலி எகடாசி பேசலாம். அதுக்காக இந்த நேரத்துல அவளுக்கு ஒரு தேறமாச்சும் உளுந்தங்களி கிண்டிக் கொடுக்க வேண்டாமா? முடியலை."

"இப்பொ ஆறுமாசமா தீப்பெட்டி ஆபீஸ்ல வேலை இல்லெ. எல்லா வேலைக் கும் மிஷின் வந்துருச்சாம். ஆயிரம் பேர் செய்யுற வேலைக்கு ஆறுபேர் நின்னா போதுமாம். மொதலாளி வாங்கி தின்ன அட்வான்ஸை கொடுத்துட்டு வீட்டையும் காலி பண்ணுங்கோன்னு நச்சரிக்கிறாரு."

"வேற ஒரு வேலையும் இல்லை. சம்சாரித்தனம் (விவசாயம்) நின்னுபோய் வருசக் கணக்காய்ப் போச்சு. காடுகள்ல கரு வேலமரம் நட்டிட்டாங்க. வெயிலு எந்த மாதிரி அடிச்சதோ அந்த மாதிரி இப்ப மழையும் அடப்பிடிச்சிருச்சி. எப்ப பாத்தா லும் 'கர்ரேர்ன்னு' வானம் அந்து விழுகிற மாதிரி இருக்கு."


"ஐயாவும் சும்மாயிருக்குற ஆளில்லெ. இப்படி ஒரு மாசமா நச்சு நச்சுன்னு தூத்த பெஞ்சிக்கிட்டிருந்தா அவரு என்னம்பார்? கஞ்சி குடிக்காரோ குடிக்கலையோ தெனம் ஒரு கட்டுப் பீடிக்கு துட்டுக் கொடுக்கணும். உடம்பு சரி யில்லாத அம்மாவுக்கு நேரா நேரம் சூடா கொடுக்கணும்னு டாக்டர் சொல்லியிருக் கார். எப்படி ஒழச்ச மனஷி? அவளுக்கு வாய்க்கு ருசியா செஞ்சி போடலேன்னா லும் சுடு சோத்துக்கும் கேடா வரணும்? வடிச்சி நிமுக்கவும் பொடுசுக மூணும் ஆலாப் பறந்துகிட்டு வருது. ஊர்ல இருக்குற கடைகள்ல எல்லாம் கடன் வாங்கியாச்சி. பொன்னக்கா கடையில அந்த ஆம்பள இருந்தாருன்னா 'யம்மா ஒங் குடும்பத்தையும் சேத்து வச்சிக்கிடெ சொல்லுறியா. எனக்கு ஏலாது. வேற எவங் கிட்டயாவது படுத்து கொண்டு வந்து கடன கொடுக்கப் பாரு.' பத்துப் பேரு

> "கோணி இப்பத்தான் சமஞ்சிருக்கா. கிழிஞ்ச ஒரு துண்டுச் சீலைய இடுப்பல மட்டும் கட்டியிருப்பா. மேல் ஒடம்புல ஒண்ணுமே கிடையாது. அவ்ளோ வளர்ச்சி! ஊருக்குள்ளே ஆளாளுக்கு கேலி கெடாசி பேசலாம். அதுக்காக இந்த நேரத்துல அவளுக்கு ஒரு தேறமாச்சும் உளுந்தங் களி கிண்டிக் கொடுக்க வேண்டாமா? முடியலை."



படிப்பகம்

www.padippakam.com



முன்னாலெ சிடு சிடுன்னு விழுகுறாரு. வார வட்டிக்காரர் வாய் வசவுனாலெயே துணிமணிகளை உருவி அம்மணமா நிக்கெ வச்சிர்றார். கைமாத்து கால்மாத்து வாங்குன இடத்துலயும் நல்ல பேர் வாங்க முடியல. அதான் செல்லம்மா ஒரு முடிவுக்கு வந்திருந்தா.

OOO

**கீ**ழக்கடைசியில ரெட்டைப் பனைக்கு பக்கமா சரசோட ஓலை குடிசை வீடு. கொஞ்சங்கூட பயமில்லாம அந்த ஒத்த பொம்பிள தைரியமா இருக்கா. பொண்ண பாத்தா பொம்பளக்கி பொம்பள ஆசைப் படணும் அப்படியிருப்பா. கருகருன்னு முடி பின்னால ஒரு பாகத்துக்கு தொங்கும். கண்ணு முழிய திரச்சி முழிச்சாவலுக்கட்டா யமா கூப்புடுற மாதிரி இருக்கும். மெயின் ரோட்டுல போற இளவட்ட்ங்க அந்த வீட்டுக்கு நேராபோனவுடனேசேக்கைசரி பண்ணிக்கிடுவாங்க. சட்டை பொத்தா னெல்லாம் ஒரு பார்வை பாத்துக்கிட்டு நல்லா நடக்கிறவனும் ஸ்டைலா நடக்கிறதா நெனச்சு காக்கா மாதிரி தத்த ஆரம்பிச்சிருவான். சீட்டியிலேயே காதல் பாடல்கள் ஒலிபரப்பாகும். பொருள்காட்சிக்கு வந்த சந்தோசம்தான் பயகளுக்கு.

''வாங்கக்கா வாங்க. சும்மா வாங்க நானும் பொம்பளதான். நா என்ன வீட்டுக்குள்ளெ வந்தா முழங்கிர்றேனா''

ரோட்டு மார்க்கமா போறவங்க யாரும் பாத்துருவாங்களோங்கிற பயத்துலேயே உள்ளெ போனாள் செல்லம்மாள். ஊருக்குள்ளே ஒண்ணுக்கு முக்கால் அவங்க வங்க தேவையைப் பொறுத்து இந்தச் சோலி தான் நடக்கு. அவங்க சங்கதி வெளியெ தெரியாம சரசு மாதிரி ஆளுகள சீச்சீன்னு ஒதுக்கி வச்சிக்கிடுறாங்க. சரசு கொடுத்த கடுங்காப்பி பசிக்கு ஒரு அணை போட்டு நிறுத்தியது. தம்ளரை கீழே வைத்துவிட்டு ஒரு சின்னச் சிரிப்பு சிரிச்சாள்.

சரசு தன் கதையைச் சொன்னாள்.

''என்னம்மோக்கா எம்பொழப்பு இப்படி ஆகிப் போச்சு. எங்க ஊர்லருந்து சிவகாசிக்கு பயராபீஸுக்கு வேலைக்குப் போன எடத்துல மொதலாளி பழக்கமானான். கட்டிக்கிடுதேமுன்னான். பிறகு வப்பாட்டியா வச்சுக்கிட்டான். இருக்க இருக்க வடக்கெயிருந்து பார்ட்டிக்காரன் வாரான். அவங்கூட குத்தாலம் போ கன்னியாகுமரி போன்னு அனுப்பிவச்சிட்டு இப்ப வருசத்துல ரெண்டு வாட்டி தேடி வாரான். சின்ன வயசுலெயே எங்க அம்மா பயராபீஸ் வெடிச்சதிலே போயிட்டாக்கா. எங்க அய்யா பொம்பள புள்ளய என்னேன்னு சொல்லி வளக்க முடியும்? அம்மாயிருந்த மாதிரி ஆகுமா?

''வயசுக்கு வந்துட்டா வேலைக்குப் போன எடத்துல நல்ல பழக்கம் எங்கே வருது. அதும் பொம்பள கொஞ்சம் 'பச்'ன்னு இருந்துட்டா அதவச்சி காரியஞ் சாதிக்கிற சிநேகிதந்தான் தொயந்தடியா வருது. எப்படியோ பொழப்பு நடக்குக்கா. எவனாவது வர்றான். ஒன்ன சேத்து வச்சிக் கிடுறேன். இனுமே நீதாங்கிறான். கொஞ்ச நாள்தான் பெறகு கண்ணால காங்க முடியாது. சேர்றவனெல்லாம் இதத்தான் சொல்லுவான். எனக்கு 'ப்பூ'ன்னு ஆகிப்போச்சு. அதான் இப்படி தனியா சொந்தம் சுருத்தெல்லாம் விட்டுட்டு வந்துட்டேன். எனக்கு ஒரு பயமும் கிடையாது. இங்க வந்து நம்மள என்ன பண்ணிறப் போறான் புதுசா?''

**கி**ழக்குப் பக்கம் பழுக்க ஆரம்பிச்சது. வெளிச்சம் விழுக விடாம இருட்டு முரண்டு பிடிச்சிக்கிட்டிருந்தது. மதுரைக்கு போற பெரிய ரோட்டுல லாரியும் பஸ்ஸும் எதுத்தெதுத்து 'சர்சர்'ருன்னு பறந்துக்கிட்டிருந்தது. பாலத்து சுவருல செல்லம்மா முந்தானய இழுத்து போத்திக் கிட்டு சேலை நுனியாலே வாயைப் பொத்திகிட்டு உக்காந்திருந்தா. சுத்தி கரிசக் காடுக. வேலி, கள்ளி, கருவேலுமா. ஒசத்தியா வளந்திருந்தது. பாலத்துக்கு இடது பக்கம் ஓரமா லாரிக நாலஞ்சு நின்னுக்கிட்டிருக்க அதுலருந்த டிரைவரும் கிளீனர்களும் எறங்கி பீடி குடிச்சிக்கிட்டு நின்னுக்கிட்டிருந்தாங்க. அவங்களுக்கு நடுவுல மாமாக்காரன் காளப்பாண்டி வாய் நெறய வெத்தல போட்டு துப்பிக்கிட்டு கடுமையா வாய்க்கு வராத வார்த்தையால திட்டிக்கிட்டுருந்தான். அடிக்கொரு தடவை செல்லம்மாவை நெரு நெருன்னு மென்னு



படிப்பகம்

www.padippakam.com

தின்னுர்ற மாதிரி பல்லக் கடிச்சான். ஒந்தி மாதிரி தலைய ஆட்டி 'விடியட்டும் ஒவ்வொருத்திக்கும் பிறந்தநாள் கொண்டாடிர்றேன்'னு கறுவினான்.

புல் லோடோட தெக்கயிருந்து ஒரு லாரி தூக்கச் சடவோட மெல்ல வந்து எல்லா லாரிக்கும் முன்னால போய் நின்னது. வண்டியிலிருந்து எறங்குன கிளீனர் நாலா டயர்களையும் தட்டிப் பாத்தான். சிகரெட்டை பத்த வச்ச டிரைவர் இவர்களப் பாத்து நடந்து வந்தான்.

''என்ன கிராக்கிக நிக்கிதா?''

''ஆமா ரெண்டு இருக்கு. ஒண்ணு உள்ளெ போயிருக்கு. இன்னொன்னு இந்தா இருக்குல்ல.'' செல்லம்மாவைக் காட்டி கூட்டத்திலிருந்து பதில் வந்தது.

பாலத்துப் பக்கமா நடந்து போன டிரைவர் செல்லம்மா மூஞ்சியில பேட்டரி லைட்டை அடிச்சுப் பாத்தான். வேட்டிய தூக்கி சொறிஞ்சிக்கிட்டே லைட்டை அமத்தி அமத்தி அடிச்சுப் பாத்தான். பழையபடி மூஞ்சியை ஒரு திருப்பி திருப்பி பாத்து ஆட்டை இடுப்புல பிடிச்சு எடை நிதானம் பாக்குற மாதிரி நெஞ்சைப் பிணைஞ்சு பாத்து திரும்பி வந்தான். அமைதியாயிருந்த கூட்டத்துக்குள்ள இவனும் போய் நின்னுக்கிட்டு, 'வேற இல்லையா'ன்னான். 'உள்ள போனதுதான் நல்ல உருப்படி. போயி ரொம்ப நேரமாச்சு. இன்னுங் காணொம். நாங்களும் இப்ப ஒரு மணி நேரமா நிக்கோம்.'

''சரி பின்னெ போக வேண்டியதுதான். விடிஞ்சி போச்சு. முந்துன ஆள் வேற நிக்கிறீக. டேய்! கிளி. கண்ணாடிய தொடச்சி விடுறா போவம்'' புதுசா வந்த டிரைவர் கிளம்பினார். ஆமாமா விடிஞ்சு போச்சுல்ல இன்னும் எங்ஙன முடியும்? போக வேண்டியதான்னு எல்லோரும் கிளம்புனாங்க. காளப்பாண்டிக்கு கோபம் அத்து மீறிப்போச்சு. செல்லம்மாவைப் பாத்து ஆத்திரமா அவயம் போட்டான்

''மானங்கெட்ட சிரிக்கிமுண்டெக எந்துட்டுக்கு வெனயா வந்து சேந்தீகளேடி. நாசமாப் போக. இப்ப வந்ததிலெருந்து நாலு நாளாப் பாக்கேன். ஒரு நாளாவது உருப்படியா வருமானம் இல்லெ. ஒங்க பிராடுதனத்த எங்க வந்து காட்டுறீக எனக்கு வெழம் வந்தது, கொன்னு பாலத்துக்கடியிலே புதைச்சிடுவேன் ஆமா.''

''எதுக்குய்யா விடியுற நேரத்துல இப்படி அவயம் போடுறீரு. மெல்லப் பேசி அனுசரிச்சி போயிருய்யா'' அமைதியா சொன்னர் ஒரு டிரைவர்.

''மெல்லப் பேசவா! பெறகென்னய்யா இப்ப ஒரு நாலு நாளா வர்றோமுய்யா. ஒரு

ஆத்துலயிருந்து வந்த செல்லம்மாளை அக்கா அக்கான்னு புள்ளெக மூணும் சேந்து சுத்திக்கிட்டு சேலயப் பிடிச்சி தொங்குனதுக. அதுகளுக்கு இப்ப ரெண்டு நாளா வயிறு நெறஞ்சிருக்கு. சுடச்சுட சாப்பிட்டுக்கிட்டிருந்த அம்மா, ''ஏண்டி கோணி வேலையில்லாம சும்மாதானெ இருக்கா. நீ போற வேலைக்கி அவளெயும் கூட்டிட்டுப் போயேன், அவளுக்குத்தான் வீடு கூட்டி வச்சாச்சில்லே.''

ஆளு கூப்பிட்டுப் போனா பளிச்சின்னு வர்றதில்லெ. இப்ப நீங்க வந்து எவ்வளவு நேரமாச்சு பாத்தீகள்ல. ஒங்க கிட்டெ பத்து ரூபா பீஸ் வாங்கிக்கிட்டு இவளுகளெ அனுப்பிவிட்டா போன எடத்துல இவங்க தொழில் தெறமையெல்லாம் காட்டி மேக்கொண்டு அஞ்சு பத்துன்னு வாங்குறது. பின்னெ என்ன விளங்கும். இப்படியே என்னைய ஆட்டை போட்டு நானும் பாக்குறேன் தெனமும் ரெண்டு ஆள்த்தான் பாக்க முடியுது. அதுக்குள்ளே இந்தா இப்படி பளபளன்னு விடிஞ்சு போகுது. இந்த மயிர்களுக்கு அட்வான்ஸ் வேற. போன தேவடியாளுக்கு ஆயிரம். இந்தா இந்த மூஞ்சிக்கி ஐநூறு என்று சொல்லிக் கொண்டே செல்லம்மாளை ஏறி மிதக்கப் போனான் காளப்பாண்டி. அந்தக் குளிரிலும் பயத்தால் வேர்த்து நடுங்கிப் போய் நின்னாள் செல்லம்மா.

''யோவ்... யோவ்... கூட்டியாந்த எடத்துல கை நீட்டாதய்யா. பாவமில்லயா?''

''பாவமா... இவளுங்களா... இது பொம்பளகளா... இதப்பாவமுன்னு பாத்தா அவ்வளவுதான். போச்சேயா எம் மொதுலு பூராவும் இப்படி தெருவுல போட்டுட்டனே''

புளிய மரத்துக்குப் பின்னாடி தொழில் பாதுகாப்புக்காக ஒரு மஞ்சப் பையில் வைத்திருந்த அரிவாளை எடுத்து கக்கத்தில் இடுக்கிக்கிட்டான்.

''கூட்டுக் களவாணி முண்டெக. இவ வந்தாத்தான் நான் வருவேனுட்டா அவ. இது கல்யாணம் முடிக்காத மூஞ்சியாய்யா இது எவனாவது சொன்னா ஒப்புவானா ஒருத்தஞ் சீந்துறானா இவளெ. சத்தியம் பண்றா சத்தியம். இரு இரு இன்னைக்கி ஒரு முடிவு பண்ணிர்றேன்.''

சத்தம் பெரிசு பெரிசாய் இருக்கவும் ஓடைக்குள்ளிருந்து சரசு ஜோடியோடு வெளியே வந்தாள். கூட வந்தவன் வண்டிய கிளப்பினான். லாரிகள் அடுத்தடுத்து கிளம்பின. ஒருத்தர் முகம் ஒருத்தருக்குத் தெரியும்படியா வெளிச்சம் படர்ந்தது.

''ஏண்டி ஏய் ஒம்மனசுல என்ன நெனச்சிக்கிட்டிருக்கெ. ம்... போயி எம்புட்டு நேரமாச்சு இல்ல என்ன நெனச்சிட்டு திரியுற.''

''என்ன மாமா இப்படி பேசுறீக. பார்ட்டிகிட்டெ நல்லா திருப்தியா இருக்கணும். இல்லென்னா தொடையில சூடு வச்சிருவேன்னு நீங்கதானெ சொல்றீங்க''

''ஏய். சிலுத்தியா பேசுற நீயி.. ஏண்டி வந்தவங்கிட்டெ நல்லாயிருந்து பிள்ளப் பெறச் சொன்னனாக்கும் ஒன்னய! இல்லெ பிள்ளை பெத்து தான்னு சொன்னாடி...'' சரசுவின் தலைமுடியைப் பிடித்து அரிவாபெடாங்கால் பிட்டத்திலேயே அடித்தான் காளப்பாண்டி.

ooo

ஆத்துலயிருந்து வந்த செல்லம்மாளை அக்கா அக்கான்னு புள்ளெக மூணும் சேந்து சுத்திக்கிட்டு சேலய பிடிச்சி தொங்குனதுக. அதுகளுக்கு இப்ப ரெண்டு நாளா வயிறு நெறஞ்சிருக்கு. சுடச்சுட சாப்பிட்டுக்கிட்டிருந்த அம்மா, ''ஏண்டி! கோணி வேலையில்லாம சும்மாதானெ இருக்கா. நீ போற வேலைக்கி அவளெயும் கூட்டிட்டுப் போயேன்' அவளுக்குத்தான் வீடு கூட்டி வச்சாச்சில்லெ'

'ஆமக்கா நானும் வாரேன். ரெண்டு பேரு வரும்படின்னா ஒத்தக்கடனெ அடைக்கலாமுள்ள' அக்காவின் நாடியைப் பிடித்துக் கெஞ்சினாள் கோணி. அவளைப் பார்த்ததும் பல நினைவுகளில் கண்ணீர் விட்டாள் செல்லம்மாள்.

இருக்க இருக்க வானம் ரொம்ப இருட்டிக்கிட்டு வந்தது. வெளியே காளப்பாண்டி அட்வான்ஸை வசூல் பண்ணுவதற்காக நின்று கொண்டிருந்தான்.

படியுங்கள்
புதிய ஜனநாயகம்
* மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு
* தனிஇதழ்: ரூ. 5.00.
ஆண்டுச் சந்தா ரூ. 120.00
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.



படிப்பகம்

www.padippakam.com

சென்ற இதழ் தொடர்ச்சி...

# ஸ்டாலின் மீதான அவதூறு: ஹிட்லர் முதல்...

ஜெர்மானிய நாஜிப்பேரரசை கிழக்கே விரிவுபடுத்தும் நோக்கத்தில் சோவியத் ஒன்றியத்துக்கும் ஸ்டாலினுக்கும் எதிரான அவதூறுப் பிரச்சாரத்தை உலகம் முழுவதும் பரப்பும் இட்லரின் திட்டத்தில் அமெரிக்க செய்தி ஏடுகளின் ஏகபோக முதலாளி வில்லியம் ரடாலப் ஹெர்ஸ்ட் இணைந்து கொண்டான். "ஸ்டாலின் தலைமையில் போல்ஷ்விக்குகள் மேற்கொண்டக் கட்டாய வெளியேற்றம் மற்றும் திட்டமிட்ட பெருந்திரள் படுகொலைகளின் விளைவாக உக்ரைனில் பஞ்சம் - பட்டினிச் சாவுகள் ஏற்பட்டு பல பத்து இலட்சம் பேர் மாண்டனர்'' என்கிற பச்சைப்பொய் ஹெர்ஸ்டின் பத்திரிக்கைகளில் வரத் துவங்கின.

இந்த விடயம் பற்றிய உண்மையே முற்றிலும் வேறானது. 1930-களின் ஆரம்பத்தில், சோவியத் ஒன்றியத்தில் உண்மையில் நடந்தது ஒரு மாபெரும் வர்க்கப் போராட்டம். அதில் பணக்கார நிலப்பிரபுக்களுக்கு எதிராக எழுச்சியுற்ற நிலமற்ற, ஏழை விவசாயிகள் கூட்டுடமைக்கானதொரு போராட்டத்தைத் துவங்கினர்; அது "கோல்கோசஸ்" எனப்படும் கம்யூன்களை நிறுவுவதற்கான போராட்டம்.

இம்மாபெரும் வர்க்கப் போராட்டத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏறக்குறைய 12 கோடி விவசாயிகள் ஈடுபட்டிருந்தனர். அது விவசாய உற்பத்தியில் சற்றே உறுதியற்ற நிலையை ஏற்படுத்தியது; சில பகுதிகளில் ஓரளவு உணவுப் பற்றாக்குறையையும் ஏற்படுத்தியது. அதன் விளைவாகத் தொற்று நோய்களுக்குப் பலியாவோர் எண்ணிக்கையைப் பெருக்கியது. அந்த நேரத்தில் உலகம் முழுவதும் இம் மாதிரியான நோய்கள் பொதுவில் எங்கும் இருந்தன என்பது கவனிக்க வேண்டிய ஒன்று.

1918-க்கும் 1920-க்கும் இடையில் பரவிய "ஸ்பெயின் ஃப்ளூ" என்ற தொற்று நோய் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் 2 கோடி மக்களின் சாவுக்குக் காரணமாக இருந்தது. ஆனால் தமது சொந்தக் குடிமக்களின் சாவுக்காக அந்நாடுகளின் அரசுகள் மீது யாரும் குற்றஞ்சாட்டவில்லை. இந்த வகையான தொற்றுநோய்களைச் சந்தித்தபோது அந்த அரசாங்கங்கள் உண்மையில் எதுவும் செய்ய முடியவில்லை. இரண்டாம் உலகப் போரின் போது "பென்சிலின்" மருந்து கண்டுபிடிக்கப்பட்டது; அப்போது மட்டுமே இம்மாதிரியான தொற்று நோய்களைக் கடுமையாகக் கட்டுப்படுத்த முடிந்தது. 1940-களின் இறுதிவரை அதுவும்கூட பொதுவில் தாராளமாகக் கிடைக்கக் கூடியதாக இல்லை.

கம்யூனிஸ்டுகள் திட்டமிட்டு, வேண்டுமென்றே உருவாக்கிய ஒரு பஞ்சத்தால் உக்ரைனில் பலபத்து இலட்சம் பேர் மாண்டதாக எழுதிய ஹெர்ஸ்டின் பத்திரிகைக் கட்டுரைகள் கற்பனையான அந்தக் கோரத்தைப் பற்றி பரபரப்பூட்டும் அதிர்ச்சியூட்டும் விவரங்களை விலாவாரியாக எழுதின. தமது கட்டுக் கதைகளை உண்மையானவை என்று காட்டுவதற்கான எல்லா வழிமுறைகளையும் பின்பற்றி எழுதின. அதன் மூலம் முதலாளித்துவ உலகின் பொதுக் கருத்தை சோவியத் ஒன்றியத்துக்கு எதிராகத் திருப்புவதில் வெற்றியும் பெற்றன. இதுதான் சோவியத் ஒன்றியத்தில் பலபத்து இலட்சம் பேர் மாண்டு போனதாக முதற்பெரும் புனைச்சுருட்டு தயாரிக்கப்பட்டதன் தோற்றுவாய்.

மேற்குலகின் பத்திரிக்கைகள் கட்டவிழ்த்து விட்ட இந்த புனைச் சுருட்டுகள் காரணமாக எழுந்த எதிர்ப்பு அலையில் சோவியத் ஒன்றியம் தெரிவித்த மறுப்புரைகளையும் ஹெர்ஸ்டின் பத்திரிக்கைகளுடைய பொய்கள் பற்றிய முழுமையான அம்பலப்படுத்தல்களையும் யாருமே காது கொடுத்துக் கேட்கவில்லை. இந்த நிலைமை 1934 முதல் 1987 வரை நீடித்து நிலவியது.

சோவியத் ஒன்றியம் மற்றும் ஸ்டாலின் பற்றிய மேற்குலகின் இந்தப் புனைச் சுருட்டுக்கள் எல்லாம் வெறும் அவதூறுகள்தாம் என்பதை கனடா நாட்டுப் பத்திரிக்கையாளர் டக்ளஸ் டோட்டில் எழுதி 1987-இல் டோராண்டோ நகரில் பதிப்பித்த நூலாகிய "மோசடி, பஞ்சம் மற்றும் பாசிசம் - இட்லர் முதல் ஹார்வார்டு வரை உக்ரைன் பெருந்திரள் படுகொலை என்ற புனைவு" அம்பலப்படுத்தியது. அதுவரை 50 ஆண்டுகளுக்கு மேலாக சோவியத் ஒன்றியத்தின் சோசலிசம் பற்றிய ஒரு எதிர்மறையான கருத்தைக் கொண்டிருக்கும்படி தலைமுறை தலைமுறையாக உலக மக்களுக்கு அவதூறுகள் மட்டுமே தீனியாகப் போடப்பட்டன.

கலிபோர்னியா, பிவெர்லி குன்றுகளில் உள்ள தனது மாளிகையில் 1951-இல் வில்லியம் ஹெர்ஸ்ட் இறந்தான். அவன் தனக்குப் பின் ஒரு பெரிய மக்கள் - தொடர்புப் பேரரசை விட்டுச் சென்றான். அது இந்நாள் வரை உலகம் முழுவதும் பிற்போக்குச் செய்திகளைப் பரப்புவதைத் தொடர்கிறது. ஹெர்ஸ்டின் தொழிற் கழகம் உலகின் மிகப்பெரிய தொழில் நிறுவனங்களில் ஒன்றாக விளங்குகிறது; அது 15,000 பேர் பணிபுரியும் 100 கம்பெனிகளைக் கொண்டிருக்கிறது. இன்று செய்தியேடுகள், வாரமாத இதழ்கள், நூல்கள், வானொலி, வானொளி, வானொளி பிணைப்பு, செய்தி சேவைகள் மற்றும் பன்முக ஊடகம் ஆகியவற்றை உள்ளடக்கியது ஹெர்ஸ்டின் பேரரசு.

இரண்டாம் உலகப் போரில் நாஜி ஜெர்மனி தோல்வி அடைந்ததோடு உக்ரைன் பற்றிய நாஜி கட்டுக் கதைப் பிரச்சாரம் நின்று போய்விடவில்லை. அந்த நாஜிப் புனைச் சுருட்டுகள் எல்லாம் அமெரிக்காவின் சி.ஐ.ஏ. மற்றும் பிரித்தானிய எம்-15 ஆகிய உளவு அமைப்புகளால் கையேந்திக் கொள்ளப்பட்டன. அவைதான் சோவியத் ஒன்றியத்துக்கு எதிரான பிரச்சாரப் போரில் ஒரு முதன்மையான இடத்தை எப்போதும் உறுதிப்படுத்தின. உக்ரைனில் பலபத்து இலட்சம் பேர் பட்டினியால் மாண்டார்கள் என்கிற கதை மீதுதான் இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு தலை விரித்தாடிய கம்யூனிச எதிர்ப்பு மெக்கார்த்தியம் கூட காலூன்றி நின்றது.

1933-இல் இந்தப் பொருள் மீது அமெரிக்காவில் ஒரு புத்தகம் பதிப்பிக்கப்பட்டது. "கிரம்ளின் மாளிகையின் கருப்பு நடவடிக்கைகள்" என்பது அந்நூலின் தலைப்பு. அமெரிக்காவில் வாழ்ந்த உக்ரைன் அகதிகள்தான் இந்நூலைப் பதிப்பிக்க நிதியளித்தார்கள்; இவர்கள் அனைவரும் இரண்டாம் உலகப் போரில் நாஜிக்களின் பங்காளிகளாகச் செயல்பட்டவர்கள்; இவர்களைத்தான் "ஜனநாயகவாதிகள்" என்று உலகின் முன் அடையாளங்



படிப்பகம்

www.padippakam.com

காட்டிய அமெரிக்க அரசாங்கம் அரசியல் தஞ்சமளித்தது.

அமெரிக்க அதிபராக ரீகன் தேர்ந்தெடுக்கப்பட்டபோது அதாவது 1980-களில், உக்ரைனில் பல பத்து இலட்சம் பேர் மாண்டார்கள் என்கிற கம்யூனிச எதிர்ப்புப் பிரச்சாரத்தை மீண்டும் உயிர்ப்பித்தார்; 1984-இல் ஒரு ஹார்வார்டு பேராசிரியர் "ரஷ்யாவில் மனித வாழ்வு" என்கிற ஒரு நூலைப் பதிப்பித்தார்; இதுவும் 1934-இல் ஹெர்ஸ்ட் பத்திரிக்கைக் குடும்பத்தால் உற்பத்தி செய்யப்பட்ட எல்லாக் கட்டுகதைகளையும் திரும்பச் சொன்னது. 1930-இல் நடந்ததாகக் கூறப்பட்ட நாஜிப் புளுகு 1984-இல் மீண்டும் உயர்ப்பிக்கப் பட்டதை நாம் கண்டோம்; ஆனால் இந்த முறை "மதிப்புக்குரிய" ஒரு அமெரிக்க பல்கலைக் கழகம் என்கிற மூடு திரையின் பின்னே வந்தன. ஆனால் இதோடு நிற்கவில்லை.

இதே பொருள் குறித்து "சோகத்தின் அறுவடை" என்ற தலைப்பில் 1986-இல் இன்னொரு நூல் வெளிவந்தது. இந் நூலின் ஆசிரியர் கலிபோர்னியாவின் ஸ்டாம் ஃபோர்டு பல்கலைக்கழகப் பேராசிரியராக உள்ள ராபர்ட் கான்குவஸ்ட். இவர் பிரித்தானிய உளவுத்துறையின் முன்னாள் உறுப்பினர்! இந்த வேலைக்காக உக்ரைன் தேசிய அமைப்பிடம் இருந்து 80,000 அமெரிக்க டாலர் பணத்தை கான்குவஸ்ட் பெற்றார்; அதோடு இந்நூலின் புளுகுகளை அடிப் படையாகக் கொண்டு 1986-இல் தயாரிக்கப்பட்ட "அவலத்தின் அறுவடை" என்னும் திரைப்படத்துக்காக வும் அவர் ஏராளமாகப் பணம் பெற்றார்.

1930-களில் நாஜிக்கள் கட்டுக்கதை பரப்பத் துவங்கியில் இருந்து 1986 இல் இந்த நூல் வெளியானதற்குள் உக்ரைன் பட்டினிச் சாவுகளின் எண்ணிக்கையை 150 இலட்சமாக ஏற்றி விட்டார்கள்!

எவ்வாறாயினும் சரி, அமெரிக் காவின் ஹெர்ஸ்ட் பத்திரிக்கைக் குடும் பத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்டு, புத்தகங்கள், திரைப்படங்களில் கிளிப் பிள்ளைகளைப்போல திரும்பத் திரும்பச் சொல்லப்பட்ட பலபத்து இலட்சம் பேர் உக்ரைன் பட்டினிச் சாவுக்கு பலியானார் கள் என்பதே முழுக்க முழுக்கக் கட்டுக் கதையாகும்.

"பித்தலாட்டம், பஞ்சம் மற்றும் பாசிசம் - இட்லர் முதல் ஹார்வார்டு வரையிலான உக்ரைன் படுகொலைகள் என்கிற புனை கதை" என்கிற நூலில் இவையெல்லாம் வெறும் கட்டுக் கதைகள் தாம் என்பதை கனடிய பத்திரிக்கையாளர் டக்ளஸ் டோட்டில் தனது நூலில் மிகவும் கவனமாகவும் சிரத்தையோடும் அம்பலப் படுத்தியுள்ளார்.

பத்திரிக்கையாளர் டோட்டில் நிரூபித்துள்ள வேறு பலவற்றுள் முக்கியமானவை சோவியத் ஒன்றியத்தில் நடந்ததாகச் செய்யப்பட்ட பிரச்சாரத்தில் பயன்படுத்தப்பட்ட புகைப்படங்கள் பற்றியவை. உண்மையில் அவை யெல்லாம் 1922-இல் பிரசுரிக்கப்பட்ட புகைப்படங்கள். 1918-21 உள் நாட்டுப் போரின் போது சோவியத் ஒன்றியத்தின் மீது எட்டு அந்நிய நாடுகளின் இராணுவங்கள் படையெடுத்தபோது நிகழ்ந்த போர் மற்றும் பட்டினி நிலைமைகளில் இலட்சக் கணக்கான



மக்கள் மடிந்து போயினர்; அந்தச் சமயத்தில் அடுக்கப்பட்ட குழந்தைகள் பசி - பட்டினியில் வாடிக் கிடக்கு கோரமான புகைப்படங்கள்; அவற்றைத் தான் 1930-களில் நடந்த பட்டினிச் சாவுகள் என்பதாக நாஜிக்களும் மற்ற கம்யூனிச எதிரிகளும் பிரசுரித்திருந்தனர்.

1934 பஞ்சம் பற்றிய பல உண்மை விவரங்களை டக்ளஸ் டோட்டில் வெளிக் கொண்டு வந்து, ஹெர்ஸ்ட் குடும்பப் பத்திரிக்கைகள் பிரசுரித்த கலப்படப் பொய்களை அம்பலப்படுத்தினார். உக்ரைன் பஞ்சப் பூமியிலிருந்து நெடுநாட்களாக செய்திகளும் புகைப் படங்களும் அனுப்பிய ஒரு பத்திரிக்கையாளர் தாமஸ் வாக்கர் எனப்படுபவர்; இந்த மனிதர் உக்ரைனில் ஒருபோதும் கால் வைத்ததே கிடையாது. மாஸ்கோவில் கூட ஒரு ஐந்தே நாட்கள்தான் தங்கி இருந்தார்.

இந்த உண்மையை "தி நேசன்" என்ற ஒரு அமெரிக்கப் பத்திரிக்கையின் மாஸ்கோ நிருபர் **லூயிஸ் பிஷர்** தெளிவுபடுத்தினார். **எம். பரோட்** என்ற நிருபர்தான் ஹெர்ஸ்ட் குடும்பப் பத்திரிக்கையின் உண்மையான மாஸ்கோ நிருபர்; இவர், 1933-இல் சோவியத் ஒன்றியம் மிகச் சிறந்த அறுவடையைச் சாதித்துள்ளது என்றும் உக்ரைன் மிகவும் முன்னேறியுள்ளது என்றும் ஹெர்ஸ்டுக்கு அனுப்பிய செய்திகள் பிரசுரிக்கப் படாமலேயே இருட்டடிப்புச் செய்யப் பட்டன, என்பதைக் கூட பிஷர் தெளிவு படுத்தினார்.

டோட்டில் மேலும் ஒன்றை நிரூபிக்கிறார். உக்ரைன் பஞ்சம் எனச் சொல்லப்பட்டதின் மீதான செய்திகளை எழுதிய "தாமஸ் வாக்கர்" என்ற நிருபரின் உண்மைப் பெயர் **ராபர்ட் கிரீன்**; இவன் அமெரிக்காவின் கொலராடோ மாநிலச் சிறையில் இருந்து தப்பிய ஒரு கிரிமினில் கைதி. இந்த வாக்கர் எனப்படும் கிரீன் அமெரிக்கா திரும்பியவுடன் கைது செய்யப்பட்டு வழக்கு மன்றத்தில் நிறுத்தப்பட்டபோது, தான் உக்ரைனுக்கு ஒருபோதும் சென்றதில்லை என்று ஒப்புதல் வாக்கு மூலம் அளித்தான். ஸ்டாலினால் உருவாக்கப்பட்ட ஒரு பஞ்சத்தில், 1930-களில் உக்ரைனில் ஏற்பட்ட பட்டினியினால் பல பத்து இலட்சம் பேர் மடிந்து போனார்கள் என்கிற இந்தப் பொய்களெல்லாம் கடைசியாக, 1987-இல் பத்திரிக்கையாளர் டக்ளஸ் டோட்டில் மூலம் அம்பலப்பட்டுப் போனது.

ஹெர்ஸ்ட், நாஜிக்கள், போலீசு உளவாளி கான்குவஸ்ட் மற்றும் பலரும் பலபத்து இலட்சம் மக்களின் உயிரைப் பற்றி பித்தலாட்டம் செய்து, கட்டுக் கதைச் செய்திகளை பரப்பியிருக்கிறார்கள். இன்றும் கூட, வலது சாரி சக்திகளின் சம்பளப் பட்டியிலில் உள்ள ஆசிரியர்கள் எழுதிப் புதிதாகப் பிரசுரிக்கப்படும் நூல்களில் நாஜி ஹெர்ஸ்டின் கட்டுக் கதைகள் மீண்டும் மீண்டும் எழுதப் படுகின்றன.

அமெரிக்காவின் பல மாநிலங்களில் ஒரு ஏகபோக நிலைவகிக்கும், உலகம் முழுவதும் செய்தி முகாமைகளைக் கொண்ட ஹெர்ஸ்டின் குடும்பப் பத்திரிக்கைகள் நாஜி கெஸ்டபோ என்ற இட்லரின் அரசியல் உளவுப் படையின் பெரும் பிரச்சார பீரங்கியாக விளங்கின. ஏகபோக மூலதனம் ஆதிக்கம் வகிக்கும் இந்த உலகில், ஹெர்ஸ்டின் செய்தி ஊடகம் உலகம் முழுவதுமுள்ள பல பத்திரிக்கைகள், வானொலி நிலையங்கள், வானொளி அலைவரிசைகள் மூலம்



படிப்பகம்

www.padippakam.com

# ஸ்டாலின் எதிர்ப்பில் ஒரு தமிழ்நாட்டு வானவில் கூட்டணி!

ஸ்டாலினுக்கு எதிரான அந்த மேலைநாட்டு அவதூறுகளை அப்படியே இறக்குமதி செய்து இங்கே பரப்புவதற்கென்று, ஒரு பெருங்கூட்டம் அல்லும் பகலும் அலைகிறது. தமது சித்தாந்த சாய்வுகள் காரணமாக எதிரெதிர் முகாம்களில் நின்று கடுமையாக மோதிக் கொள்பவர்களைப் போல தோன்றும் இந்தக் கூட்டத்தினர் ஸ்டாலின் மற்றும் கம்யூனிச எதிர்ப்பில் மட்டும் ஒரு வானவில் கூட்டணி அமைத்துக் கொண்டுள்ளனர். "உன்னதமான கலை - இலக்கியம் - சினிமா - அரசியல்", "மனித நேயமிகு தரமான படைப்புகள்" என்கிற பெயரில் இவர்கள் பதிப்பிக்கும் எல்லா நூல்களிலும் இழையோடுவது ஸ்டாலின் எதிர்ப்புதான்!

இந்த வானவில் கூட்டணியில் ஒரு கோடியில் நிற்பவர்கள், இரண்டு போலிக் கம்யூனிஸ்டு கட்சிகள் மற்றும் அவற்றின் குலக்கொழுந்துகளான மொகித்சென், ஓம்கார், மணியரசன் போன்றவர்கள் தலைமையிலான குழுக்கள். இவர்கள் எல்லாம் தமது போலிக் கம்யூனிச திரிபுவாத சித்தாந்தத்தை நியாயப் படுத்தும் நோக்கத்தோடு ஸ்டாலின் எதிர்ப்பு அவதூறுகளைப் பரப்புகின்றனர்.

இவர்கள் அனைவரும் தத்துவம், அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றில் மார்க்சிய - லெனினிய உட்கிடக்கையை நீக்கிவிட்டு, பெயரில் மட்டுமே கம்யூனி சத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது, சோசலிசத்தை நிர்மாணிப்பது ஆகியவற்றை நிராகரித்து விட்டார்கள். பல கட்சி நாடாளுமன்ற ஜனநாயகத்தின் கீழ் சந்தை சோசலிச சமுதாயம் காண்பதுதான் அவர்களின் இலட்சியம். அதற்கேற்ப கம்யூனிச சித்தாந்தத்தையும் திரித்துக் கொண்டுள்ளனர். இதையே அவர்கள் மண்ணுக்கேற்ற மார்க்சியம் என்கிறார்கள். இதன் சாரம் குருச்சேவ், பிரஷ்நேவ், கோர்பச்சேவ் மற்றும் யூரோ கம்யூனிசம் போதித்தவைதான். இந்த போதனைகள் எல்லாம் ஸ்டாலின் மீதான அவதூறுகளை அடித்தளமாகக் கொண்டு எழுப்பப் பட்டவை. எனவே, ஸ்டாலின் மீதான அவதூறுகளைக் கேள்வி முறையின்றி ஏற்பதோடு, கம்யூனிசப் புரட்சியாளர்களை எதிர்ப்பதற்காக தாமே அவற்றைப் பிரச்சாரமும் செய்கின்றனர்.

இந்த வானவில் கூட்டணியின் இன்னொரு கடைக் கோடியில் நிற்பவர்கள் சுந்தர ராமசாமி, ஜெயமோகன், காலச்சுவடு - கணையாழி கும்பல். ஆர்.எஸ்.எஸ். சார்பு பார்ப்பன சனாதன சித்தாந்தத்தை வரித்துக் கொண்டுள்ள இக்கும்பல் கலை இலக்கிய முகத்திரை போட்டுக் கொண்டு, மனிதநேயம், ஜனநாயகத்தின் பெயரால் ஸ்டாலின் மற்றும் கம்யூனிச எதிர்ப்பு அவதூறுகளைப் பரப்புகிறார்கள். சுந்தரராமசாமியின் ஜே.ஜே. சில குறிப்புகளின் அடியொற்றி பின் தொடரும் நிழலின் குரலாக ஜெயமோகன் அத்தகு அவதூறு பரப்பும் வேலையைத் தொடர்ந்துள்ளார். தனது நாவலின் ஓரிடத்தில் ஒன்றரைக் கோடி விவசாயிகளைக் கொன்று, உக்ரெய்னில் பல பத்து இலட்சம்

கெஸ்டபோவின் புளுகுகளை உண்மையெனப் பரப்பிட முடிந்தது.

கெஸ்டபோ ஒழிந்து போனபின், அமெரிக்க சி.ஐ.ஏ. வைப் புதிய புரவலனாகக் கொண்டு, சோவியத் ஒன்றியத்தின் சோசலிசத்துக்கு எதிரான அசிங்கமான பிரச்சாரப் போர் தடையின்றி நடந்தது. அமெரிக்கச் செய்தி ஊடகத்தின் கம்யூனிச எதிர்ப்புப் பிரச்சாரம் கொஞ்சமும் குறைவின்றி நடந்தது. வழக்கம் போல தொடர்ந்த இந்த வேலை, முதலில் நாஜி உளவுப்படை கெஸ்டபோவின் ஆணையாலும், பின்னர் அமெரிக்க சி.ஐ.ஏ.வின் ஆணையிலும் நீடித்தது; நீடிக்கிறது.

### ராபர்ட் கான்குவஸ்ட்

முதலாளிய செய்தி ஊடகம் மிகவும் பரவலாக மேற்கோள் காட்டும் ராபர்ட் கான்குவஸ்ட் எனப்படும் இந்த மனிதர், முதலாளிய வர்க்கத்தின் நம்பகமான - உண்மையான பூசாரியான இந்த மனிதர் இந்தச் சமயத்தில் நமது குறிப்பான கவனத்துக்குரியவராக உள்ளார். சோவியத் ஒன்றியத்தில் இலட்சக் கணக்கானோர் மடிந்ததைப் பற்றி மிகமிக அதிகமாக எழுதிய இரண்டு ஆசிரியர்களில் ஒருவர் ராபர்ட் கான்குவஸ்ட். இரண்டாம் உலகப் போரில் இருந்து சோவியத் ஒன்றியம் குறித்த எல்லாப் புனைக் கதைகளையும் பொய்களையும் உண்மையில் உருவாக்கியவர் இவர்தான். "மாபெரும் பயங்கரம்" (1969) "சோகத்தின் அறுவடை" ((1986) ஆகிய இரண்டு நூல்கள் மூலம் முக்கியமாக அறியப்பட்டவர்தான் கான்குவஸ்ட்.

குலாக்குகள் எனப்படும் நிலப் பிரபுகளுக்கான உழைப்பு முகாம்களிலும், 1936-38 விசாரணையின் போதும், உக்ரைன் பஞ்சத்தாலும் இலட்சக் கணக்கானோர் மாண்டு போனதாக கான்குவஸ்ட் எழுதுகிறார். இவர் தமது தகவல் மூலாதாரங்களாக அமெரிக்காவில் அகதிகளாக வாழும் வலதுசாரி கட்சிகளைச் சேர்ந்த உக்ரைனியரைப் பயன்படுத்திக் கொண்டுள்ளார்; இவர்கள் எல்லாம் இரண்டாம் உலகப் போரில் நாஜிக்களுடன் கூட்டுறவாடியவர்கள்.

கான்குவஸ்டின் நாயகர்கள் எல்லாம் உக்ரைனில் வாழ்ந்த யூதச் சமுதாயத்துக்கு எதிராக 1942-இல் நடந்த படுகொலைகளில் தலைமை யேற்றுப் பங்காற்றிய போர்க் குற்றவாளிகள். இவர்களில் ஒருவரான மைக்கேலா எலபிட் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஒரு போர்க் குற்றவாளியெனத் தண்டிக்கப் பட்டவர். இந்த எலபிட், நாஜி ஆக்கிரமிப்பின்போது எல்வோவ் நகரத்தின் போலீசுத் தலைவனாக இருந்தான்; 1942-இல் நடந்த யூதப் படுகொலை பயங்கரத்துக்குத் தலைமை யேற்றவன். 1949-இல் (சி.ஐ.ஏ.வால்) அவதூறு பரப்பும் ஊற்றுமூலமாகப் பணியாற்றினான்.

கான்குஸ்டினுடை நூல்களின் கரு கம்யூனிசத்துக்கு எதிரான வன்முறையும் வெறியும் நிறைந்தது. "1932-க்கும் 1933-க்கும் இடையில் சோவியத் ஒன்றியத்தில் ஏற்பட்ட பட்டினிச் சாவுகளின் எண்ணிக்கை 50 முதல் 60 இலட்சம் வரையிலானவை. அவற்றில் பாதி அளவு உக்ரைனில் ஏற்பட்டவை", என்று கான்குவாஸ்ட் தனது 1969 நூலில் சொல்கிறார். ஆனால், ரீகன் கால கம்யூனிச எதிர்ப்புப் பிரச்சாரத்தின் போது அதாவது 1983-இல் அதே பஞ்சம் 1937 வரையிலானது என்று நீட்டிக்கிறார்; பஞ்சத்துக்குப் பலியானவர்களின் எண்ணிக்கையை 140 இலட்சமாக ஊதிப் பெருக்குகிறார்!

இம்மாதிரியான புளுகுக்காக அவருக்கு நல்ல வெகுமதி கொடுக்கப் பட்டது; சோவியத் படையெடுப்புக்குத் தயாராகும்படி அமெரிக்க மக்களை அறைகூவி அழைக்கும் தனது அதிபர் தேர்தல் பிரச்சார சரக்குகளை எழுதித் தரும்படி, கான்குவஸ்டுக்கு ரீகன் (1988-இல்) பொறுப்பு ஒப்படைத்தார். "ரஷ்யர்கள் படையெடுக்கும்போது என்ன செய்வது - உயிர் பிழைத்திருப்பவர்களுக்கான ஒரு கையேடு" என்பது கான்குவஸ்ட் எழுதிய உரையின் தலைப்பு! ஒரு வரலாற்றுப் பேராசிரியரிடமிருந்து என்ன வித்தியாசமான சொற்கள் பாருங்கள்!

உண்மையில் வித்தியாசமானவை



படிப்பகம்

www.padippakam.com

பேர் சாவுக்குக் காரணமான பஞ்சத்தை, ஸ்டாலினது சோவியத் ரசியா ஏற்படுத்தியதாக ஜெயமோகன் எழுதுகிறார். மேலும் ஸ்டாலினது அரசாங்கத்தினால் தேசத்து மக்களில் பாதிப்பேர் எந்தவித விசாரணையும் இல்லாமல் புழுப்பூச்சிகள் மாதிரி அழிக்கப்பட்டதாகவும் மீதிப் பேர் சொந்த வீடுகளில் சிறை வைக்கப்பட்டதாகவும் எழுதுகிறார்.

அடுக்கடுக்கான இந்த அவதூறுகளுக்கு என்ன ஆதாரம்? பிரிட்டிஷ் உளவுப் படையின் சம்பளப்பட்டியலில் இருந்த ஆர்தர் கீஸ்லர் எழுதிய 'நடுப்பகலில் இருட்டு' என்ற நூல். அப்புறம் 50களில் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டு மார்த்தாண்டம் சந்தையில் அனாதையாக பிச்சைக்காரனாக இறந்த இளம் கவிஞனின் கதையை ஜெயமோகனின் அம்மா சொன்னாராம். அதை வைத்து ஜெயமோகன் பின்னியவை தாம் ஆதாரங்கள்! அந்த இளங் கவிஞனுக்கு ரசிய மக்கள் தொடர்பு அமைச்சகத் தகவல்களோடு ஒரு இரகசியக் கடிதம் வந்ததாம்; இலக்கியவாதிக்குரிய மனம் இருந்ததால் ஒரு ஆதாரமும் இல்லாமலேயே அது உண்மை என்று உறுதியாகத் தெரிந்ததாம்; மேற்கொண்டு தகவல்களை மேற்கத்திய மீடியா வழியே திரட்டி எழுதிவிட்டாராம்; அதைத் தெரிந்து கொண்ட கட்சி வெளியேறி விட்டதாம்; இவைதாம் ஜெயமோகனும் அவர் மூலமாக சுந்தரராமசாமியும் தரும் தகவல்கள்.

ஸ்டாலினுக்கு எதிரான அவதூறுகளை மேற்கத்திய செய்தி (மீடியா) ஊடகம் எப்படித் திட்டமிட்டு உருவாக்கிப் பரப்பியது என்பதை இத்தொடர் நிரூபிக்கிறது; அதே மேற்கத்திய செய்தி ஊடகம்தான் ஜெயமோகன் போன்ற கம்யூனிச - ஸ்டாலின் எதிரிகளுக்கான ஆதாரமாகவும் இருக்கிறது. ஆனால் ஜெயமோகன், சுந்தரராமசாமிகளின் நோக்கம் ஸ்டாலின் எதிர்ப்பு மட்டுமல்ல. அதே அவதூறு களைக் கொண்டு மாவோ, கமால் பாஷா, கரிபால்டி போன்ற புரட்சிகர, ஜனநாயக தலைவர்களைக் கூட இடி அமீன், இட்லர் போன்ற பாசிச சர்வாதிகாரிகளோடு இணைத்து ஏசுகின்றனர். இட்லரைக் குருவாக ஏற்றுக் கொண்டவர் ஆர்.எஸ்.எஸ். தலைவர் கோல்வால்கர்; இட்லரின் ஆட்சிக்கு ஆசி வழங்கியவர் 12-வது போப் பயஸ். இருவரும் தத்தமது இந்துத்துவத்தையும் கிறித்துவத்தையும் காப்பதற்கு, நாஜிக்களின் யூதப்படுகொலைகளை மூடிமறைக்கவும், ஸ்டாலின் மீது அவதூறுகளைப் பரப்பினர்.

ஸ்டாலின் எதிர்ப்பு வானவில் கூட்டணியின் மேற்கண்ட இரு கோடிகளுக்கு இடையே நிற்பவர்கள் கோவை ஞானி - எஸ்.என் நாகராசன் தலைமையிலான நிகழ் - பயணம் சிற்றேடுகளின் குழு. மற்றும் அ.மார்க்ஸ், ரவிக்குமார் தலைமையிலான நிறப்பிரிகை - தலித் சிற்றேடுகளின் குழு. மற்ற ஸ்டாலின் எதிர்ப்பு உதிரிகள் எஸ்.வி. ராஜதுரை போன்ற தன்னார்வக் குழுக்களைச் சேர்ந்தவர்கள். ஞானி - நாகராசனின் ஆன்மீகத் தேடல்களுக்கும், அ.மார்க்ஸ் - ரவிக்குமாரின் பின்நவீனத்துவ கழிசடைத் தத்துவத்துக்கும், தன்னார்வக் குழுக்களின் சீர்குலைவுப் பணிகளுக்கும் தேவை யானது கம்யூனிச சித்தாந்தத்தை நிர்மூலமாக்குவது. அதற்கான கருவியாக ஸ்டாலின் மீதான அவதூறுகளை இவர்கள் பயன் படுத்துகின்றனர்.

ஒன்றும் இல்லை. ஏனென்றால் முதலில் ஒரு உளவுப் படையின் முகவர், பின்னர் கலிபோர்னியாவின் ஸ்டாம் ஃபோர்டு பல்கலைக் கழகப் பேராசிரியர், எழுத்தாளர் என்கிற முறையில் சோவியத் ஒன்றியம் மற்றும் ஸ்டாலினுக்கு எதிரான பொய்யுரைகளாலும், புனை கதை களாலும் தனது பிழைப்பை நடத்திய மனிதனிட மிருந்துதான் இந்தச் சொற்கள் வருகின்றன. அவன் பிரித்தானிய இரகசிய உளவுப் படையின் பொய்ப் பிரச்சாரத் துறை அதாவது தகவல் ஆய்வுத் துறை (ஐ.ஆர்.டி.)யின் ஒரு முன்னாள் முகவர் என்று 1978 ஜனவரி 27-ந் தேதியிட்ட பிரெஞ்சு கார்டியன் பத்திரிக்கை ஒரு கட்டுரையில் அடையாளங் காட்டியது.

"ஐ.ஆர்.டி." என்பது பிரித்தானிய இரகசிய உளவுப் படையின் ஒரு பிரிவாக 1947-இல் நிறுவப்பட்டது. (கம்யூனிசத் தகவல் குழு என்பது அதன் மூலப் பெயர்) அதன் பிரதானப் பணி அரசியல்வாதி, பத்திரிக்கையாளர்கள், பதவியிலுள்ள மற்றும் பிறர் மத்தியில் கட்டுக் கதை களைப் பரப்பி, பொது மக்கள் கருத்தை உருவாக்கி உலகம் முழுவதும் கம்யூனிச செல்வாக்கை முறியடிப்பதுதான்.

பிரிட்டனைப் போலவே வெளிநாடு களிலும் ஐ.ஆர்.டி.யின் நடவடிக்கைகள் மிகமிகப் பரவலானவை. வலதுசாரி தீவிர வாதத்தோடு சம்பந்தப்பட்டிருப்பதாக ஐ.ஆர்.டி. கலைக்கப்பட்ட போது, பிரிட்டனில் மட்டும் நூற்றுக்கும் மேலான பிரபலமான பத்திரிக்கையாளர்கள் ஐ.ஆர்.டி. தொடர்பில் இருந்து கட்டுரை களுக்கான விடயங்களைக் கிரமமாக வழங்கி வந்ததாகக் கண்டுபிடிக்கப் பட்டது. ஃபிளான் இயல் டைம்ஸ், தி டைம்ஸ், கெனை மிஸ்ட், டெய்லி மெயில், டெய்லி மிர்ரர், தி எக்ஸ்பிரஸ், தி கார்டியன் மற்றும் பிற பெரிய பிரித்தானியப் பத்திரிக்கைகள் இதை வாடிக்கையாகக் கொண்டிருந்தன.

எனவே கார்டியன் பத்திரிக்கை அம்பலப்படுத்திய விவரங்களில் இருந்து எவ்வாறு இரகசிய உளவுப் படையினர் மக்களைச் சென்றடையும் செய்திகளைத் திரித்துப் புரட்ட முடியும் என்பதை நாம் அறிய முடியும்.

இந்த ஐ.ஆர்.டி. நிறுவப்பட்டதில் இருந்து 1956 வரை ஐ.ஆர்.டிக்காக ராபர்ட் கான்குவஸ்ட் வேலை செய்தான். அங்கே கான்குவஸ்டின் வேலை சோவியத் ஒன்றியத்தின் 'கருப்பு வரலாறு' என்று சொல்லப்பட்டதைப் புனைந்தளிப் பது தான்; இந்தக் கட்டுக் கதைகள்தாம் உண்மையானவை என்பதைப் போல வெளியிடப்பட்டு, பொது மக்கள் கருத்தை உருவாக்குவதற்காக பத்திரிக்கையாளர் களிடம் பரப்பப்பட்டன. ஐ.ஆர்.டியை விட்டு அதிகார பூர்வமாக விலகிய பிறகும் கூட அதன் யோசனை ஆதரவோடு, கான்குவஸ்டு நூல்கள் எழுதுவதைத் தொடர்ந்தான்.

"மாபெரும் பயங்கரம்" என்னும் கான்குவஸ்டின் நூல் 1937-இல் சோவியத் ஒன்றியத்தில் நடந்த அதிகாரப் போட்டி என்பதை ஆய்வுப் பொருளாகக் கொண்ட அது, அடிப்படையில் ஒரு வலதுசாரி நூலாகும். உண்மையில் அது, அவன் இரகசிய உளவுப் படையில் இருந்தபோது எழுதியதின் மறுவார்ப்பு ஆகும். அந்த நூலே ஐ.ஆர்.டி.யின் உதவியோடு முடிக்கப்பட்டு, பதிப்பிக்கப்பட்டது. சி.ஐ.ஏ. மூலங்களில் இருந்து வரும் நூல்களைப் பதிப்பிப்பதோடு தொடர்பு டையது, இந்த பிரேஜர். அதன் மூன்றில் ஒரு பகுதிப் பிரதிகள், பிரேஜர் நிறுவனத்தால் வாங்கிக் கொள்ளப் பட்டது. பல்கலைக்கழகப் பேராசிரியர் கள், பத்திரிக்கை; வானொலி - வானொளிகளில் பணிபுரிபவர்கள் போன்ற "பயன்பாடுடைய முட்டாள் களுக்கு" பரிசளிப்பதற்காக கான்குவஸ்டின் நூல்கள் வாங்கப்பட்டன. இதன்மூலம் கான்கு வஸ்ட் மற்றும் வலதுசாரி தீவிரவாதிகளின் பொய்கள் மக்கள் திரளின் பெரும் பகுதி முழுவதும் பரப்புவதைத் தொடர்வதற்கான உறுதி செய்யப்பட்டது. வலதுசாரி வரலாற்றா சிரியர்களுக்கு சோவியத் ஒன்றியம் பற்றிய செய்திகளுக்கான மிக முக்கியமான மூலதாரங்களில் ஒன்றாக இன்றுவரை கான்குவஸ்ட் நூல்கள்தான் விளங்குகின்றன.

- தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

# செவியில் விழுந்து இதயம் நுழையும் இசை! கோபுரத்தின் விரிசலில் விழுந்த விதை!

எதற்காக இந்தத் தமிழ் மக்கள் இசைவிழா என்ற கேள்வியை எதிரிகள் எழுப்பும்போது அதற்குப் பதில் சொல்லி விடுகிறோம். தமிழிசைக் களவு பற்றியும், அதை அம்பலப்படுத்த வேண்டிய அவசியம் பற்றியும், மாற்றாகத் தமிழ் மக்களிசையைப் படைக்க வேண்டிய தேவை பற்றியும் விளக்கி வருகிறோம்.

ஆனால் இதே கேள்வியை வேறு கோணத்திலிருந்து எழுப்புகிறார்கள் சில நண்பர்கள். போராட்டம், தியாகம், புரட்சி என்று பேச வேண்டிய புரட்சியாளர்கள் குரல், துத்தம், கைக்கிளை என்றும் சட்ஜம், ரிசபம், காந்தாரம் என்றும் பேசிக் கொண்டிருப்பது தேவையா என்று கேட்கிறார்கள்.

இவ்வாறு கூறுபவர்கள் தாம் விரும்பும் வகையில் புரட்சியில் ஈடுபடலாம் என்பதும், நாம் இசைவிழா நடத்துவதன் காரணமாக அவர்களது புரட்சிப்பணி தடைபட்டு விடவில்லை என்பதும் ஒருபுறமிருக்கட்டும். திருவரங்கம் கருவறை நுழைவுப் போராட்டம் நடத்திய போதும் இதே வகையான கேள்வியை இதே வகையறாவைச் சேர்ந்த நண்பர்கள் எழுப்பினார்கள் என்பதை மட்டும் வாசகர்கள் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

அரசியல் பொருளாதார அரங்குகளில் மட்டுமின்றி இனம், மொழி, சாதி, பால் மற்றும் பண்பாட்டு ரீதியான ஒடுக்கு முறைகள் ஆகிய அனைத்தையும் உரிய வகையில் உரிய தருணத்தில் எதிர்த்துப் போராடுவதுதான் புரட்சியாளர்களின் பணி. இதுவும் ஏற்கெனவே பலமுறை கூறப்பட்ட பதில்தான். அந்த வகையில் தமிழிசைக் களவு பற்றிய தரவு களையும், தமிழ்ச் செவ்வியல் இசை மரபு பார்ப்பனிய மய மாக்கப் பட்டது பற்றியும் பலவாறாக விளக்கியும் இருக்கிறோம். அவற்றை மீண்டும் ஒருமுறை விளக்குவதும் தற்போது நம் நோக்கமல்ல.

"கருநாடக இசையோ, நாட்டுப்புற இசையோ, திரையிசையோ யாருக்கு எது பிடிக்கிறதோ அதைக் கேட்டுவிட்டுப் போகட்டும். நமக்குப் புரட்சிக் கருத்துக்களைச் சொல்ல இசை வேண்டு மென்றால் நாட்டுப்புற இசையில் பாட்டெழுதிப் பாடிவிட்டுப் போவோம். இப்போது புரட்சி நடத்தும் வழியைப் பார்ப்போம். அதிகாரம் நம் கைக்கு வரட்டும்; அப்புறம் நமக்கான இசையை ஆற அமர உருவாக்குவோம்" என்று பேசும் நண்பர்களின் கருத்தை மட்டும் இப்போது கவனிப்போம்.

ரத, கஜ, துரக, பதாதிகளுடன்தான் போர்க்களத்தில் இறங்க முடியும் என்றோ, இசை உள்ளிட்ட ஒவ்வொரு அரங்கிலும் எதிரிகளுடன் மோதுவதற்குத் தேவையான நமது அணி வரிசையைத் தயார் செய்யாமல் களமிறங்கவே முடியாது என்றோ நாம் கூறவில்லை.

எனினும் இசைக்கு ஒரு இயக்கம் தேவையா என்று கேட்கும் இந்தத் துடிப்பு மிக்க புரட்சிக்காரர்கள் இதே கேள்வியை இலக்கியம் குறித்தும் கேட்டுப் பார்க்க வேண்டும்.

"ராமாயணமோ, மகாபாரதமோ, குமுதமோ, குங்குமமோ, பாலகுமாரனோ, பட்டுக்கோட்டை பிரபாகரோ... எதையோ இளைஞர்கள் படித்துக் கொள்ளட்டும். சிறுகதையும், கவிதையும், கட்டுரையும் எழுதுவதற்கு நமக்கென்று எழுத்தாளர்கள் எதற்கு, பத்திரிகை எதற்கு, இலக்கிய அமைப்பு எதற்கு - நமக்கு வேண்டியது போராட்டம் - புரட்சி" என்று சொல்லிப் பார்க்கட்டும்; அப்போது புரியும் அவர்களுடைய வாதத்தின் முரண்பாடு!

பத்திரிகை படிப்பவர்கள் அதிகமா, பாட்டுக் கேட்பவர்கள் அதிகமா என்ற கேள்விக்கு விடைதேட பட்டிமன்றம் தேவையில்லை. படிப்போரைக் காட்டிலும் பாட்டுக் கேட்கும் இசை ரசிகர்கள் பல்லாயிரம் மடங்கு அதிகம். செவியில் விழுந்து இதயம் நுழையும் இந்த இசை வெறும் காற்றைப் போலக் கேட்பவன் மீது தன் சுவடைப் பதிக்காமல் வெளியேறி விடுவதில்லை. அவனிடம் ஒருவகை ரசனையை ஏற்படுத்தத்தான் செய்கிறது.

ஒரே அரசியல் கொள்கையை ஏற்றுக் கொண்டு ஒரே அமைப்பில் இயங்குகின்ற பலருக்கும் இசை ரசனை ஒரே விதமாக இருப்பதில்லை; வேறுபடுகிறது. அனைவருக்கும் இசை ரசனை ஒரே மாதிரியாகத்தான் இருக்க வேண்டும் என்பதோ, அவ்வாறு ஆக்கிவிட வேண்டும் என்பதோ நம் வாதமல்ல. மாறாக, இந்த இசை ரசனையின் தன்மையை, அதனுடைய அழகியலின் சரியான - தவறான, தரமான - மலினமான, நுட்பமான - கொச்சையான தன்மைகளை இனம்பிரித்து அறிய இயலாதவர்களாக இருக்கிறோம் என்பதை மட்டுமே குறிப்பிடுகிறோம்.

**ஒரு சிறுகதை அல்லது நாவலை ஆளும் வர்க்க இலக்கியம், பெண்ணடிமைத்தனத்தை ஆதரிப்பது, சாதி ஆதிக்கத்தை நியாயப்படுத்துவது என்று விமரிசிப்பதைப் போல இசையை விமரிசிக்க முடிவதில்லை. ஒரு கவிதையை விமரிசிப்பதைப் போலக்கூட இசையை விமரிசிக்க இயலுவதில்லை. ஏனென்றால் கவிதை என்பது சொற்களால் தீட்டப்படும் மன உணர்வு; இசையோ ஒலியால் தீட்டப்படும் மனஉணர்வு.**

ஒரு சிறுகதை அல்லது நாவலை ஆளும் வர்க்க இலக்கியம், பெண்ணடிமைத்தனத்தை ஆதரிப்பது, சாதி ஆதிக்கத்தை நியாயப்படுத்துவது என்று விமரிசிப்பதைப் போல இசையை விமரிசிக்க முடிவதில்லை. ஒரு கவிதையை விமரிசிப் பதைப் போலக்கூட இசையை விமரிசிக்க இயலுவதில்லை. ஏனென்றால் கவிதை என்பது



படிப்பகம்

www.padippakam.com

சொற்களால் தீட்டப்படும் மன உணர்வு; இசையோ ஒலியால் தீட்டப்படும் மனஉணர்வு.

> **தன்னுடைய ராமன் பொம்மையை காவிரியில் தொலைத்துவிட்டதற்காகத் தியாகய்யர் கண்ணீர் விட்டெழுதிய பாடல் 150 ஆண்டுகளுக்குப் பின்னும் கலைத்தரம் கொண்டதாக நீடிக்க முடியும் என்றால், நேற்று தாமிரவருணியில் முக்கிக் கொல்லப்பட்ட தொழிலாளர்களைப் பற்றிய பாடலில், ஏன் உணர்ச்சியும் கலைத்தரமும் இருக்க முடியாது? அவ்வாறு ஏன் இசையமைக்க முடியாது?**

எனவேதான் பாடல் வரிகளை முற்போக்கான தென்றோ பிற்போக்கான தென்றோ கூற முடிகின்ற நம்மால், அந்தப் பாடலைச் சுமந்து வரும் இசையை அவ்வாறு விமரிசிக்க இயலுவதில்லை. இசை குறித்த நமது கருத்து அநேகமாக "பிடித்திருக் கிறது - பிடிக்கவில்லை" என்ற வரம்பைத் தாண்டுவதில்லை. பல சந்தர்ப்பங்களில் நமக்குப் பாட்டு பிடிப்பதில்லை - ஆனால் அதன் இசை பிடித்து விடுகிறது.

கொக்கோ கோலா பிரியர்களுக்கு அந்தப் பானத்தின் சுவையை விளக்கி அது தனக்கு ஏன் பிடித்திருக்கிறது என்று கூறும் திறனில்லாமல் போனாலும் அவர்கள் அச்சுவையின் அடிமைகள்; பின்னர் மெல்ல மெல்ல அதனூடாக அந்தப் பண்பாட்டின் அடிமைகள்.

கோபுரத்தின் விரிசலில் விழுந்த விதை மரமாகி கோபுரத்தையே பிளப்பதைப் போல, செவிகளில் நுழையும் இசை ரசனை முற்போக்காளர் களின் இதயத்தையும் பிளக்கவோ, பிசையவோ முடியும். சாதாரண மக்கள் மீது அது ஏற்படுத்தும் தாக்கம் பற்றியோ விளக்கத் தேவையில்லை.

இத்தனைக்கும் பிறகு "ரசியாவிலும் சீனாவிலும் இசைவிழா நடத்தித்தான் புரட்சி செய்தார்களா?" என்று கேட்கக் கூடியவர்கள் இருக்கிறார்கள். ரசியா விலும் சீனாவிலும் திரை இசை, ஒலி நாடாக்கள் இலட்சக் கணக்கில் விற்கவில்லை; தேநீர்க் கடைகள் முதல் தொழிலகங்கள் வரை எங்கும் இந்த இசை காற்றில் கலந்த போதை மருந்தாகப் பரவியிருக்கவில்லை; அமெரிக்க பாப் பாடலை மறுநாளே மொழிமாற்றம் செய்தும், செய்யாமலும் ஒளிபரப்பும் தொலைக் காட்சிகள் இல்லை என்ற சில அற்ப உண்மைகளை மட்டும் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ரசியாவிலும் ஏனைய நாடுகளிலும் புரட்சியை ஆக்க ஒருவேளை இசை பயன்படாவிட்டாலும் அழிக்கப் பயன்பட்டிருக் கிறது என்பதையும் அவர்கள் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். போலி சோசலிசம் வீழ்ந்ததற்கு அதன் உள் முரண்பாடுகளே முதற்காரணம் என்ற போதிலும், அந்த வீழ்ச்சியைக் கொண்டாட வரவழைக்கப்பட்ட மேற்குலகின் முதல் தேவதூதன் மைக்கேல் ஜாக்சன் என்பதையும், அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நுகர்வியம், இன்பவெறி, தனிநபர்வாதம், போலி மனிதாபிமானம் இவையனைத்தும் கலந்த மேற்கத்திய பாப் இசை இன்றைய உலக இசையாக சந்தைப்படுத்தப் படுவதையும், இந்தப் பொழுது போக்குத் தொழிலின் குடுமி அமெரிக்காவின் கையிலிருப்பதையும், அதை வர்த்தகம் உள்ளிட்ட அனைத்து வர்த்தகங்களைக் காட்டிலும் இந்தப் பொழுது போக்கு வர்த்தகத்தில்தான் பெரும்பணம் புரள்கிறது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

இவையெதையும் புரிந்து கொள்ள மறுக்கும் மேதாவிகள், "நாட்டுப்புற இசைக்குள் புரட்சிகரக் கருத்தைப் புகுத்திவிட்டால் கிடைப்பது புரட்சிகர இசை"; "கருநாடக இசையின் தெலுங்கு - வடமொழிப் பாடல்களின் இடத்தில் தமிழின உணர்வைச் செருகிவிட்டால் தமிழர் விடுதலைக்கான இசை" என்று மாற்று இசைக்குப் பல மலிவான, சுலபமான ஆத்திரங்களை முன்வைக்கிறார்கள்.

"நாட்டுப்புற இசை அல்லது செவ்விசையை மட்டும்தான் பயன்படுத்து வேன்" என்பதற்கும் எண்சீர் விருத்தத்தில்தான் கவிதை எழுதுவேன் என்பதற்கும் வேறுபாடில்லை. நமது தேவையின் வீச்சையும் மேற்கூறிய இசைமரபுகளின் வரம்புகளையும் புரிந்து கொள்ள வேண்டும். உலகளவிலான பழங்குடி மக்கள் இசை முதல் நவீன இசை வரை அனைத்தும் நமக்கு வேண்டும்; மக்கள் விடுதலைக்கான இசையை உருவாக்க விழையும் நமக்கு உலக விடுதலை இயக்கங்கள் உருவாக்கிய இசையனைத்தும் வேண்டும்.

அடிமைத்தனத்தைப் பேணுவதற்குத் தேவையான அனைத்தையும் உலக முழுவதிலிருந்தும் எதிரி சேகரிக்கிறான். உணவு, உடை முதல் இசை ரசனை வரை அனைத்திலும் ஒருபடித்தான தன்மையைத் திணிக்க முயல்கிறது அமெரிக்க ஏகாதிபத்தியம். இந்த ஆதிக்கத்திற்கெதிரான குரல்களுடன் நமது இசை இணைந்து ஒலிக்க வேண்டும். இந்தத் துறையில் எதிரியை எதிர்த்து நிற்பதும் முறியடிப்பதும் அவ்வளவு எளிதான காரியமல்ல.

ஏனென்றால் அரசியல் கருத்துக்கள் முதல் இசை ரசனை வரை அனைத்து விசயங்களிலும் ஆற்றோடு போவதற்குத் தான் மக்கள் பழக்கப்படுத்தப்பட்டிருக் கிறார்கள். அதற்கு இசைந்ததாக உள்ளவை அனைத்தும் இயல்பானவை யாகவும், முரண்படுபவை அனைத்தும் உறுத்துபவையாகவும் அவர்களுக்குத் தோன்றுகிறது.

> **காதலைப் பாலியல் வெறியாகவும், மகிழ்ச்சியைக் களிவெறியாட்டமாகவும், துயரத்தை விரக்தியாகவும் மடை மாற்றி விடுவதன் மூலம் மக்களின் இசை ரசனையையும், வாழ்வியல் மதிப்பீடு களையும், அதனூடாகச் சமூக உணர்வையும் சிதைப்பதில் திரையிசை வெற்றி பெற்றுள்ளது.**

குமுதம், ஆனந்த விகடன் போன்ற பத்திரிகைகள் வாசகனிடம் எதையும் கோருவதில்லை - ஐந்து ரூபாய் காசைத் தவிர. ஆனால் புதிய கலாச்சாரம் போன்ற இதழ்களோ வாசகனின் கவனத்தையும் அக்கறையையும் கோருகின் றன. குமுதம் போல அதை 'மேய' முடிவதில்லை.

இந்த எடுத்துக்காட்டு இசைக்கும் பொருந்தும்.

படிப்பகம்

www.padippakam.com

எதைத் தின்கிறோம் என்ற உணர்வில்லாமல் சோளப் பொறி கொறிக்கும் நுகர்வோனின் நிலையில் தான் இன்று மக்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

**நுகர்வோனை ரசிகனாக மாற்றுவதும், அடிமையை சுதந்திர மனிதனாக மாற்றுவதுமே நமது இலட்சியம். இதைச் சாதிக்க வேண்டுமெனில் வெகுசன ரசனையின் இசை மொழியை, அதன் தன்மையை நாம் அறிந்திருக்க வேண்டும். வெகுசன அடிமைத்தனத்தின் ஆன்மாவையும், விடுதலை வேட்கைக்கான அதன் மொழியையும் நாம் அறிந்திருக்க வேண்டும். இசை நுட்பங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும்.**

எனவே முற்போக்கான புரட்சிகரமான பாடல்களைக் கேட்க நேரும் போது அவற்றைத் திரையிசையுடன் ஒப்பிட்டுத் தான் மதிப்பீடு செய்கின்றனர். நமது பாடல்களின் கருத்துக்கள் ஒருவேளை அவர்களைக் கவர்ந்தால் அதற்காகப் பாராட்டுவார்கள். ஓரிருமுறை கேட்பார்கள். ஆனால் சலிக்காமல் நூறுமுறை திரையிசையைக் கேட்கிறார்களே அந்த 'கவுரவத்தை' நம் பாடல்களுக்கு அவர்கள் வழங்குவதில்லை.

"அதற்கென்ன செய்ய முடியும்? பிரச்சாரப் பாடல்களை யார்தான் மீண்டும் மீண்டும் கேட்க விரும்புவார்கள்?" என்று நமது நண்பர்கள் சமாதானம் கூறலாம். விரும்புதலும் விரும்பாமையும் அவர்கள் மீது திணிக்கப்பட்டவையென்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள்.

உண்மையில் பிரச்சாரப் பாடல் என்று கூறப்படும் இந்தப் பொதுவான முத்திரையே ஆளும் வர்க்கத்தால் தயார் செய்யப்பட்டதாகும்.

அரசியல் பொருளாதாரம் முதல் அழகியல் மதிப்பீடுகள் வரையில் அனைத்திலும் தனக்கு எதிரான கருத்துகளைக் கொண்ட புரட்சியாளர்களுடன் கருத்து மோதலில் ஈடுபடுவதைத் தவிர்க்கவே ஆளும் வர்க்கம் முயல்கிறது. தீவிரவாதிகள் என்று முத்திரை குத்துவதன் மூலம் அவர்களது அரசியலையே இருட்டடிப்பு செய்கிறது.

அதுபோலவே பிரச்சாரப் பாடல் என்ற முத்திரையும், அவற்றில் கலைத்தரம், இசைத்தரம் இருக்காது என்பதைக் கூறாமல் கூறுகிறது. எனவே அவை இரசனைக்கு உரியவையல்ல என்று முன்னறிவிப்பு செய்கிறது.

தன்னுடைய ராமன் பொம்மையை காவிரியில் தொலைத்துவிட்டதற்காகத் தியாகய்யர் கண்ணீர் விட்டெழுதிய பாடல் 150 ஆண்டுகளுக்குப் பின்னும் கலைத்தரம் கொண்டதாக நீடிக்க முடியும் என்றால், நேற்று தாமிரவருணியில் முக்கிக் கொல்லப்பட்ட தொழிலாளர்களைப் பற்றிய பாடலில் ஏன் உணர்ச்சியும் கலைத்தரமும் இருக்க முடியாது? அவ்வாறு ஏன் இசையமைக்க முடியாது?

"திருப்பாச்சி அரிவாளை தீட்டிக்கிட்டு வாடா வாடா" என்று சாதிப் பெருமையை ஊதிவிடும் பாடல் கலைத்தரம் கொண்டதாக இருக்க முடியும்; ஆனால் "வெட்டறிவாள் எடடா" என்ற ம.க.இ.க.வின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாடல் கலைத்தரமற்ற பிரச்சாரப் பாடலாகத்தான் இருக்க முடியுமா?

கம்யூனிஸ்டு இலக்கியத்திற்குக் கலைத்தரம் இருக்க முடியாது. பிரச்சாரப் பாடலுக்கு இசைத்தரம் இருக்க முடியாது போன்றவையெல்லாம் ஆளும் வர்க்கம் தனது வாய் வழியாகவும் ஆசனவாய் வழியாகவும் வெளியிடும் கருத்துக்கள்.

அவற்றை எதிர்கொண்டு முறியடிப்பதற்குப் பதிலாக "போராட்டம், புரட்சி செய்ய வேண்டியவர்களுக்கு குரல், துத்தம் தேவையா" என்று கேட்பது ஒருவகையில் ஆளும் வர்க்கக் கருத்துக்கு ஒத்து ஊதுவது ஆகும். இன்னொரு வகையில் பார்த்தால் இது தமது அறியாமையையே பெருமையாகச் சித்தரித்துக் கொள்ளும் வாய்ச் சவடாலும் கூட.

### அறிவிப்பு

அன்பார்ந்த வாசகர்களே,

ஏப்ரல்'மாத இதழ், தவிர்க்க இயலாத காரணங்களினால் வெளிவரவில்லை. அடுத்த இதழ் ஜூன் மாதம் வெளிவரும். பணவிடை (M.O) மூலம் சந்தா அனுப்பும் வாசகர்கள், பணவிடை விண்ணப்பத்தாளின் 'தகவலுக்கான இடம்' என்ற பகுதியில் தங்களது முகவரியைத் தவறாமல் குறிப்பிடவும்

வாய்ச்சவடால் மூலமே புரட்சி செய்யலாம் என்று நம்புவோர்க்கு வேண்டுமானால் இசைக் கருவிகள் தேவைப்படாமல் போகலாம். நமக்குத் தேவைப்படுகிறது.

காதலைப் பாலியல் வெறியாகவும், மகிழ்ச்சியைக் களிவெறியாட்டமாகவும், துயரத்தை விரக்தியாகவும் மடை மாற்றி விடுவதன் மூலம் மக்களின் இசை ரசனையையும், வாழ்வியல் மதிப்பீடுகளையும், அதனூடாகச் சமூக உணர்வையும் சிதைப்பதில் திரையிசை வெற்றி பெற்றுள்ளது.

சந்தையின் ரசனைக்கேற்ப உருவாக்கப்படும் இந்த இசையே காலத்திற்கேற்ற இசை என்று கொண்டாடப்படுகிறது.

இன்னொருபுறம் காலாவதியாகிப் போன மன உணர்வுகளை வெளிப்படுத்தும் தியாகய்யர் போன்றோரின் இசை காலங்கடந்த இசையாக, திரையிசைக்கு மாற்றாக முன்நிறுத்தப்படுகிறது.

நுகர்வோனை ரசிகனாக மாற்றுவதும், அடிமையை சுதந்திர மனிதனாக மாற்றுவதுமே நமது இலட்சியம். இதைச் சாதிக்க வேண்டுமெனில் வெகுசன ரசனையின் இசை மொழியை, அதன் தன்மையை நாம் அறிந்திருக்க வேண்டும். வெகுசன அடிமைத்தனத்தின் ஆன்மாவையும், விடுதலை வேட்கைக்கான அதன் மொழியையும் நாம் அறிந்திருக்க வேண்டும். இசை நுட்பங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். இது ஒரு கடினமான ஆனால் அவசியமான பணி.

நாம் காலத்தைக் கைப்பற்ற வேண்டியவர்கள். நமக்குத் தேவை அதற்கான இசை. அந்த வகையில் நம்முடைய இசை நாம் வாழ்கின்ற காலத்தின் இசையில் குறுக்கிட வேண்டும். மக்களின் இதயத்தை வெல்ல வேண்டும். "புரட்சிப் போரின் ஒரு சிப்பாய்" தான் நமது இசைப் பாடல். சிப்பாய்க்குப் போரிடத் தெரிந்திருக்க வேண்டும் என்பதைச் சொல்ல வேண்டுமா என்ன?

● மருதையன்


படிப்பகம்

www.padippakam.com

தொடர் கட்டுரை: 5

## சிறுபான்மையினருக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ்.இன் பொய்யும் புரட்டும்



# இட ஒதுக்கீடு, தனிக்குடியிருப்பு, சிறுபான்மைக் கமிஷன்

"பிற்பட்டோர் மற்றும் ஹரிஜனங்கள், பழங்குடியினர் ஆகிய இந்துக்களின் முன்னேற்றத்திற்காக மத்திய, மாநில அரசுகள் சலுகைகளை வழங்கியுள்ளன. அவற்றைப் பிடுங்கி, மதம் மாறிப் போன முஸ்லீம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் வழங்குவது முறைகேடும், அநீதியும் ஆகும். இதனால் இந்துக்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமை குறைகிறது. பறி போகிறது. ஆகவே இந்தச் சலுகைகளை இந்துக்களுக்கு மட்டுமே வழங்க வேண்டும்."

— "மதமாற்றத் தடைச் சட்டம் ஏன்?" இந்து முன்னணி வெளியீடு, பக்கம் - 45.

இந்துக்களின் இட ஒதுக்கீட்டை முசுலீம்களும் கிறித்தவர்களும் பிடுங்கிக் கொள்வதாகக் கூறும் இந்த அவதூறே உண்மைக்கு மாறான ஒரு மோசடியாகும். இன்று வரையிலும் தாழ்த்தப்பட்ட - பழங்குடி மக்களுக்கான இடஒதுக்கீட்டில் மதம் மாறியவர்களுக்கு இடமில்லை. தாழ்த்தப்பட்ட கிறித்தவ மக்களை, பிற்படுத்தப்பட்டவருக்கான இட ஒதுக்கீட்டில்தான் சேர்த்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட முசுலீம் மக்களுக்கு எதிலும் இடஒதுக்கீடு கிடையாது. ஒருசில மாநிலங்களில் ஒருசில முசுலீம் சாதிகளை மட்டும் பிற்படுத்தப்பட்டவர் பட்டியலில் வைத்திருக்கிறார்கள். மொத்தத்தில் மதம் மாறுகின்ற முசுலீம், கிறித்தவ மக்கள், இடஒதுக்கீட்டுச் சலுகையை இழக்கிறார்கள் என்பதே உண்மை.

அடுத்து தாழ்த்தப்பட்ட, பழங்குடி' மக்கள் அனைவருமே வரலாற்று ரீதியாக 'இந்துக்களாக' இருந்தது கிடையாது. 'சதுர்வர்ணம்' எனும் பார்ப்பன, சத்திரிய வைசிய, சூத்திர நான்கு வர்ண சமூக அமைப்பிலேயே பஞ்சமர்கள் இடம் பெறவில்லை. ஆங்கிலேயர் காலத்தில் அதுவும் முதல் சென்சஸ் கணக்கெடுப்பின் போதுதான் இம்மக்கள் இந்துமதத்திற்குள் சேர்க்கப்பட்டனர். மேலும் பார்ப்பன இந்துமதத்தின் சமூகக் கொடுமைகளை எதிர்த்து ஒடுக்கப்பட்ட சாதி மக்களின் எழுச்சியான போராட்டங்களும் வெள்ளையர் காலத்தில்தான் துவங்கின. இடஒதுக்கீடு கோரிக்கை பிறந்து பின் அமலாக்கப்பட்டதின் அடிப்படை அப்போதுதான்.

இத்தகைய இடஒதுக்கீடும் ஒடுக்கப்பட்ட சாதிமக்களின் சமூக விடுதலைக்காக தரப்பட்டதல்ல, மண்டல் கமிசன் குறிப்பிடுவதைப் போல உளவியல் ரீதியில் சற்று ஆறுதலைத் தருவதற்குத் தான். எனினும் இடஒதுக்கீடு என்ற சொல்லே சமூக வாழ்க்கையில் இடமில்லாமல் போன உழைக்கும் மக்களின் அவலத்தை அதாவது பார்ப்பன இந்துமதத்தின் கொடுமையைத்தான் குறிக்கின்றது. ஆதலால் இடஒதுக்கீடு பற்றி பேசுவதற்குக் கூட இந்து மதவெறியர்களுக்கு அருகதை கிடையாது. சாட்டையில் ரத்தம் தெறிக்க அடிப்பவனே புண்ணுக்கான மருந்தை சிபாரிசு செய்ய முடியாதல்லவா?

ஆங்கிலேயர் வருவதற்கு முன் உழைக்கும் மக்களை இந்து மதத்திற்கு வெளியே வைத்து ஆதிக்கம் செய்தார்கள். ஆங்கிலேயர் வந்தபின் இந்து மதத்திற்குள்ளே அடைத்து ஆதிக்கம் செய்ய விரும்புகிறார்கள். அதுவும் முசுலீம் எதிர்ப்பு அடையாளத்தோடு. அதனால்தான் இந்து மதத்தை எதிர்த்து ஒடுக்கப்பட்ட சாதியினர் பெற்ற இடஒதுக்கீட்டை முசுலீம் கிறித்தவ மதங்கள் தட்டிச் செல்கின்றன என்று அவதூறு செய்கின்றனர். இன்னொருபுறம் இடஒதுக்கீடே கூடாது என்பதும், இடஒதுக்கீட்டை எதிர்த்து வடஇந்திய மேல்சாதியினர் நடத்தும் கலவரங்களை முன் நின்று நடத்துவதும் இவர்கள்தான்.

எனவே தாழ்த்தப்பட்டோரைத் தாழ்த்தியதும்,' பிற்படுத்தப்பட்டோரை பின்தங்க வைத்ததும் முசுலீம்களோ, கிறித்தவர்களோ அல்ல என்பதற்கு விரிவான அகழ்வாராய்ச்சி தேவையில்லை. அதேபோல மதமாற்றம் என்பது அல்லா - இயேசுவின் மேல் கொண்ட அன்பினால் அல்ல, பார்ப்பனிய சாதிய ஒடுக்குமுறைகளிலிருந்து விடுபடவே நடந்தது என்பதையும் விளக்கத் தேவையில்லை.

> 'இந்து மதத்தின் சாதி - தீண்டாமைக் கொடுமைகளை ஒழித்து உங்களுக்கு விடுதலை தருகின்றோம், மதம் மாறாதீர்கள்' என்று அவர்கள் கோரவில்லை. இங்கேயே (அடிமையாக) இருங்கள், அப்போதுதான் இட ஒதுக்கீடு, ஏனைய சலுகைகள் தரமுடியும் என்று மிரட்டுகிறார்கள்.

அடுத்து மதமாற்றத்தையும், இட ஒதுக்கீட்டையும் இணைத்து இந்துமத வெறியர்கள் கவலைப்படும் மோசடியைப் பார்ப்போம். பணம், பால் பவுடர், வளைகுடா வேலை என்று லவுகீக ஆசை காட்டி மதம் மாற்றப்படுவது தடை செய்யப்படவேண்டும் என்பதே ஆர்.எஸ்.எஸ்.இன் நீண்டநாள் கோரிக்கை. ஆனால் இடஒதுக்கீடு என்ற லவுகீக ஆசையைக் காட்டி இந்து மதத்தில் இருங்கள், மதம் மாறாதீர்கள் என்று கேட்பது மட்டும் லவுகீக விசயமில்லையா? அதிலும் கவனியுங்கள், 'இந்துமதத்தின் சாதி - தீண்டாமைக் கொடுமைகளை ஒழித்து உங்களுக்கு விடுதலை தருகின்றோம். மதம் மாறாதீர்கள்' என்று அவர்கள் கோரவில்லை. இங்கேயே (அடிமையாக) இருங்கள், அப்போதுதான் இடஒதுக்கீடு சலுகைகள் தரமுடியும் என்று மிரட்டுகிறார்கள். இப்படி ஆன்மீகத்தினால் அல்ல லவுகீகத்தினால் தான், சமாதானத்தில் அல்ல கிரிமினல் மிரட்டல்கள் மூலமாகத் தான் இந்து மதம் வாழ்கிறது என்பது அதன் யோக்கியதைக்கு ஒரு சான்று.

இருந்த போதிலும் இந்து மதத்திலிருந்து மதம் மாறிவிடுவதால் மட்டும் சாதிய இழிவுகள் போய் விடாது என்பதும் உண்மைதான். பண வசதி இருந்தும் மதம்மாறிய தாழ்த்தப்பட்ட மக்கள் மேல்சாதித் தெருவில் குடியிருக்க முடியாது. அவர்கள் செய்து வரும் அடிமைத் தொழிலும் [illegible] மாறிவிடவில்லை. மதம் கிடைக்க வேண்டிய சமத்து


படிப்பகம்

www.padippakam.com

சுடுகாட்டில் கூட கிடைக்கவில்லை. திருச்சி கிறித்தவ இடுகாடு அதற்கோர் உதாரணம். கலப்புத் திருமணம் செய்வதால் கட்டி வைத்து அடிக்கப் படுவதும் நிற்கவில்லை. முசுலீம்கள் வாழும் அரியானாவின் சுதாக்கா கிராமம் அதற்கோர் உதாரணம். சாதிகள் எங்களிடம் இல்லை என்று தம் மதங்களின் புனிதக் கதைகளைப் பேசிவரும் இசுலாமும், கிறித்தவமும் இதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

ஆங்கிலேயர்கள் போகும்வரை தாழ்த்தப்பட்ட கிறித்தவர்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டது. ஆனால் 1950-இல் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் படி, இந்து மதமல்லாத ஏனைய மதங்களைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு கிடையாது என மாற்றப்பட்டது. அதன் பிறகு 1956, 1990-ஆம் ஆண்டுகளில் முறையே சீக்கிய, புத்த மதங்களைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு தரவேண்டும் என அதே சட்டம் திருத்தப்பட்டது. காரணம் மதம் மாறுவ தினால் அம்மக்களுக்கு சமூக, பொருளாதார முன்னேற்றம் கிடைத்து விடவில்லை என்பதால் இத்திருத்தங்களைக் கொண்டு வந்தார்கள். எனில் இந்த உண்மை தாழ்த்தப் பட்ட கிறித்தவ - இசுலாமிய மக்களுக்கும் பொருந்தும்.

பார்ப்பனியத்தின் ஆன்மாவை சாதி - தீண்டாமையால் நலிவுற்று இயங்கும் இந்திய சமூகத்தில், எந்த மதமும் அடிப்படையான மாற்றத்தைக் கொண்டு வர முடியாது. எனவே அந்த ஆன்மா ஒழிக்கப்படும்வரை தாழ்த்தப்பட்ட - பழங்குடி மக்கள் எந்த மதத்திற்கு மாறினாலும் அவர்களுக்கு இடஒதுக்கீடு - மற்றும் சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்கிறோம்.

●●●

"முசுலீம்களும், கிறித்தவர்களும் எல்லா இடங்களிலும் தனிக்குடியிருப்பில் ஒதுங்கி வாழ்வது ஏன்? அவர்கள் இந்துக்களுக்கெதிராக தேச - விரோத செயல்களில் ஈடுபடுவதற்கும், திட்டமிடு வதற்கும் இதுவே காரணமாவதால், இந்தத் னிக்குடியிருப்புக்கள் தீவிரமாகக் ாணிக்கப்பட வேண்டும்."

— ஆர்.எஸ்.எஸ். தலைவர் கோல்வால்கர் முதல், இந்து முன்னணி இராம. கோபாலன் வரை பலர் பேசி, எழுதி வரும் ஒரு அவதூறு.

முசுலீம்களும் கிறித்தவர்களும் தனியாக வாழ்வது பற்றி பீதியைக் கிளப்பும் இந்துமதவெறியர்கள்தான், தனிக்குடியிருப்பு - தனி வாழ்க்கை முறையை விதியாக்கி - மதமாக்கி - சாதியாக்கி இன்றுவரையிலும் அமல் படுத்துகிறார்கள். உலக மனித குலத்தின் 'சேர்ந்து வாழ்தல்' என்ற சமூகப் பண்பாட்டிற்கு எதிராக 'பிரிந்து வாழ்தல்' என்ற மனித விரோதப் பண்பையே பார்ப்பனியம் தனது உயிராகக் கொண்டுள்ளது.



பா.ஜ.க.வின் மேல்சாதி கூலிப்படையான ரன்வீர்சேனா தலித் மக்களைக் கொல்கிறது. இங்கே பீகார் பாரதீய ஜனதா தலித் பிரிவு பிரமுகர்களோடு குஷபாவு தாக்கரே. சமூகக் கடமையில் மனுதர்மப்படி அடக்கியும், அரசியல் கடமையில் முசுலீம்களை எதிர்க்க வைத்தும் இந்து மதவெறியர்கள் நடத்தும் தலித் அரசியல்.

ஊருக்கு நடுவே கோவில். கோவிலுக்கருகில் குளம். இரண்டைச் சுற்றியும் அக்கிரஹாரம். அக்கிரஹாரத்தில் பார்ப்பனர்கள். அக்கிரஹாரத்தைச் சுற்றி மேலத் தெருக்கள். மேலத்தெருக்களில் வேளாளர், ரெட்டி, நாயுடு, முதலியார், செட்டியார் போன்ற மேல்சாதியினர். இதை அடுத்து கீழத் தெருக்களில் 'பிற்படுத்தப்பட்ட' மேல் சாதியினர். இவர்களை அடுத்து நாவிதர், வண்ணார், குயவர் போன்ற சேவைச் சாதியினர். ஊருக்கு வெளியே சேரி. சேரியில் பள்ளர், பறையர், சக்கிலியர். இந்த பார்ப்பன செட் - அப்பில் இல்லாத கிராமங்கள் எதுவும் இந்தியாவில் கிடையாது.

குடியிருப்பு, தொழிலிலும் மட்டுமல்ல உண்பது, உடுத்துவது, கேளிக்கை, சுடுகாடு என மொத்த வாழ்க்கையிலும் பார்ப்பனியத்தின் தனித்தன்மை காப்பாற்றப்பட்டு வருகிறது. நீர் கலந்து தயாரிக்கப்படும் 'கச்சா' உணவு தீட்டு. நெய் அல்லது சுத்தமான எண்ணெயில் தயாரிக்கப்படும் 'பக்கா' உணவு சுத்தமானது. கச்சா உணவை தன் சாதியினரிடமும், பக்கா உணவை தனக்கு கீழ் உள்ள சாதியிலும் பெற்றுக் கொள்ளலாம். வட இந்திய மேல் சாதியினரிடம் இந்த 'உணவுத் தீண்டாமை' இன்றும் நிலவுகிறது.

பார்ப்பன மேல்சாதியினர் 'பச்சரிசி' உண்பதற்கு காரணம், புழுங்கல் அரிசி சூத்திர - பஞ்சமர்களால் அவிக்கப்படு வதினால்தான். பூமிக்கு கீழே விளையும், கிழங்கு பயிறு வகைகளை சமீபகாலம் வரை பார்ப்பனர்கள் உண்பதில்லை. இப்படித் தீட்டுப்பட்ட காய், பயிறு வகைகள் இன்றைக் கும் கோவில் கருவறை களில் நுழைய முடியாது.

சமீப காலம் வரை உணவு விடுதிகளில் இருந்த 'பிராமணாள் கபே, சைவாள் கபே' போன்ற பெயர்கள் யாத்திரை வரும் பார்ப்பனர் களின் புனிதத்தைக் காப்பாற்றத்தான் ஏற்படுத் தப்பட்டன. பார்ப்பன இலக்கியங்கள் குறிப்பிடும் 'அதிதி பூசை' (விருந்தினர் களை உபசரித்தல்) பார்ப்பன மேல்சாதியினரை மட்டும் குறித்தது. சேவைச் சாதியினர், சமைத்து மீந்து போன உணவை தானமாகப் பெறுவார்கள். பூசை - புனஸ்காரங்களுக்கு வரும் ஐயர் பச்சரிசியை மட்டும் தானமாகப் பெறுவார்.

வட இந்தியாவின் பார்ப்பன - மேல்சாதி அரசியல் தலைவர்கள் பலரும் எங்கு சென்றாலும் தன் சாதி சமையற்கார ரையும் கூடவே அழைத்துச் செல்வார்கள். சில ஆண்டுகளுக்கு முன் இறந்து போன கமலபதி - திரிபாதி என்ற உத்திரப்பிரதேச காங்கிரஸ் தலைவர் அதற்கோர் உதாரணம்.

அமெரிக்காவில் கணிப்பொறி அடிக்கிற அம்பி கூட 'வடமாள், கௌண்டின்யம், மிருக - சீரிஷம் - எம்.சி, புத்திரனுக்கு இதே உட்பிரிவில் வெல் - எஜுகேட்டட் பெண் தேவை' என்று தான் மணவிளம்பரம் கொடுப்பான்.


padippakam

www.padippakam.com

'அனைத்து வசதிகளுடன் கூடிய பங்களா வாடகைக்கு உள்ளது. பிராமின்ஸ் மற்றும் சைவாள் தொடர்பு கொள்க' - இவ்விளம்பரம் சென்னையில் அடிக்கடி வெளிவரும்.

'20-ஆம் நூற்றாண்டின் கணினி' யுகத்திலேயே கிராமம், நகரம், சென்னை, தில்லி, அமெரிக்கா என்று எல்லா இடங்களிலும் தனி வாழ்க்கை முறையை தொடர்பவர்கள் யார் என்பதை யாரும் புரிந்து கொள்ள முடியும். இனி இந்துமதவெறியர்களின் அவதூறைப் பரிசீலிப்போம்.

கோவை குண்டு வெடிப்பைத் தொடர்ந்து தமிழகமெங்கும் முசுலீம் குடியிருப்புகளில் போலீசு காவல் அரண் வைத்து சோதிப்பதாக தினசரிகள் செய்தி வெளியிடுகின்றன. ஏதோ தீவிரவாதத்தை வளர்க்க திட்டமிட்டுத் தனியாகக் குடியிருப்பது போல செய்தி நிறுவனங் களும், இந்து மதவெறியர்களும் தொடர்ந்து பிரச்சாரம் செய்கின்றனர்.

இது அப்பட்டமான பொய். ஏற்கெனவே பார்த்தது போல சாதி ஆதிக்க உணர்வு நிரம்பி வழியும் சமூகத்தில் அனைத்துத் தனிக் குடியிருப்புகளுக்கும் காரணம் பார்ப்பனியம் தான். பார்ப்பன மேல் சாதியினர் தங்களது புனிதத்தைக் காக்க, தாங்களே தெரிவு செய்து தனியாக வாழ்கின்றனர். தாழ்த்தப்பட்ட மக்கள் தனியாக வாழ்வது அவர்கள் மேல் திணிக்கப்பட்ட ஒன்று. முசுலீம்களுக்கும் இது பொருந்தும்.

சாதி இந்துக்கள் பலரும் முசுலீம் மக்களுக்கெதிராகக் கொண்டுள்ள பண்பாட்டு வெறுப்பு, முசுலீம் மக்களின் ஏழ்மை இவைகளே அவர்களிடம் பாதுகாப்பின்மை உணர்வை ஏற்படுத்து கிறது. கிராமங்களை விடுங்கள், நகரங்களில் கூட சேர்ந்து வாழ நினைத் தா லும் முசுலீம்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் யாரும் வீடு தருவதில்லை.' அநேக நகரங்களில் முசுலீம்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் அருகருகிலோ, கலந்தோதான் வாழ்கின்றனர். அதிலும் இவர்களில் பெரும்பான்மையினர் ஏழைகளாக இருப்பதாலும் சேர்ந்து வாழ்கின்றனர். கிறித்தவ மதத்திலும் வர்க்க சாதி வேறுபாட்டுக்கேற்பவே சேர்ந்தோ, தனியாகவோ வாழ்கின்றனர்.

எனவே, இசுலாமிய மக்களின் தனிக்குடியிருப்புக்கு எதிராக ஆர்.எஸ்.எஸ்.இன் வெறுப்பு சாதி-வர்க்கத் துவேசமாகும். பம்பாய், கோவை, திருவல்லிக்கேணி கலவரங் களில் ஒன்றாக சேரிகளில் வாழ்ந்திருந்த

**சாதி இந்துக்கள் பலரும் முசுலீம் மக்களுக்கெதிராகக் கொண்டுள்ள பண்பாட்டு வெறுப்பு, முசுலீம் மக்களின் ஏழ்மை இவைகளே அவர்களிடம் பாதுகாப்பின்மை உணர்வை ஏற்படுத்துகிறது. கிராமங்களை விடுங்கள், நகரங்களில் கூட சேர்ந்து வாழ நினைத்தாலும் முசுலீம்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் யாரும் வீடு தருவதில்லை.**

போதும் தாழ்த்தப்பட்ட மக்கள் முசுலீம்களைத் தாக்கினர். தனியாக இருந்தும் ஏழைகளாக இருந்தும் இரு பிரிவினரையும் ஒருவரையொருவர் மோதவிட்டிருப்பது தான் இந்து மதவெறியர்களின் சமீபத்திய சாதனை யாகும்.

எனவே, சாதி-மத கலவரங்களுக்காக கண்காணிக்கப்பட வேண்டும் என்றால் - இந்து மதவெறியர்கள், சாதி வெறியர்கள் வாழும் அக்ரஹார - மேல் சாதித் தெருக்கள்தான் கண்காணிக்கப்பட வேண்டும். அதே போல மக்கள் விரோத - தேச விரோத நடவடிக்கைகளை ஒழிப்பதற்கு நகரத்தின் பணக்கார வர்க்கம் வாழும் பகுதிகளையும், நட்சத்திர விடுதிகளையும் கண்காணிக்க வேண்டும்.

●●●

''சிறுபான்மையினரைப் பற்றி மட்டும் கவலைப்படும் ஒரு சார்பான சிறுபான்மையினர் கமிசனைக் கலைத்து விட்டு, அனைத்து மக்களும் தங்களது குறைகளுக்கு தீர்வு காணும் மனித உரிமை கமிசன் ஏற்படுத்தப்படவேண்டும். அதன் மூலம் எவருக்கு எந்தக் குறையிருந்தாலும் அது களையப்பட ஒரு அமைப்பும் உருவாகும்.''

— ''இந்துக்களுக்கு உரிமையே கிடையாதா?'' இந்து முன்னணி வெளியீடு, பக் - 29.

பெரும்பான்மை இந்துக்களுக்குக் கிடைக்காத மாபெரும் உரிமைகள் சிறுபான்மையினர் கமிசனுக்கு உள்ளது என்ற தோற்றத்தை ஏற்படுத்தும் முயற்சிதான் இந்தக் கோரிக்கை.

தேசிய சிறுபான்மையினர் கமிசன், தேசிய தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் கமிசன், தேசிய மகளிர் கமிசன் போன்றவை பார்ப்பனியத்தின் சமூகக் கொடுமைகளை எதிர்த்த மக்கள் போராட்டத்தினால் உருவானவை. இவை அந்தந்தப் பிரிவு மக்களின் குறிப்பான பிரச்சினைகள் பாதிப்புக்களை அரசிற்கும், வெளி உலகிற்கும் 'தெரிவிக்க' மட்டுமே தகுதி படைத்தது. மற்றபடி இவற்றுக்கு வேறெந்த அதிகாரமும் கிடையாது.

தேசிய சிறுபான்மையினர் கமிசன், தேசிய தாழ்த்தப் பட்டோர் மற்றும் பழங்குடி யினர் கமிசன், தேசிய மகளிர் கமிசன் போன்றவை பார்ப்ப னியத்தின் சமூகக் கொடுமை களை எதிர்த்த மக்கள் போராட் டத்தினால் உருவானவை. பிரச்சினைகளை வெளி உலகிற்கு 'தெரிவிக்க' மட்டும் உரிமை படைத்த இக்கமிசன் களுக்கு வேறெந்த அதிகாரமும் கிடையாது.

இந்தக் கமிசன்கள் விசாரிக்கச் செல்லும் பிரச்சினைகளில், சாதி, மத, இன, ஆணாதிக்கத்தின் உறைவிடமான இநது மதவெறியர்களே எதிர்தரபபாக இருக்கின்றனர். எனவேதான் இந்த 'சிறுபான்மை' கமிசன்களை கலைத்து விட்டு, மனித உரிமை கமிசனை ஏற்படுத்துமாறு கேட்கிறார்கள். அவர்கள் கேட்காமலேயே இப்போதே 'மனித உரிமைக் கமிசன்' ஒன்று செயல்படுகிறது.

கோவையில் காவலர் செல்வராசு கொலையைச் சாக்கிட்டு முசுலீம்களை எதிர்த்து நடந்த கலவரத்தை விசாரிக்க 'மனித உரிமைக் கமிசன்' வந்தது. வந்தவர்கள் உள்ளூர் போலீசு உருவாக்கிய அறிக்கையைக் கேட்டு வாங்கி, இதுதான் தாங்கள் விசாரித்துக் கண்டறிந்தது என வெளியிட்டார்கள். அதற்குப் பிறகு வந்த சிறுபான்மையினர் கமிசன் இந்த 'மனித உரிமை' மோசடியை அம்பலப்படுத்தியது.

இப்படி தங்கள் கலவரங்கள், கொலைகள், ஆதிக்கத்தை எவ்வித இடையூறுமின்றி தொடர்வதற்கே மனித உரிமை பற்றிப் பேசுகிறது ஆர்.எஸ்.எஸ். - இந்து முன்னணிக் கும்பல்.

— தொடரும்

www.padippakam.com

சிறுகதை:

# தற்கொலைப் படை

* துரை. சண்முகம்

சிதறிக் கிடக்கும் சோற்றுப் பருக்கையை கோழி கொத்துவது போல முல்லை அரும்புகளை தொட்ட வேகத்தில் அது நாரில் பொருந்திக் கொள்வதைப் பார்த்தால் சாந்திக்கு இதில் பல வருட அனுபவம் என்பது தானாக விளங்கும். தலைமாட்டில் அதிகப் படியான பூ கவுச்சி நாசியைத் துளைத்தெடுத்தது. கால்மாட்டில் மடக் மடக்கென்று சின்னம்மா புளியம்பழம் உடைக்கும் சத்தம். இடைவிடாது பூங்கோதை அக்காவின் கலகலத்த பேச்சு வேறு. பயணக் களைப்பின் தூக்கத்தை இனியும் தொடர முடியாது என்று எழுந்து கொண்டேன்.

"வாங்க தம்பி நல்லா இருக்கீங்களா? வீட்ல புள்ளையெல்லாம் சவுரியமா?"

"நல்லா இருக்கோம், நீங்க... வீட்ல வேலைக்கு போறாரா?"

"எங்க தம்பி, வாரத்துல மூணு நாளு தண்ணிய போட்டுட்டு வீட்ல படுத்துர்றாரு, திருந்துறதா தெரியல. சத்தம் போட்டா சண்ட வருது. தலவிதிப்படி நடக்கட்டும்னு வுட்டுட்டேன்"

"யக்கா தண்ணி வந்துடுச்சு" பக்கத்து வீட்டு ரேணுவின் குரல் கேட்டு சாந்தி பூ கட்டுவதைவிட்டு தண்ணிக்கு போனது.

"பாத்தீங்களா தம்பி அது முகத்தை, களையே போயிடுச்சி. வயசு முப்பத்து மூணு ஆகுதுல்ல. நீங்களாவது ஒரு மாப்பிள்ளைய பாத்து ஏற்பாடு பண்ணக் கூடாதா?"

"பார்ப்போம், இந்த முறை ஒரு முடிவோடத்தான் வந்துருக்கேன். இவங்க வேற ஏதோ திருவாரூர் பக்கத்துல ஒரு மாப்பிள்ளை இருக்குன்னு லெட்டர் போட்டுருந்துச்சுங்க. அதையும் பார்க்கலாம்."

"சாந்தியம்மா, உங்க அக்கா புள்ள இருக்குறப்பவே அந்த திருவாரூர் மாப்பிள்ளை விசயத்தையும் சொல்லிடுங்க" என்று சின்னம்மாவைத் தூண்டிவிட்டு,

"அந்த திருநாகேஸ்வரம் கோயிலுக்கு போய்ட்டு வாங்கண்ணா கேக்க மாட்டேங்குறீங்க. ஒரு அம்பது ரூவா பணம் கட்டி, அவ நட்சத்திரத்துக்கு ஒரு அர்ச்சனையை பண்ணி மாலைய வாங்கிட்டு வந்து வீட்ல வச்சா போதும் ஒரு மாசத்துல நிச்சயம் ஆகும் பாருங்க. வேற என்ன அதுல செலவு இருக்கு? பிறகு கல்யாணம் ஆனோன மாலய கொண்டு போயி கோயில் குளத்துல விட்டுட்டு புது மாலைய புருசன் பொண்டாட்டியா போயி வாங்கி போடணும். இதக் கூட செய்ய மலைக்கிறீங்களே! தம்பிகிட்ட வேணாலும் சொல்றேன்" பூங்கோதை ஆர்வத்தில் பொரிந்து தள்ளினாள்.

நான் வெறுமனே சிரித்துக் கொண்டதைப் பார்த்த பூங்கோதைக்கு சலிப்பு வந்தது. "தம்பி வேற சிரிக்குது உலக நடப்பு தெரியாம?"

"அதபத்தி இல்ல, கல்யாணம் பேச வர்றவன் நீங்க வெள்ளி, செவ்வாய், வெளக்கு போடறீங்களா? வேளா வேளைக்கு விரதம் இருக்குறீங்களான்னா பாத்துப் பேசறான். எத்தன பவுன் போடுவ, எவ்வளவு சீர்வரிசை கொடுப்பேன்ல கேக்குறான். நீங்க சொல்றதெல்லாம் எதுக்கு உதவுது சொல்லுங்க?"

"அதுக்கென்ன பண்றது, எல்லாரும் உங்கள மாதிரி இருந்தாதான் பரவாயில்லையே, உலகமே காசுல இல்ல நிக்குது தம்பி."

"வர்றவனுவ, பொண்ண பாக்குறானுவளோ இல்லியோ, பொட்டி சட்டிய பாக்குறானுவ" சின்னம்மாவும் சேர்ந்து பொருமினாள்.

"பாத்துருக்கானாம், மாப்பிள்ளை! என்ன சாதின்னு கூட சொல்லமாட்டானாம்! சம்மதிக்கணுமாம். காசு பணம் இல்லாத நாய்ங்கதான் நாங்க. அதுக்காக ஒரு பறையனையோ பள்ளனையோ இவன் மாப்பிள்ளைன்னா கழுத்த நீட்டணுமா? நீங்களே கேளுங்க வரமொற தெரியாம இவன் சொல்றதையெல்லாம் கேக்க முடியுமா?"

"எதுக்கெடுத்தாலும் வர்றனுவள குறை சொல்றீங்களே, நீங்க ஏன் மாயவரத்துல பாத்த அந்த டீக்கடை மாப்பிள்ளைய வேணாம்னீங்க?"

சின்னம்மா மௌனம் சாதிக்க, பூங்கோதையே திடுக்கிட்டுப் பேசினாள். "அது எப்புடி தம்பி, டீ ஆத்துறவனுக்குப் போயி குடுக்க முடியுமா?"

"ஒண்ணும் இல்லாத நம்பளே அவன் உழைச்சி ஒழுங்கா குடும்பம் நடத்துவானான்னு பாக்காம, டீ ஆத்துறான்னு எளப்பமா நெனச்சா; நாம பூ கட்றதையும் புளியம் பழம் உடைக்கறதையும் பாத்து மட்டும் வர்றவன் பொண்ணு எடுப்பானா?"

சொன்ன வேகத்தில் சின்னம்மாவின் முகம் சிறுத்துப் போனது. வார்த்தைக்குப் பதிலாக புளியம் ஓடு வேகமாக உடைந்தது. பூங்கோதைக்கும் உடனே பேச்சு வரவில்லை.

"நம்ப நிலைமை என்ன? உழைப்ப தவிர வேறு ஒண்ணும் சொத்து பத்து கெடையாதுன்னு இருக்குறப்ப, நம்பள ஒத்த ஆளுங்களோட சேர்ந்துதான் வாழமுடியுங்கறத மொதல்ல புரிஞ்சுக்கணும். அது புரியாம சும்மா சாமி கும்பிட்டு, சனிபகவான சுத்தி வந்தா சாமியா பாத்து ஒரு வசதியான புருசன அனுப்பிவைக்கும்னு நெனப்புல இருந்தா நடக்குமா?"

"நம்ப தான் கஷ்டப்படறோம் போற எடத்துலயாவது நல்லா இருக்கட்டும்னு தான் தம்பி பெத்தவங்க நெனப்பாங்க" பூங்கோதை பரிந்துபேச சின்னம்மாவுக்கு கோபம் கொப்பளித்தது கண்ணில் தெரிந்தது.

"நெனப்புத்தான் பொழப்ப கெடுக்குதுங்கறேன். இப்படியே போனா வயசாகி யாரும் கட்டிப்பாங்களான்னு யோசிச்சு நாம பதறிபோய் ஒரு முடிவுக்கு வரணும். அது வுட்டுட்டு பெத்தவங்களும் கனவு கண்டா? அதுனால யாருக்குப் பாதிப்பு?"

இப்போது பூங்கோதையைச் சுற்றி அடுத்தவீட்டு சுந்தரியக்கா, பானு என கூடிவிட்டனர்.

"சரி தம்பி அத வுடுங்க. திருவாரூர்ல போயி ஒரு மாப்பிள்ளைய பாத்துட்டு வந்து புடிச்சிருக்குன்னு சொல்றாங்க. பத்து பவுன் பேசி எட்டுக்கு சம்மதிக்கிறாங்க.



படிப்பகம்

www.padippakam.com

நீங்களாவது கடனை உடன வாங்கி கல்யாணத்த முடிங்க. இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போகல."

"நானும் அதான் சொல்றேன். இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போக, பணம் பவுனு இதெல்லாம் இல்லாம பாத்திருக்குற மாப்பிள்ளைய ஏன் வேண்டாங்குறாங்க? அவங்கள சரின்னு சொல்லச் சொல்லுங்க. என் தங்கச்சி கல்யாணத்த உடனே முடிக்கிறேன்."

"அது எப்படி தம்பி? நீங்க சொல்றது நடைமொறைக்கு ஆவுமா? உங்க சின்னம்மா சொன்னா மாதிரி உலகம் இப்படியெல்லாம் ஏத்துக்குமா?"

"நீங்க ஏத்துக்க மாட்டீங்கன்னு சொல்லுங்க? சும்மா உலகம், உலகம்னு சொல்லாதீங்க." பானுவின் வார்த்தைக்குப் பிறகு, சின்னம்மாவின் உதடுகள் அணைக்கட்டு போல உடைந்தது.

"பாத்துருக்கானாம் மாப்பிள்ளை, என்ன சாதின்னு கூட சொல்ல மாட்டானாம், சம்மதிக்கணுமாம். காசு பணம் இல்லாத நாய்ங்கதான் நாங்க. அதுக்காக ஒரு பறையனையோ பள்ளனையோ இவன் மாப்பிள்ளைன்னா கழுத்த நீட்டணுமா? நீங்களே கேளுங்க வரமொற தெரியாம இவன் சொல்றதையெல்லாம் கேக்க முடியுமா?"

"அவங்க சொல்றது சரிதான். காசு, பணத்துக்கு வழியில்லேன்னாலும் கவுரவத்த விட முடியுமா? உலகத்துல நடக்காததையா பேசுறாங்க."

"ஏங்க நடக்காது. இப்ப நான்லாம் சாதி மாறி பண்ணிட்டு நல்லா இல்ல. சாதி, மதம், காசு பணம் பார்க்காம ஒருத்தர ஒருத்தர் புடிச்சி வாழ்க்கைய ஏத்துக்கணுங்கறதுதான் எங்க கொள்கை. இதுல என்ன தப்பு? நீங்க உங்க கொள்கப்படிதான் பண்ணுவேன்னா உங்க சாதிக்காரன் எவனும் நம்ப சாதிதானேன்னு காசு பவுனு பாக்காம கட்டிப்பானா?"

"அது வேற; இது வேற தம்பி ஒண்ணும் இல்லாம யார்தான் கட்டிப்பாங்க. உங்க கட்சில வேணாம் செய்வீங்க. ஊர்ல நடக்குமா?"

"அதான, இப்படி சொன்னா ஏதோ தாழ்ந்த சாதிக்காரன் அதான் காசு வாங்காம கல்யாணம் பண்றான்பீங்க; உங்கள மாதிரி ஒரே சாதியா இருந்தாலும் சும்மா ஜாதகத்த வாங்கி புதன் எட்டு, ஏழுல குருன்னு பாவ்லா காட்டிட்டு, பவுனை வெட்டுங்குற உங்க கொள்கைதான் நடக்கணுங்குறீங்க? அப்படி நடத்த வசதியிருந்தா நடத்துங்க."



"இப்படித்தான் பேசுறான் விதண்டாவாதமா. சொத்துபத்து இல்லேன்னு இவன் சொல்றத கேட்டு சாதி கெட்டு கல்யாணம் பண்றதுக்கு இவ கடசி வரைக்கும் கம்மனாட்டியாவே இருக்கட்டும் போங்க; அவ தலையெழுத்துபடி நடக்கட்டும்" உண்மையான சொத்தில் கை வைத்தது போல வெறியாகவந்தது சின்னம்மாவின் வார்த்தை.

"அட! என்ன தம்பி நீங்க, ஆகாத கதைய பேசிட்டு யாரு இந்த காலத்துல காச வச்சிகிட்டு கல்யாணம் பண்றாங்க. எங்காவது கடன, உடன வாங்கி பொறுப்பா கல்யாணத்த முடிப்பீங்கன்னு சொன்னா, நீங்க கொள்க அது இதுன்னுட்டு... உலகத்துல நடக்குற கதையா பேசுங்க."

"நீங்க மட்டும் இப்ப கட்சி கட்டி பேசுலயா? உங்க வீணா போன கொள்கைய மட்டும் விளக்கமா பேசலாங்குறீங்க?"

"அய்யய்யோ! உங்ககிட்ட வாதம் பண்ண முடியாது. நான் ஊர் ஏத்துக்குமாண்ணுதான் கேட்டேன்." பானுவும், பூங்கோதையும் ஒரு முடிவுக்கு வந்தவர்கள் போல் எழுந்து கொண்டனர்.

"எதுங்க ஊர், உலகம்? அக்கம் பக்கத்துல இருக்குற நீங்கதான் எங்க சின்னம்மாவுக்கு உலகம். எங்க, சாதி மாறி கல்யாணம் பண்ணா, நீங்கெல்லா-



படிப்பகம்

www.padippakam.com

தப்பா பேசுவீங்கன்னுதான் அவங்க பயப்படறாங்க. நீங்களே காரணமா இருந்துட்டு சும்மா உலகத்து மேல பழிய போடாதீங்க. இவ்வளவு தூரம் என்னா கொள்கைன்னு எங்கிட்ட பேசுறீங்களே, நீங்க எல்லாம் சாதி, வர மொற பாத்து வர்ற மாப்பிள்ளை வீட்டுக்காரங்ககிட்ட போயி ஏன் பவுனு, வரதட்சிணைன்னு கேக்குறீங்கன்னு உங்க சாதிக்காரங்க கிட்டவாவது எதுத்து கேக்க இடமிருக்கா? உங்கள மாதிரி பக்கத்து வீட்டு உலகமெல்லாம் அந்தமாதிரி என்னைக்காவது பொறுப்பா ஒத்தாசை பண்ணா உலகம் தானா மாறும்''

உயிர் மூச்சைப் பிடித்தது போல் பானுவுக்கு திமிறிக் கொண்டு வார்த்தை வந்தது.

''அய்யய்யோ! பூங்கோதை பாத்தியா கடசில நாம கெடுக்குறோம்னு பேர் வருது. ஏதோ பக்கத்து வீடாச்சே வயசுக்கு வந்த புள்ள வாழாம இருக்குதேன்னு புத்தி சொன்னா? நல்லா சொன்னீங்க போங்க! எங்களுக்கு தேவையா இது, காரியத்துக்கு கையாலாகலேன்னாலும் வீரியத்த பாருன்னு சும்மாவா சொன்னாங்க. இந்த பேச்செல்லாம் நமக்கு புடிக்காது ஆமாம்...''

''நீ ஏன் கோவிச்சுக்குற பானு, உக்காரு அவனுக்கு பேச தெரியாது. அதுக்குத்தான் அவன்கிட்ட பேச்சு கொடுக்க வேணாம்னேன். கேட்டீங்களா? நீ வருத்தப்படாத பூங்கோதை'' சின்னம்மாவின் பரிவு என்னை கையாலாகாதவன் என்றதை ஆமோதித்தது போல இருந்தது.

''சாந்தி அவங்க பேச்சை கேட்டு உன் வாழ்க்கையை கெடுத்துக்காத. நீ சரின்னு சொல்லு மத்தத நான் பாத்துக்குறேன்'' நான் உறுதியாகக் கேட்டேன்.

''நீங்க பேசாம இருந்தா எனக்கு அதுவே போதுண்ணே, கல்யாணமே வேண்டாம். இனிமே இந்த மாதிரி நீங்களா மாப்பிள்ளை பாத்துட்டு வந்து சண்டை பிடிக்காம இருந்தாலே போதும்'' பதில் தீர்மானமாய் வந்தது.

கோரமான அமைதியும், பக்கத்து வீட்டுக்காரர்களின் புகைச்சலும் அந்த இடத்தை சண்டை முடிந்த போர்க்களம் போல ஆக்கியது. தங்களது எல்லைக் கோட்டை நெருங்க முடியாத படிக்கு விரட்டி விடப்பட்ட எதிரிப் படையைக் கண்காணிப்பது போல ஆளாளுக்கு தனித்துவிடப்பட்ட என்னை நோட்டமிட்ட வாறு ரகசிய பேச்சுக்களை துவங்கினர்.

●

## 'மார்க்சிஸ்ட்களின்' அறைகூவல்:
# சாப்பிட வாங்க!

''குடும்ப ஆரோக்கியத்தை லேசா எடுத்துக்கலாமா'' என்று தளுக்காய் பேசி ''ஹார்லிக்ஸ் சாப்பிடுங்க'' என்று ஆள்பிடிக்கும் விளம்பரத்தை பார்த்திருப்பீர்கள். அதேபோல ''நோயற்ற வாழ்வுக்கு சீரான உணவு'' என்று முதல் பக்கத்தில் ஒரு அரைபக்கம் எழுதிவிட்டு முழுக்க முழுக்க ஓட்டல்களின் விளம்பரங்களைப் போட்டு 'உணவுச் சிறப்பிதழ்' ஒன்றை 'மார்க்சிஸ்டுகளின்' தீக்கதிர் நாளிதழ் (30.3.2000) வெளியிட்டுள்ளது.

ஒரு பொதுவான கண்ணோட்டத்தில் கூட உணவுச் சிறப்பிதழ் என்றால் மக்களின் பல்வேறு வகையான உணவு முறைகள் அவர்களுடைய உணவுக்கும் வாழ் நிலைக்கும் உள்ள தொடர்புகள், உணவு பழக்கத்தில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றங்கள், நல்லதா, கெட்டதா என அறியத்தரும் பகுதிகள் என்று அமைந்திருக்கும்.

ஆனால் தீக்கதிரின் உணவுச் சிறப்பிதழ் நமக்கு அறியத் தருவதோ, கடலூர் அகர்வால் பேக்கரியின் 'தனி முத்திரை', ஜாய்ஸ் மசாலா அதிபர் கஷ்டப்பட்டு வளர்ந்த விதம், ஓட்டல் வைகை நிர்வாக இயக்குநரின் சுய புராணம். இப்படி எடுத்துக் கொண்ட 'சிறப்பிலேயே' தில்லுமுல்லு செய்யும் தீக்கதிரின் இந்த முதல் மோசடியை ஒரு உப்புப் போறாத விசயமாக ஓரங்கட்டிவிட்டு உணவுச் சிறப்பிதழுக்கான விசயத்துகள் நுழைவோம்.

மக்களிடம் பரப்பப்பட்டுள்ள நுகர்வுக் கலாச்சாரத்தின் அளவுக்கும் தன்மைக்கும் ஏற்ப சிறப்பிதழ்கள் பெருக்கெடுக்கின்றன. 'இன்றைய ஸ்பெசல்' என்று ஓட்டல் வாசலில் எழுதி வைப்பது போல அன்றாடம் நாளேடுகளில் முதலாளிகள் தமது பொருளை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதும் இதற்கென்றே செய்திப் பத்திரிகைகள் தொடர்ச்சியாகவே பக்கங்கள் ஒதுக்குவதையும் பார்த்திருப்பீர்கள். இப்படி முதலாளித்துவத்தின் வழிமுறை எதுவோ அதைச் சட்டமன்ற அரசியலில் இருந்து சாப்பாட்டு அரசியல் வரை காப்பியடிப்பதையே பிறவி நோக்கமாகக் கொண்டுள்ள 'மார்க்சிஸ்டு களின்' பச்சையான முதலாளித்துவ வர்க்கச் சேவைதான் முனியாண்டி விலாஸ் ஓட்டல் வழியாக வெந்து வெளியே வந்திருக்கிறது.

ஆறுபக்க உணவுச் சிறப்பிதழில் 90 சதவீதம் மசாலா, துவரம் பருப்பு முதல் நெய், பேக்கரி விளம்பரங்களே இடம் பெற்றுள்ளன. கள்ள ஓட்டுப் போட வருபவனைக் கட்சி உறுப்பினராக்கிவிடும் அரசியல் சாமர்த்தியத்தை அடுப்பங்கரை வரைக் கொண்டு சென்று விட்டார்கள் போலும். அந்த அளவுக்கு விளம்பரம் கொடுத்த கனவான்கள் எல்லாம் தாங்கள் கடலூரில் கல்லாப் பெட்டி திறந்ததே மக்கள் சேவைக்காகத்தான் என்பது போல அளந்து கொட்டியிருக்கிறார்கள். உணவு தயாரிப்பு என்ற ஒரு பிரம்மாண்டமான தொழில் களத்தில் முக்கியமான நபர்களான தொழிலாளிகளின் கருத்தோ அனுபவமோ இல்லாமல் வெறும் உரிமையாளர்களின் நேர் காணலை மட்டும் போட்டு ஜாய்ஸ் மசாலா அதிபர் சுயபுராண கட்டுரைக்கு 'சுயமரியாதை கொள் தோழா' என்று தலைப்பு வேறு. இப்படி சாப்பாட்டு விசயத்தில் கூடச் சுயமாக தன் வர்க்கக் கண்ணோட்டத்தில் சிந்திக்க இயலாமல், அதிலும் முதலாளித்துவ வழிமுறைகளில் போய் முற்போக்கு மசாலா, முற்போக்கு பிரியாணி என்று இட்டுக்கட்டுகிறார்கள், மார்க்சிஸ்டுகள்.

உணவு, தரம், சுவை என்பவைப் பற்றியெல்லாம் கம்யூனிஸ்ட்டுகள் பேசக்கூடாது என்பதல்ல நம் வாதம். அனைவருக்கும் உணவு என்பதே போராட்டமான ஒரு நாட்டில், அடிப்படை வர்க்கத்தின் பார்வையிலிருந்தும் தேவையிலிருந்தும் உணவு பற்றிய நம் கண்ணோட்டத்தை தெரிவிக்க வேண்டும் என்பதே சரி. ஆனால் 'இரட்டை இலையில்' விருந்து சாப்பிடப் போயிருக்கும் மார்க்சிஸ்டுகளுக்கோ, அல்லது அவர்களின் உணவுச் சிறப்பிதழின் வகை மாதிரிகளுக்கு ஏற்கனவே வாடிக்கையாளர்களாகிவிட்ட வங்கி ஊழியர் சங்கம், எல்.ஐ.சி. ஊழியர் சங்கம் போன்ற சாப்பாட்டு ராமன்களுக்கோ இந்த முதலாளித்துவ 'காப்பியடிக்கும்' வேலை உறுத்துவதில்லை.

ஆனால் வேலை நேரத்தின் இடைவேளையில் கையேந்தி பவன்களில் அவசர அவசரமாக இரையெடுக்கும் அடிப்படைத் தொழிலாளி வர்க்கத்தின் பிரச்சனையோ வேறாக இருக்கிறது. சாப்பிட நேரமும், போதிய உணவும் கிடைத்தாலே அவர்களுக்குச் சிறப்பு. உணவுச் சிறப்பிதழ் தயாரிக்கும் மடப்பள்ளி 'மார்க்சிஸ்டுகளுக்கு' சிறப்பு என்பது உணவில் இல்லை, இந்த நாட்டின் உயிர்ச் சத்தாக விளங்கக்கூடிய உழைப்பாளிகள் அனைவருக்கும் அதுபோய்ச் சேருவதில் தான் சிறப்பே அடங்கியிருக்கிறது என்பதை உரைக்கும்படி சொல்ல வேண்டியுள்ளது.

முதலாளிகளுக்கு எதிராக ஒரு பக்கம் 'உண்ணாவிரத'ப் போராட்டம் நடத்திக் கொண்டே மறுபக்கம் முதலாளிகளுக்காக உணவுச் சிறப்பிதழ் தயாரிக்கும் மார்க்சிஸ்டுகளின் கைபக்குவம் யாருக்கு வரும்?

● சுடர்விழி


படிப்பகம்

www.padippakam.com

2-ம் பக்கத் தொடர்ச்சி

போல, தாழ்த்தப்பட்டவர்கள் எந்தக் கோயிலிலும் நுழைய இயலாமல் தள்ளப்பட்டதையும், ஈழவர்களும் கூட அவர்களைக் கோயிலிலிருந்து பிரித்துத் தள்ளி வைத்ததையும் அவர் எதிர்த்துப் போராடினார். வைக்கம் கோயில் நுழைவுப் போராட்டத்தில் தமிழகத்திலிருந்து பெரியார் சென்று கலந்து கொண்டு சிறை சென்றார். வைக்கம் போல அன்று கேரளாவெங்கும் போராட்டங்கள் நடந்தன.

நாராயணனின் சிந்தனை வளர்ந்தது. ஈழவர் கோயில்கள் மட்டுமல்ல, பள்ளிவாசல் - கிறித்துவ ஆலயம் திறந்து வைக்க அழைத்தாலும் போவோம் என்றார். சிறிது காலத்துக்குப் பிறகு, 'இந்தச் சாமி அந்தச் சாமி என்றால்தானே பேதம். விளக்கை வைத்து வழிபட்டால் என்ன?' என்று கேட்க மட்டுமல்ல, செயல்படுத்தவும் செய்தார். சாதி ஒழிப்புப் போராட்டங்களில் சம்பந்தப்பட்ட பிறகு, ஈழவர்களுக்கான சங்கத்துக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்று வெளிப்படையாக அறிக்கை விட்டார். அக்கால கட்டங்களில் கடவுள் பற்றிய எல்லாக் கேள்விகளையும் வெட்ட வெளிச்சமாக விவாதித்தார். "இந்த வழிபாடுகள் எல்லாம் ஒருநாள் வேண்டாம் என்று வரலாம் அல்லவா?" என்று அவர் கேட்டார். "அவ்வாறு வர வழியில்லை" என்று அவரது சீடர்கள் சிலர் சொன்னார்கள். "அப்படி வந்தால் என்ன செய்வது? கட்டிடங்களை மக்களுடைய தேவைகளுக்குப் பயன்படுத்த வேண்டும்" என்றார் நாராயணன். மக்கள் நலனே பெரியது என்ற முடிவுக்கு அவர் வந்தார்.

மக்களின் நலனை முன்னிறுத்திச் சிந்திக்கும், செயல்படும் எவரும் இயற்கையாகவே பொதுவுடமைச் சிந்தனை நோக்கித்தான் வரவேண்டும். நாராயணன், பொதுநல ஊழியராகப் போராடத் தொடங்கி 'நாராயண குரு' என்று மக்களால் அழைக்கப்பட்ட பிறகு கூட தனது சிந்தனையை மக்கள்நலன் என்ற தட்டில் வைத்து எடைபோட மறக்கவில்லை. ஈழவச் சாதி அடிமைத் தனத்தை எதிர்த்துத் தொடங்கியவர், 'சாதிகள் அற்ற, மதங்கள் அற்ற ஒரே மனித குலம்' என்று சிந்திப்பதில் சென்று நின்றார். சீர்திருத்த வாதிக்கே உரிய வரம்பு ஒன்றைத் தவிர மற்ற எந்த வரம்புக்குள்ளும் நாராயண குரு சிக்கவில்லை. எடுத்துக் காட்டாக, சாதி அடிமைத்தன எதிர்ப்பு என்று தொடங்கும் பலர் 'சாதி சமத்துவம்' என்ற வரம்புக்குள் சிக்குகிறார்கள். 'சாதி ஒழிப்பு' என்ற கண்ணோட்டத்துக்கு அவர்கள் செல்வதில்லை. நாராயண குரு வருணாசிரம எதிர்ப்பு, சாதி ஒழிப்பு என்று வரையறுத்துத் தெளிவாக இருந்தார்.

இதன் காரணமாக, சாதிகள் இருக்கும், அது இயற்கை என்று வாதிட்ட காந்தியை நாராயண குரு மறுத்தார்; சங்கராச்சாரியை வருணாசிரமவாதி என்று சாடினார்; சாதி ரீதியான பரம்பரைத் தொழில் போட்டிகளைக் குறைக்கும், சமூக அமைதிக்கு வழிவகுக்கும் என்று வாதாடியவர்களுக்கு எதிராக - "மகன் தந்தையின் தொழிலை விரும்பி ஏற்பது வேறு. அவனே வேறு தொழிலையும் விரும்பலாமே. எல்லோரும் எல்லாம் படிக்க, பயிற்சி செய்ய தடை இருக்கக் கூடாது" என்று ஜனநாயகத்துக்காக வாதாடினார்.

ஜனநாயகம் என்ற எல்லையை எட்ட வெறும் பேச்சுக்களோடு நிற்காத நாராயண குரு பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான விடுதிகளை நடத்தி அதன்மூலம் தன் எண்ணங்களையும் பயிற்றுவித்தார்.

**நூல் : இவர்தான் நாராயண குரு**
**ஆசிரியர் : ஜோசப் இடமருகு**
**மலையாளத்திலிருந்து தமிழில் த. அமலா.**
**வெளியீடு :**
***நாளந்தா பதிப்பகம்***
***1/108, ஈசுவரன் கோயில் தெரு, மேல்படப்பை, சென்னை - 301.***
**கிடைக்குமிடம் :**
***கீழைக்காற்று,***
***10 அவுலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை -2.***
***போன்: 8412367***

அவரது விமரிசனங்கள் கூர்மையானவை. ஒரு சொல்லில் கூட சமரசத்தை விரும்பவில்லை. ஒரு முறை சிவகிரியில் ஆசிரம வாசிகளாக இருந்த சிறுவர்களை திவான் வாட்ஸ் என்பவருக்கு ஏ.கே.தாஸ் என்பவர் அறிமுகப் படுத்தியபோது "இவர்கள் பறையர்களாக இருந்தனர். இவர்களை ஆசிரமத்தில் சேர்த்து மனிதர்களாக்கியிருக்கின்றோம்" என்று சொன்னார். உடனே நாராயண குரு அவரைத் திருத்தினார்: "அவர்கள் முதலிலேயே மனிதர்கள்தான். ஆனால் அந்த விசயத்தை பிறர் விட்டுக் கொடுக்காமல் ஆதிக்கம் செலுத்தி வந்திருக்கிறார்கள்."

சாதி மட்டுமல்ல; மதம் பற்றிய விஷயத்திலும் அவர் தெளிவாக இருந்தார். இந்துமதம் 'ஒரே' மதம் இல்லை என்று அவர் சொல்லி வந்தார். 'இந்துமதம்' சாதி அடுக்குகளே என்பதை அவர் உணர்ந்திருந்தார். பல மதங்களைச் சேர்த்து அதை இந்துமதம் என்று அழைக்கலாம் என்றால், அதோடு உலகில் உள்ள கிறித்தவம், இசுலாம் என்று எல்லா மதங்களையும் சேர்த்து ஒரே மதம் என்று சொல்லக் கூடாதா என்று கேட்டார். ஒருமுறை, அரசு ஆவணங்களில் கட்டாயமாக ஒருவர் மதத்தைக் குறிப்பிட வேண்டுமென்று சொல்லப்பட்டபோது அதை விமரிசித்து அவர் சொன்னார்: "மதத்தை விருப்பம் போலச் சொல்லவும், ஒன்றும் இல்லை என்று சொல்லவும் சுதந்திரம் வேண்டும்."

மனிதர்கள் சாதிகள் ஒழித்து, ஜனநாயகச் சுதந்திரத்தோடு வாழ வேண்டும் என்றார் நாராயண குரு. மூட நம்பிக்கைகள், வெளிச்சப்பாடு (சாமியாடி), சடங்குகள் போன்ற சமூகக் கசடுகளை நட்ட நடு வீதியிலேயே எதிர்த்துச் சண்டை போடுவார் நாராயண குரு. இறந்த பிறகு உடலை எரிப்பதா, புதைப்பதா, எது நல்லது என்று ஒருவர் கேட்டார். அதற்கு அவர் "அதைச் செக்கில் இட்டு ஆட்டி தென்னைக்கு எருவாக வைப்பது நல்லது" என்றார். சீடர் பதறிப் போனார். "என்ன, வலிக்குமா?" என்று கேட்டார் நாராயண குரு; மரணத்திற்குப் பின் சில மணி நேரத்திற்குள் அழுகிப் போகும் பிணத்தை வைத்துக் கொண்டு சடங்குகள் செய்வதை இதைக் காட்டிலும் கடுமையாக எதிர்க்க முடியுமா?

செத்த பிறகு மனிதனுக்கு ஒன்றுமில்லை; சிவலோக பதவிகள், மறு உலகம் இல்லை. வாழும் வரை சாதிகள் கூடாது; மதபேதம் கூடாது; மனிதனை மனிதன் அடக்கி ஒடுக்குதல் கூடாது. இந்த எல்லை வரை நாராயண குரு நின்று கொண்டார். ஆனால் இதன் காரணமாகவே நாம் அவரது சமூகப் பங்கைக் குறைத்து மதிப்பிட முடியாது. நூலாசிரியர் ஜோசப் இடமருகு இந்த எல்லைக்குள்ளாகவே அவர் கடவுள் மறுப்பாளர் என்ற நோக்கிலிருந்து அவரது வரலாற்றை அணுகி உள்ளார். மக்கள் நலன் என்ற கோணத்திலிருந்து, பகுத்தறிவை நோக்கிய நாராயண குருவின் வளர்ச்சியே கூட தொடர்ச்சியான ஜனநாயகத்தன்மை வாய்ந்ததாக உள்ளது. அந்த சமூக அரசியல் கண்ணோட்டத்திலிருந்து, இந்நூலை அறிமுகமாக வைத்துக் கொண்டு, மேலும் அவரது வாழ்க்கையையும் போராட்டத்தையும் பார்த்தோமானால் அதிலிருந்து மேலும் அறிந்து கொள்ளக் கூடிய அனுபவச் சுரங்கம் கிடைக்கக் கூடும்.

● குப்பண்ணன்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3 செங்குந்தபுரம் நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.

படிப்பகம்


www.padippakam.com

PUTHIYA KALACHARAM
(TAMIL MONTHLY)

REGISTERED WITH THE REGISTRAR OF NEW PAPER
FOR INDIA UNDER NO. 42647/87

Reg. No. TN/Chief PMG-303 / 2000

## உயிர்த்தெழு!



மௌனத்தை உடை.
மர உதடு திற.
பேசு!

பூமியின் புன்னகையை
மீட்டுத் தரும்
வேட்கையோடு

முள்முளைத்த மரபுகளை
முறித்தெறியும் வேகத்தோடு
பேசு!

கலைகளின்
ஒப்பனைகளைக் கழற்றி
நிகழ்வின் காயங்களை
வலியின் கனத்தோடு
விவரி!

பூவெறிந்து
பாவெறிந்து
கண்ணீர் எறிந்து

கற்களைக் கரைக்கும்
முயற்சியைத் துற.

அர்த்தங்களின்
அடர்த்தி குறையாத
ஆவேசத்தோடு
வீசு சொற்களை!

வேர்வரை விழட்டும்
மடமைகள்.

இயல்களைத்
தெரிந்து கொள்.
இசங்களைப்
புரிந்து கொள்.

பேசு!

சீழ்பிடித்த
சிகரங்களின் உள்ளழுக்கை
உண்மை விரல்களால்
தொடு.

முகவரிகளின்
அகவரிகளை ஆய்வு செய்

உன்னை
இயல்பாய் வெளிப்படுத்து.

பேசு!

ஞானவெறி கொள்!
ஞாலவெளி பற.

— தீபன்

◆◇◆

## பரவசம்!

உயிரிலிருந்து
உள்ளெழும்புகிறது நேசம்
பல சமயங்களில்.

சொற்கள் கடந்த கவிதையாய்
சூழ்ந்து நிற்கிறது பரவசம்.

உண்மைகளை ஏந்தி வாழ்வதற்கும்,
பதாகையோடு
இணைந்து பயணிப்பதற்கும்,
வானில் எழும் பறவையாய்
உலகையே உள்வாங்கி

மௌனமாய் உவகை கொள்வதற்கும்
பெருமிதமாய் இருக்கிறது.

வெல்வோம் என்ற வெளிச்சம் படர,
வாழ்க்கை மொத்தமும்
ஒளிர்கின்ற தருணங்களில்....
நம்பிக்கையோடு நிமிர்ந்து
யோசிக்கையில்,
உடனடியாய் வேண்டும்
போலிருக்கும்

புரட்சி

— அரசு

படிப்பகம்